
# பெண்மணி

ஜூலை 2002
ரூ.10/-





சீரடி சாய்பாபாவின் அற்புதங்கள்

ஆர்.மணிமாலா

உனக்கெனவா நான் பிறந்தேன்?

(முழு நாவல்)

## அத்தியாயம்-1

கன்னியாகுமரி- ஹவுரா எக்ஸ்பிரஸ் பேய் வேகத்தில் பறந்துக் கொண்டிருந்தது.

ஜன்னலோரம் அமர்ந்திருந்த முகேஷ்... ரயிலின் தாலாட்டில் மற்றவர்களைப் போல் அவனும் லேசாக ஆடிக்கொண்டிருந்தான்.

ரயிலின் வேகத்தில் வெளியில் தென்படும் மனிதர்களும், மரங்களும், கட்டிடங்களும் பின்பக்கமாய் போய்க் கொண்டிருந்த மேஜிக் வித்தையை ரசிக்கும் மூடில் அவன் இல்லை.

அந்த கம்பார்ட்மெண்ட் இரைச்சலாய் இருந்தது. காரணம் ஒரு திருமண கோஷ்டி அதில் பயணம் செய்துக் கொண்டிருந்தது.

ஏழெட்டு பட்டுப்புடவையணிந்த பெண்களும், தோளில் துண்டுப்போட்டு வெற்றிலையை குதப்பிக் கொண்டிருந்த இந்து ஆண்களும்.. கல்யாணத்தில் நடந்த கூத்திலிருந்து, பசுமாட்டு கண்ணில் அரசியல் தலைவரின் உருவம் தெரியும் சங்கதி வரை மற்றவர்களைப் பற்றி கவலைப்படாமல் சப்தமாய்



# உனக்கெனவா நான் பிறந்தேன்?



## ஆர். மணிமாலா

பேசிக் கொண்டு வந்தனர்.

"பங்கஜம் போட்டிருந்த ரெட்டை வடசங்கிலியைப் பாத்தியா? எப்படியும் பத்து பவுன் இருக்குமில்லே?"

"அட... யாரடி இவ ஒருத்தி... அசலுக்கும், நகலுக்கும் வித்தியாசம் தெரியாம? அத்தனையும் கவரிங் நகையாக்கும்!"

"பார்த்தா அப்படித் தெரியலியே!"

"எப்படித் தெரியும்? ஒவ்வொரு கல்யாணத்துக்கும் பாலிஷ் போட்டு பளபளன்னு போட்டுக்கிட்டு வந்திடுவா."

"நம்ப முடியலியே... நல்லா வசதியாதானே இருந்தா? அவ புருஷன் சவுதியிலே வேலை செஞ்சி ஆயிரம், ஆயிரமா அனுப்பிட்டிருந்தானே?"

"அனுப்பிக்கிட்டிருந்தான் ஆனா, இப்ப இல்லே! எல்லார்கிட்டேயும் தன் புருஷன் அங்கே ஏதோ மேனேஜர் வேலை செய்துக்கிட்டிருக்கார்னு சொல்லிக்கிட்டிருக்கா. ஆனா, உண்மை அதுவல்ல. அங்கே ஒரு திவான் வீட்டிலே கார் டிரைவரா வேலை பார்க்கிறான். இப்ப அந்த வேலையும் போச்சு!"

''ஏன்?'' பெண்கள் ஆர்வமாய் வாய் பிளக்க.. கதையை ஓட்டிக்கொண்டிருந்த ஜெகதா என்னும் குண்டு பெண்மணி தொண்டையை செருமிக் கொண்டாள்.

''என்ன பண்ணானோ, எதுப் பண்ணானோ? ஜெயில்ல கம்பி எண்ணிக்கிட்டிருக்கான்.''

''நிஜமாவா?''

''பின்னே என்ன பொய்யா?''

''இதெல்லாம் உனக்கெப்படித் தெரியும்?''

''அப்படிக்கேளு! என் நாத்தனார் பையன் அஞ்சு வருஷமா சவுதியிலே இல்லே இருக்கிறான். சொந்தமா டிரைவிங் ஸ்கூல் வச்சு நடத்திட்டிருக்கான். அவன் மூலமாதான் விஷயம் தெரிஞ்சது. நீயே கவனிச்சுப் பாரு! காலேஜிலே படிச்சுக்கிட்டிருந்த பொண்ணோட படிப்பை பாதியிலே நிறுத்திட்டு எதுக்காக வேலைக்கு அனுப்பிக்கிட்டிருக்கா?''

''பங்கஜம் பாவம்!''

''என்ன பாவம்? புருஷங்காரன் சவுதியிலே வேலை பார்க்கிறான்னு அவ கொஞ்சமாகவா ஆட்டம் போட்டா?''

பெண்களுக்கு சளைக்காமல் ஆண்களும் வெளிவட்டார விஷயங்கள் பற்றி பேசிக் கொண்டு வர...

இதற்கும் தங்களுக்கும் சம்பந்தமே இல்லாததுப் போல்... ஒருவரையொருவர் கண்களால் விழுங்கியபடி வேறு உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தனர் கல்யாண ஜோடி!

கூரைப்புடவையைக் கூட மாற்றாமல் அப்படியே ரயிலேறியிருந்த மணமகளின் முகத்திலும், உடையிலும் கிராமியத்தனம் பளிச்சிட்டது. சற்றே மெலிந்த தேகமும், கறுப்பு நிறமென்றாலும் களையாய் இருந்த மணமகன் யாரும் பார்க்கவில்லை என்கிற தைரியத்தில் இடது கரத்தை அவள் இடுப்பில் மேய விட்டிருந்தான்.

கல்யாணப் பெண் நெளிந்தாலும், அந்த இன்ப அவஸ்தையை ரசித்தபடி கண் செருகினாள்.

முகேஷின் நேர் எதிரே கல்யாண ஜோடி! கண்டும் காணாமல் பார்வையை வெளியே செலுத்தினாலும்... அந்த கும்பலை பார்க்க பார்க்க பற்றிக் கொண்டு வந்தது.

இரண்டு உடல்களை சேர்த்து வைக்க எதற்கு இவ்வளவு ஆர்ப்பாட்டமும், ஆடம்பரமும்! ஆயிரக்கணக்கில், லட்சக்கணக்கில் செலவு செய்து சமூக திருப்தந்தத்துக்காக சடங்கு என்கிற பெயரி கட்டப்படும் தாலிக்கு என்ன மரியா தருகிறார்கள்?

ஒரு பெண்ணிற்கு தாலி கட் விட்டோமே என்று ஆண், வேறு பெண்ணை தேடி ஓடாமலா இருக்கிறான்? ஆண்களுக் நாங்களும் சளைத்தவர்கள் அல்ல... என் பெண்கள் தான் கள்ளப்புருஷனைத் தேடி கொள்ளவில்லையா? எல்லாம் வேஷம்! மன நிறைய விதவிதமான, வண்ண வண் ஆசைகளை வைத்துக் கொண்டு பண்பாடு கட்டுப்பாடு என்று வாய்க்கிழிய பேசு நடிகர்கள் தான் இங்கே அதிகம்!

குழம்பு கொதிப்பதுப் போல் அவ மனகம் கொதிக்க ஆரம்பித்தது.

அதற்கு மேல் அந்த ஜோடியைப் பார்க் பிடிக்காமல் கண்களை மூடிக் கொண்டான்.

மணி 11-20.

மதுரை ஸ்டேஷனில் ரயில் நின்றது.

அந்த கம்பார்ட்மெண்டிலிருந்து ஓரிருவ இறங்கினர். தயாராய் காத்திருந்த சிறுவர்களும் பெண்களும் சாப்பாட்டுப் பொட்டலங்களுடன் சுற்றி முற்றுகையிட்டனர்.

''தயிர் சாதம், தக்காளி சாதம், புளியோதரை, வடை, இட்லி'' என்று விற்க ஆரம்பிக்க... திருமண கோஷ்டி அவர்களிடம் வேண்டியதை வாங்க ஆரம்பித்தனர்.

முகேஷிற்கு பசிக்கவில்லை.

மறுபடி கண்களை மூடிக் கொண்டான்.

சில நிமிடங்களுக்குப் பிறகு ரயில் புறப்பட்டது. மூடிய கண்களுக்குள் கடந்து போன நாட்கள் ஏற்படுத்திய காயம் நெஞ்சை தீயாய் எரித்தது.

'மற... எல்லாத்தையும் மற...! உன் வேதனைகளை அனுபவமாக எடுத்துக்கொள்! பட்டைத் தீட்டிக் கொள்! உன்னை உதாசீனப்படுத்தி தூக்கி எறிந்தவர்களின் முன் உயர்ந்து காட்டு. உன்னால் முடியும்!' உள்ளிருந்து குரல் ஒன்று அவனை ஆசுவாசப்படுத்தி, தட்டிக் கொடுத்தது.

கண்களைத் திறந்தான்.

ஜன்னலுக்கு வெளியே பசுமையான இயற்கை காட்சிகள் வேகம் பிடித்து ஓடின.

'அருமையான லொக்கேஷன்! இன்னும் சினிமாக்காரர்களின் கண்களில் படவில்லையா?'

அடர்ந்த மரங்களின் பசுமைக்கிடையே சூரியனின் . மஞ்சள் கதிர்கள் வெகு பிரயத்தனப்பட்டு கொஞ்சமாய்



எட்டிப்பார்த்துக் கொண்டிருந்த வனப்பிரதேசம்.

மனக இளைப்பாறுதலுக்கு ஏற்ற இடம்! சினிமாவில் டூயட் சாங் எடுக்க தோதான இடம்.

'என்றாவது ஒரு நாள் நான் படம் இயக்கும் போது கண்டிப்பாய் இந்த இடத்தில் டூயட் சாங் எடுப்பேன்.' முகேஷ் தீர்மானித்துக் கொண்டான்.

அந்த கம்பார்ட்மெண்டில் நடுத்தர வயது பெண்மணியின் மடியிலிருந்த ஒரு வயது பெண் குழந்தை வீறிட்டு அழ ஆரம்பிக்க...

அந்த சப்தத்தில் தவம் கலைந்தவனாய்.. சற்றே எரிச்சலோடு திரும்பினான்.

அப்போது தான் அவன் கண்களில் விழுந்தாள். ஒரு ஓரமாய் ஒடுங்கி அமர்ந்திருந்தாள் இளம் பெண்ணொருத்தி!

மதுரையில் ஏறியிருப்பாள் போலும்.

ஒருவித படபடப்புடன், இருகைகளையும் கோர்ப்பதும், பிரிப்பதுமாய்...

முகேஷ் அவளிடமிருந்து பார்வையை விலக்க முயன்றாலும் தன்னிச்சையாய் மறுபடி பார்க்கத் தூண்டியது அவள் முகம்.

'என்ன ஒரு அழகான கண்கள்? என்ன துறுதுறுப்பு அதில்? முனுக்கென்று அமைந்திருந்த மூக்கு. அடிக்கடி நாவால் தடவிக் கொண்டிருந்ததால், இயற்கையாய் சிவந்திருந்த உதடுகள் ஈரத்தில் பளபளத்து வசீகரித்தது. அடர்த்தியான கருள் கூந்தலை அவசரத்தில் பேண்டில் அடக்கியிருந்தாலும், கலைந்திருந்த பிசிர் முடிகள் அவள் முகத்திற்கு ஒரு வித கவர்ச்சியைத் தந்தன.

ஏற்கனவே பயணம் செய்து கொண்டிருந்தவர்கள் போக, அந்தப் பெண்ணும், இரண்டு வயதான முதியோர்களும்தான் ஏறியிருந்தனர்.

கவனித்துப் பார்க்கையில் இரண்டு முதியோர்களுக்கும் இவளுக்கும் சம்பந்தமில்லைப் போலிருந்தது.

'அப்படியானால், தனியாக தான் வந்திருக்கிறாளா?' ஏனோ, முகேஷின் கவனம் அவள் மீதேயிருந்தது. ஏனென்று அவனுக்கே புரியவில்லை.

அவளும் ஒருமுறை அவனைப் பார்த்தாள். இயல்பாய் பார்வையை விலக்கிக் கொண்டாள்.

நேரம் கடந்தது.

ரயில் திண்டுக்கல் ஸ்டேஷனை நோக்கி விரைந்தது.

''இந்த பெட்டியை கொஞ்சம் பார்த்துக்குங்கம்மா?''

பக்கத்திலிருந்த பெண்மணியிடம் தயவாய் கூறிவிட்டு டாய்லெட் பக்கமாய் நகர்ந்தாள் அவள்.

'குரல் கூட இனிமையாகத்தான் இருக்கிறது. சினிமாவில் நுழைந்தால்... இவளுக்கு ஒரு நல்ல எதிர்காலம் இருக்கிறது' என்று நினைத்துக் கொண்டான் முகேஷ்.

## 2

ரயில் திண்டுக்கல்லை விட்டு புறப்பட்டது. மேலும் ஓரிரு நிமிடங்கள் சென்ற பிறகு வந்தமர்ந்தாள் அவள்.

பக்கத்திலிருந்த பெண்மணி சாப்பாடு பொட்டலத்தை பிரித்து உடன் வந்த மகளுக்கும், பேத்திக்கும் கொடுத்து விட்டு, தானும் சாப்பிட முற்பட்டவள், களைத்துப் போய் அமர்ந்திருந்த அவளைப் பார்த்தாள்.

''ஏந்தாயி...''

''ம்...'' திரும்பி பார்த்தாள்.

''சாப்பிடறியா?''

''இ... இல்லே வேண்டாம்...!''

''கூச்சப்படாதேம்மா... கொஞ்சம் சாப்பிடு!''

''இருக்கட்டுங்க... பரவாயில்லே!'' என்றாலும், முகம் பசியால் வாடிப் போயிருந்ததை முகேஷும் கவனித்தான்.

''தனியா வந்திருக்கியாம்மா?''

''ஆமாம்!'' என்றவள் அதற்கு மேல் பேசப் பிரியப்படாதவள் போல்... ஜன்னல் பக்கம் பார்வையை திருப்பிக் கொண்டாள்.

''நல்லதுக்குக் காலமில்லை...'' தனக்குத் தானே முணுமுணுத்துக் கொண்ட பெண்மணி, தான் சாப்பிடுவதில் கவனம் செலுத்தினாள்.

திருமண கோஷ்டி இன்னமும் தங்கள் வெண்டைக்காய் பேச்சை நிறுத்துவதாய் தெரியவில்லை.

புதுமண தம்பதியர் 'எப்போதடா ஊருபோய் சேருவோம்? எப்போதடா நிலவு வரும்?' என்று சூடான பெருமூச்சுகளை பரிமாறிக் கொண்டிருந்தனர்.

அந்த இளம் பெண் பார்வையை ஜன்னலுக்கு வெளியே வீசியிருந்தாலும்

அவ்வப்போது கண்கள் கலங்குவதும்... சிரமப்பட்டு கண்ணீரை உள்ளிழுத்துக் கொள்வதுமாய் இருந்தாள்.

அவள் ஏதோ இக்கட்டில் சிக்கியிருக்கிறாள் என்பது மட்டும் அவனுக்குப் புரிந்தது.

என்னவாயிருக்கும்? வம்பைத் தேடும் இயல்பான மனித மனது ஆர்வமாய் கேள்வி கேட்டது. அதே சமயம் தன்னை நினைத்தும் வெகுவாய் ஆச்சர்யப்பட்டான்.

'நான் ஏன் இந்தப் பெண்ணைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்? நான் அப்படிப்பட்ட ஆள் இல்லையே! பெண்கள் அதோ வருகிறார்கள் என்றால் இங்கேயே தலைகவிழ்ந்து விடுகிற ஆசாமியல்லவா? அதிலும் ஒரு காதலால் பலத்த அடியையும், அவமானத்தையும் பெற்றவன். அப்படிப்பட்ட நான் எதற்காக இவளைப் பற்றி ஆராய முற்படுகிறேன்? வேண்டாம்... இந்த வேண்டாத வேலை! யார் எப்படியிருந்தால் எனக்கென்ன?'



தீர்மானித்த முகேஷ் வலுக்கட்டாயமாய் தன் எதிர்கால கனவுகளில் எண்ணத்தை செலுத்தினான்.

'பாலச்சந்தரிடமாவது மணிரத்னமிடமாவது பாலுமகேந்திராவிடமாவது அஸிஸ்டண்ட் டைரக்டராய் சேரும் வாய்ப்பு கிடைத்தால் போதும். என் திறமையை காட்டி, ஒரு வஸந்த் மாதிரியோ, கே.எஸ்.ரவிக்குமார் மாதிரியோ, சங்கர் மாதிரியோ உயர்ந்து காட்டுவேன். ஜனாதிபதி கையால் சிறந்த டைரக்டர் அவார்டு வாங்கி தமிழ்நாட்டுக்கு பெருமைத்தேடி தருவேன். நாம் வாழ வேண்டும் என்பது முக்கியம் அல்ல. வாழ்க்கைக்கு அப்பால் நமது பெயர் பொறிக்கப்பட வேண்டும். இந்த பூமியில் பிறந்ததற்கு அடையாளமாய் எதையாவது செய்தே ஆகவேண்டும். என் கனவுகள் பலிக்குமா? பலிக்கணும். பலிக்க வைக்கணும்.'

சற்று நேரத்தில் தன்னை மீறி கண்ணயர்ந்து விட்டான்.

''காபி...காபி... இட்லி பூரி...'' கொசகொசவென்று கலவையாய் குரல்கள் காதில் மோத... திடுக்கிட்டு கண் விழித்தான்.

ரயில் ஸ்ரீரங்கம் ஸ்டேஷனில் நின்றிருந்தது. அதுவரை வாத்துக்கள் போல் கொக்கரித்துக் கொண்டிருந்த கல்யாண கோஷ்டியையும் காணோம். இறங்கி விட்டிருந்தார்கள்.

'அப்பாடா!' என்ற நிம்மதி எழுந்தது அவனுக்கு. அப்போது தான் கவனித்தான். அந்தப் பெண்ணையும் காணோம். பெட்டி மட்டும் இருந்தது.

ரயில் மீண்டும் புறப்பட்ட போது சற்று நேரம் கழித்து வந்தமர்ந்தாள். முகத்தில் இப்போது கூடுதலாய் கவலை ரேகைகள்.

வயதான அந்த அம்மாளும் அவளை கவனித்தாள்.

''உடம்பு... கிடம்பு சரியில்லையா தாயி?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே?''

''இல்லே... அடிக்கடி பாத்ரூம் பக்கம் போய் வந்துட்டிருக்கியேன்னு கேட்டேன்.''

அந்தப் பெண் இவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு சங்கடத்தில் நெளிந்தாள்.

கேட்கக் கூடாத கேள்வி! அதுவும் ஒரு இளைஞன் எதிரே கேட்கப்படும் போது யாருக்குமே எழுகிற சங்கடம் தான்.

முகேஷ் உணர்ந்திருந்ததால் தன் பெட்டியிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்து பிரித்தான்.

''எந்த ஊரு நீ?'' அந்த அம்மாள் விடுகிறாற் போல் தெரியவில்லை.

## முத்துமாலைகளை பாதுகாக்க...

முத்துமாலைகளை பாதுகாக்க என் 'டிப்ஸ்' இதோ...


ஆறு மாதத்திற்கு ஒரு முறையோ இல்லை ஆண்டுக்கு ஒரு முறையோ கோர் முத்துக்களை பிரித்து மறுபடியும் கோர்க்க வேண்டும்.

முத்துமாலை மீது சூரிய வெளிச்சமும் வெப்பமும் படக்கூடாது. வியர்வை பட்டால் முத்தின் பளபளப்பு மங்கும். எனவே ஒவ்வொரு முறை பயன்படுத்திய பின்பும் ஒரு மெல்லிய காய்ந்த துணியால் துடைத்து வைக்க வேண்டும்.

முத்துக்களை நைலான் அல்லது பட்டு நூலில்தான் கோர்க்க வேண்டும்.

முத்துமாலை மீது முகத்திற்கு பூசும் பவுடர், மேக்கப் கிரீம், வாசனைத் திரவியம் ஆகியவை படக்கூடாது. இவைகள் எல்லாம் வேதிக்கலவை என்பதால் முத்துக்களை கெட்டுப்போக செய்துவிடும்.

-ரம்யா.



''வாஞ்சி மணியாச்சி இல்லே... இல்லே திருநெல்வேலி பக்கமா ஒரு கிராமம்!'' என்று உளறினாள்.

''எங்கே போறே?''

''சென்னைக்கு!''

''பார்த்தா கல்யாணமாகாத பொண்ணா தெரியறே! என்ன விஷயமா போகிறே?''

அந்தப் பெண் எழுந்த கோபத்தை உதடை கடித்து அடக்குவது புரிந்து தனக்கு தானே சிரித்தபடி அவளே அறியாமல் அடிக்கண்ணால் பார்த்தான் இந்த கூத்தை.

''வேலைக்காக!''

''சொந்தக்காரங்க யாராச்சும் சென்னையிலே இருக்காங்களா?''

''ஆமாம்... அங்கே பாதி பேர் எங்க ஜாதி ஜனம் தான்.''

பதிலில் இருந்தது உண்மையா, கிண்டலா என்று புரிந்துக் கொள்ள முடியவில்லை.

''காலம் கெட்டுக்கிடக்குது தாயி! இம்புட்டு தூரம் போகிறே! தனியாகவா புறப்பட்டு வர்றது? இதோ இருக்காளே என் பொண்ணு! கல்யாணம் பண்ணிக் கொடுத்து பத்து வருஷமாயாச்சு. ரெண்டு குழந்தைங்களையும் பெத்தாச்சு. ஆனாலும் எனக்கு இவ குழந்தைதானே? பொட்டச்சியா பொறந்துட்டோமே! என் மருமகப்பிள்ளைக்கு வந்து அழைச்சிட்டுப் போக லீவு கிடைக்கலே! இவ அப்பாவும் இப்ப உயிரோட இல்லே! தனியா ரயில்ல அனுப்ப. என் மனசு இடங்கொடுக்கலே. அதான் இவளோட கிளம்பிட்டேன். இவளையும் பேத்திகளையும் விட்டுட்டு நான் கிளம்பணும். தனியா அனுப்பிடுவானா எம்பொண்ணு? இவ அனுப்பினாலும் மருமகப்பிள்ளை அனுப்புவாரா? பத்துநாள் அங்கேயே தங்க வச்சு, லீவு எடுத்துக்கிட்டு என்னோட துணைக்கு வருவார். ஆனாலும் என் மருமகப்பிள்ளை மாதிரி ஒரு பிள்ளையைப் பார்க்கறது அபூர்வம்.''

அம்மாவின் புகழாரத்தால் தன் கணவனை நினைத்து பெருமையாய் சிரித்தாள் மகள்.

'இதெல்லாம் ரொம்ப தேவைதானா? என் சூழ்நிலை தெரியாமல் இந்தம்மா வேறு அறுத்துத் தள்ளுகிறதே!' சொல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் திணறினாள் அந்தப்பெண்.

''ஆமா... உன் பேரை சொல்லவேயில்லையே!'' அந்தம்மாள் விடுவதாகத் தெரியவில்லை.

''அம்புஜம்!''

''அம்புஜமா?'' என்றவள் பக்கென்று சிரித்து விட்டாள்.

''பழங்காலத்து பேரா இருக்கே! உன் உருவத்துக்கும், பேருக்கும் சம்பந்தமேயில்லை!''

'கடவுளே!' தலையில் அடித்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது.

கண்களை இறுக மூடிக் கொண்டாள். அதைப் பார்த்ததும் அந்தம்மாளும் வாயை மூடிக் கொண்டாள்.

''அம்புஜம்!'' உச்சரித்துப் பார்த்தான் முகேஷ்.

'ம்ஹூம்... இவள் பெயர் நிச்சய இதுவாய் இருக்க முடியாது. அந்தம்மாளின் வாயை அடைக்க வாயில் வந்த பெயரை உளறியிருக்கிறாள்.'

அடுத்து வந்த விழுப்புரத்தில் 'ரம்ப கோஷ்டியும் இறங்கி விட... அ கம்பார்ட்மெண்டில் இவளையும் அவனை தவிர யாருமில்லை.

முகேஷிற்கு அவளிடம் பேச வேண் போல் இருந்தது.

அவளோ இவன் பக்கம் முகத்தைக் கூட திருப்பவில்லை.

'ஒரே பக்கமாய் கழுத்தை திருப்பி வைத்திருக்கிறாளே.... கழுத்து வலிக்காதா?'

''எக்ஸ்க்யூஸ்மீ...!'' என்றான்.

'போச்சுடா! எதற்கு பயந்தேனோ... அதுதான் நடக்கப் போகிறது. இவள் ரம்பம் போடப் போகிறாளா?'

அலுப்பாய் திரும்பியவள்...

''என்ன?'' என்றாள்.

''ஐயம் முகேஷ்... ஃப்ரம் நாகர்கோவில்!''

''இருந்துட்டுப் போங்க... அதுக்கென்ன இப்ப?'' சுள்ளென எரிந்து விழுந்தாள்.

''ஸாரி...!'' என்றபடி வாயை கப்சிப்பென மூடிக் கொண்டான் முகேஷ்.

'எனக்கு இதெல்லாம் தேவைதான்! எதற்காக இவளிடம் பேசப்போய் மூக்குடைப்பட வேண்டும்? சே... பார்க்க படித்தவள் போலிருக்கிறாள். எப்படி பேச வேண்டும் என்ற இங்கிதம் கூட தெரியவில்லை!' தன்னையே நொந்துக் கொண்டவனாய்... புத்தகத்தில் வலிய ஆழமாய் கவனத்தை செலுத்திக் கொண்டான்.

நேரம் நகர்ந்ததே தெரியவில்லை.

செங்கல்பட்டு வந்திருந்தது.

''டிக்கட் ப்ளீஸ்...''

குரல் கேட்டு நிமிர்ந்தான் முகேஷ்.

டி.டி.ஆர். நின்றிருந்தார்.

முகேஷ் தன் டிக்கட்டை எடுத்துக் கொடுத்தான். சரி பார்த்து திருப்பித் தந்தவர்... எதிரே இருந்த பெட்டியை சுட்டிக்காட்டி கேட்டார்.

''இந்தப் பெட்டி உங்களுடையதா?''

''இல்லே சார்! ஒரு யங் லேடியோடது!''

''எங்கே அவங்க?''

''டாய்லெட் போயிருக்கலாம்!'' என்றான் முகேஷ்.

## 3

**டி**.டி.ஆர். காத்திருந்தார்!

வெகு நேரமாகியும் அவள் வெளியில் வருவதாய் தெரியவில்லை.

''சார்... ஆர் யூ ஷ்யூர்? அந்த லேடி டாய்லெட்ல தான் இருக்காங்களா?''

''நான் கவனிக்கலே சார்! பட், அந் பெண்ணுக்கு உடம்பு சரியில்லையோ என்னவோ? அடிக்கடி டாய்லெட் போ வந்துக்கிட்டிருந்தாங்க. அதை வச்சுதா சொல்றேன்!''

டி.டி.ஆருக்கு ஐம்பது வயதிருக்கும் முன்நெற்றி உள்வாங்கி வெகு தூர போய்விட்டிருந்தது. இருபத்தைந்து வருட சர்வீஸில் இதுபோன்று எத்தனையோ கேஸ்களை சந்தித்திருப்பவர். சற்று நேர யோசித்தவர், இதற்கு மேலும் காத்திருப்பதி புத்திசாலித்தனமில்லை. ஒருவேளை அந் பெண்ணிற்கு அசம்பாவிதமாய் ஏதேனு நேர்ந்திருந்தால்? அதுவும் இளம் பெண் எனும்போது.. அங்கு ஆபத்தும் இருக்குமே என்று தீர்மானித்தார்.

டாய்லெட்டை நோக்கிச் சென்றார்.

கதவைத் தட்டினார்.

''யாரும்மா உள்ளே? கதவைத் திறங்க!''

''......'' பதில் இல்லை.

''திறக்கப் போறீங்களா? கதவை உடைக்கட்டுமா?''

அடுத்த சில நொடிகளில் தயக்கத்துடன் கதவைத் திறந்து வெளிப்பட்டாள் அவள்.

முகம் முழுக்க பதற்றம்.

மேற்கொண்டு கேள்வி கேட்பது. அதுவும் ஒரு பெண்ணிடம் கேட்பது அநாகரீகம் என்று புரிந்தவராய், ''டிக்கட் ப்ளீஸ்!'' என்றார்.

அவள் டென்ஷனோடு, முகேஷை சங்கடமாய் ஒரு பார்வை பார்த்து விட்டு தன் பெட்டியைத் திறந்து தேடினாள்.

''என்னம்மா? இன்னுமா தேடறீங்க?'' என்றார் பொறுமையிழந்து.

''இ... இங்கே தான் சார் வச்சிருந்தேன். காணோம்!'' என்றாள் பயத்தில் விழிகள் விரிய.

டி.டி.ஆர். அவள் முகத்தை உற்றுப்பார்த்தார். அவர் கண்களை சந்திக்க தைரியமற்று விழிகள் தடுமாறின. அவள் கைகள் லேசாய் நடுங்கின.

முகேஷ் அவளை வியப்பாய் பார்த்தான்.

''உன்னைப் போல் எத்தனைப் பேரை பார்த்திருப்பேன்? டிக்கட் வாங்காம டிராவல் பண்ணிட்டு டாய்லெட்ல போய் பதுங்கிக்கிற கேஸ் ஆயிரக்கணக்கில பார்த்தவன். பார்த்தா படிச்சவ மாதிரி தெரியறே! வெட்கமாயில்லே?''

''ஸாரி... சார்!'' கண்கள் உடைப்பெடுத்துக்கொண்டது.

''அதையெல்லாம் நீயே வச்சுக்க! ஃபைன்



கட்டறியா? இல்லே ஸ்டேஷனுக்கு வர்றியா?''

''பணமில்லே சார்! என்னை உங்க பொண்ணு மாதிரி நினைச்சுக்குங்க சார். இந்த ஒரு முறை மன்னிச்சு விட்ருங்க ப்ளீஸ்!''

''இந்த சென்டிமெண்ட் டயலாக் எல்லாம் பேசி நேரத்தை வீணாக்க வேண்டாம். பெட்டிய எடுத்துக்க... சென்னை வந்தாச்சு!'' கறாராய் இருந்தார் மனுஷன்.

''சார்... ப்ளீஸ்!'' குரல் அழுகையினூடே கலங்கி வந்தது.

முகேஷிற்கே அவளை பார்க்க பரிதாபமாகத்தான் இருந்தது. அவனுக்கு அபராதம் கட்டும் அளவிற்கு மனம் இருந்தாலும் அதை கட்டக்கூடிய வசதியான நிலையில் அவன் இல்லை. தவிர, அப்படியே கட்டினாலும், அந்த பெண் வசைபாட மாட்டாள் என்பது என்ன நிச்சயம்? மேலும், இவள் நிஜமாகவே நல்லவதானா? அல்லது, 'வேறுமாதிரி' ரகத்தை சேர்ந்தவளா? யார் கண்டது? எந்தப் புற்றில் எந்த பாம்போ?'

ரயில் சென்னையைத் தொட்டது.

''இறங்கு!'' அந்தத் தொனியில் மரியாதையின்மை வெளிப்பட்டது.

''சார்... ப்ளீஸ்... இந்த ஒருமுறை விட்ருங்க!''

''மன்னிச்சி விட்றதுக்கு எனக்கு சம்பளம் தரலே. நட! உங்கப்பன் வீட்டு ரயில் மாதிரி ஏறி கிளம்பிட்டே! அதுக்கெல்லாம் தைரியம் இருக்கில்லே? கிளம்பு!''

உடல் கூனிக்குறுக, கண்களில் நீர் பெருக... அவர் பின்னே இறங்கினாள்.

அவர்களுக்குப் பின்னே இறங்கிய முகேஷ்... அவளையே திரும்பி, திரும்பி பார்த்தபடி நடந்தான்.

**அ**வன் பேசிய தொகைக்கு இதை தாண்டி வர முடியாது என்று ஆட்டோ டிரைவர் திருவல்லிக்கேணி, ஆதம் மார்க்கெட்டிலேயே இறக்கி விட்டு விட்டான். முகேஷ் கறாராக பேரம் பேசிய எரிச்சல் அவனுக்கு.

அவன் தேடி வந்த முகவரி பிரசிடென்சி கல்லூரியின் பின்புறம் இருந்தது. நாலைந்து பேரிடம் விசாரித்துக் கொண்டு சரியான முகவரியின் முன் போய் நின்றவனை பூட்டு தான் வரவேற்றது.

அதிர்ந்து போனான் முகேஷ்.

'என்ன செய்வது?'

''யார் சார் நீங்க?'' நாற்பத்தைந்து வயது மதிக்கத் தகுந்த நபர் ஒருவர் பக்கத்து வீட்டிலிருந்து இவனை சந்தேகத்தோடு பார்த்துக் கொண்டே அருகில் வந்தார்.

''முத்துக்குமார் இல்லையா?''

''நீங்க அவருக்கு என்ன வேணும்?'' இன்னும் சந்தேகப் பார்வையை விலக்கவில்லை.

''நான் அவரோட ஃப்ரண்ட்! நாகர்கோவில்லேர்ந்து வர்றேன்!''

''ஓகோ! அவர் ஆபீஸிற்கு போய்ட்டாரே!''

''அப்படியா?'' என்று யோசித்தவன், ''சரி.. சார். நான் போன்ல காண்டாக்ட் பண்ணிக்கிறேன்'' என்றபடி நகர்ந்தான்.

''**மு**த்து சார்... கால் ஃபார் யூ''

அஸிஸ்டண்ட் கேமராமேன் அறைக்குள் எட்டிப்பார்த்து குரல் கொடுக்க.. அடுத்த ஐந்தாவது நிமிடம் ஒளிபரப்பாகவுள்ள தலைப்பு செய்தியை ஷூட் செய்ய.. கேமரா கோணத்தை சரிபார்த்துக் கொண்டிருந்த முத்துக்குமார், ''கொஞ்சம் பார்த்துக்குங்க'' என்று பக்கத்திலிருந்த இன்னொரு கேமராமேனிடம் கூறிவிட்டு வெளியே வந்தான்.

நடை, உடையைப் போலவே ஆளும் படு கம்பீரமாயிருந்தான்.

''ஹாய் முத்து!'' செய்திப் பிரிவின் அறையிலிருந்து எட்டிப்பார்த்த முப்பத்தைந்து வயது சாந்தப்ரியா... உற்சாகமாய் அழைத்தாள்.

''ஹாய்'' என்று ஒற்றை வரியில் கூறிவிட்டு விரைந்து நடந்தான்.

''இந்த டிரஸ்ல படு ஸ்மார்ட்டா இருக்கே முத்து!''

''தாங்க்ஸ்'' என்றவன் அறையை அடைந்து மல்லாந்திருந்த ரிசீவரை எடுத்து ''ஹலோ'' என்றான்.

''டேய் பாவி... நான்தாண்டா!''

''யோவ் முகேஷ்! எப்பய்யா வந்தே சென்னைக்கு?'' ஆச்சர்யமாய் அலறினான்.

''என்ன தெரியாத மாதிரி நடிக்கறே? நான் தான் லெட்டர்லே எழுதியிருந்தேனே! நான் இன்னைக்கு வர்றேன்னு தெரிஞ்சதும் வீட்டைப் பூட்டிக்கிட்டு ஓடிப்போய்ட்டியா?''

''லெட்டர் போட்டிருந்தியா? எப்ப?''

''நாலஞ்சு நாளாகுது!''

''சரிதான்! நம்ம போஸ்டல் டிபார்ட்மெண்ட்டை பத்தி நல்லாத் தெரிஞ்சிருந்தும் உற்ற நண்பனை சந்தேகப்படலாமா? நிஜமாகவே லெட்டர் என்

கைக்கு கிடைக்கலே! இப்ப என்ன பண்ணிக்கிட்டிருக்கே?''

''நடுத்தெருவுல நின்னுக்கிட்டிருக்கேன். சீக்கிரம் வந்து தொலைடா ராஸ்கல்!''

''ஒரே ஒரு அஞ்சு நிமிஷ வேலை தான். முடிச்சிட்டு பத்தே நிமிஷத்திலே வீட்லே இருப்பேன். ஆக மொத்தம் பதினஞ்சு நிமிஷம் தெருவுல நில்லு... தப்பில்லே... வந்திடறேன்'' என்று போனை வைத்தான்.

தெருமுனையில் முத்துக்குமார் பைக்கில் வருவதைப் பார்த்ததும், எஸ்.டி.டி. பூத்திலிருந்து வெளிப்பட்டு அவன் வீட்டை நோக்கி நடந்தான் முகேஷ்.

பைக்கை ஸ்டாண்ட் போட்டு விட்டு அவசர அவசரமாய் நண்பனை தோளோடு சேர்த்து அணைத்துக்கொண்டான் முத்துக்குமார்.

''ஒரு போன் பண்ணிட்டு கிளம்பியிருக்கலாமில்லே?''

''ஸாரிடா... தோணலே!''

''கொஞ்சம் டல்லாய்ட்ட மாதிரி தெரியுது!''

''முதல்ல வீட்டு கதவை திற!''

''ஓ... ஸாரி...'' என்று சிரித்தபடி கதவைத் திறந்தவன்... கதவின் கீழ் துவாரம் வழியாக வீசியெறியப்பட்டிருந்த இரண்டு கடிதங்களை பொறுக்கிக் கொண்டான்.

ஒன்று அம்மாவிடமிருந்து. மற்றொன்று முகேஷிடமிருந்து.

வாய் விட்டு சிரித்தான் முத்து.

''இந்தாடா.. நீ அனுப்பிய லெட்டர்.. பிரிச்சி படி!'' என்று அவனிடம் நீட்டினான்.

''வாழ்க போஸ்டல் டிபார்ட்மெண்ட்!'' என்ற படி கிழிக்கப்போனவனை தடுத்தான்.

''ஏன் கிழிக்கறே?''

''அதான்.. நான் வந்திட்டேனே?''

''இருந்தாலும் அன்பை வெளிப்படுத்தி லெட்டரை எழுதறதும் சுகம், படிக்கறதும் சுகம்! கொடு இப்படி!'' வாங்கி பாக்கெட்டில் செருகிக் கொண்டான்.

''நாம சந்திச்சி ரெண்டு வருஷம் இருக்குமா முகேஷ்?''

''ம்... இருக்கும்!'' என்றவன் ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தபடி வீட்டை கண்களால் அளந்தான். ''வீடு சின்னதா கச்சிதமாயிருக்கு!''

''முகேஷ்.. என்ன இது?'' ஆச்சர்யமாய் கேட்டான்.



''எது?''

''சிகரெட் பிடிக்கறே... புதுசா?''

''புதுசாயில்லே! ஒருமாசமா... இது தா[ன்] என் ஃப்ரெண்ட்!'' என்றான்.

''ஊர்ல ஏதும் பிரச்சினையா[?] கோவிச்சுக்கிட்டு வந்துட்டியா?''

''ம்ஹூம்... ஒரேடியா வந்துட்டேன்'' குப்பென புகையை வெளியே விட்டா[ன்] முகேஷ்.

## 4

குளித்து முடித்து லுங்கியி[ல்] வந்தமர்ந்தான் முகேஷ். பயண[க்] களைப்பெல்லாம் பறந்தோடி விட்டிருந்தது.

சின்ன ஹால். பத்தடிக்கு பத்தடியி[ல்] பெட்ரூம். தரையில் விரிக்கப்பட்டிருந்த பெ[ட்]... மூலையில் சின்னதாய் கலர் டி.வி. ஷெல்பி[ல்]

> ## அழுவது நல்லது
>
> 'அழுவது நல்லது'.
> ஆச்சரியமாக இருக்கிறதா? அழுதால் ஆயுள் அதிகரிக்கும் என்று சொல்கிறார்கள், மருத்துவர்கள்.
> எனவே பெண்கள் தங்கள் கவலையை மறக்க அழுவது ஆரோக்கியமான விஷயமே.
> ஆண்கள் சோகத்தை உள்ளுக்குள்ளேயே தேக்கி வைத்துக் கொண்டு உடல் பாதிப்புக்கு ஆளாகிறார்கள்.
>
> -பி.ஜெனகா.

விநாயகரும், லட்சுமியும் அருள் பாலித்து[க்] கொண்டிருந்த போட்டோ. இரண்டு நாட்களுக்கு முன்பு போடப்பட்டிருந்த பூச்சர[ம்] வாடி விட்டிருந்தது. ஒரு ஆள் நின்று சமைக்க[க்] கூடிய அளவுடன் கிச்சன். அதை ஒட்டி பாத்ரூம்.

பரவாயில்லை. பேச்சிலர் அறை போ[ல்] இல்லாமல் நீட்டாக வைத்திருந்தான்.

முத்துக்குமார் சமையலறையி[ல்] என்னவோ உருட்டிக் கொண்டிருந்தான்.

''என்ன முத்து? போர்வெல் வாட்ட[ர்] இப்படி உப்பு கரிக்குது? சோப்புக் கூட நுரைக்கலே. குளிச்ச மாதிரியே இல்லே!''

''சென்னையில் எல்லோரும் வசதியாய்ட்டாங்கன்னு அர்த்தம். பாரேன்... கடல் தண்ணீரை வீட்டுக்கே வர வைக்கறதுங்கறது சாதாரண விஷயமா என்ன? நாங்கள்லாம் சமைக்கறப்ப உப்பே



[போ]டறதில்லேன்னா... பார்த்துக்கோயேன்'' [என்]றான் கிண்டலாக.

''எப்படிடா இங்கே குப்பை [கொ]ட்டறே?''

''வந்தாரை வாழவைக்கற சென்னை [ந]கரத்திலே குப்பைக் கொட்டணும்னு வந்த [..]ரு. கடல் தண்ணியாவது, கூவமாவது. [எ]ப்படியும் ரொம்ப ட்ரை பண்ணிப்பார்த்து... [..]டியாதுன்னு விட்டுட்டேன்''

''ஏதை?''

''சென்னையிலே உன்ன தூர்தர்ஷனை [..]கர்கோவிலுக்கு மாத்திடுவோம்னு! வெறும் [..]திலே போட்டுக்க [..]ட்டேங்கிறான்!''

[..] என்ன [..]ண்டலா?''

[..] பின்னே [..]யணம்டா? சொந்த [ஊ]ரைவிட்டு நீயும் [..] தேடி [..]ருக்கறது இங்கே



[..]னோ இந்த சென்னை மண்ணைப்பத்தி தப்பா [..]பினோ போஜனம் கூட கிடைக்காது. ஆமாம்... [..]சொல்லிட்டேன்!''

இரண்டு தட்டில் கடகட [..]ம்லெட்டுடன் அவன் எதிரில் வைத்தான்.

''முத்து உனக்கு சமைக்கவும் தெரியுமா?''

''வாயைப் பிளக்காதே! முட்டைய [..]டைச்சி ஊத்தி இப்படி ஆம்லெட் மட்டும் [..]தான் போடத் தெரியும்!''

''அப்ப இந்த சமையலை எல்லாம் செய்தது யாரு?'' சாதம், முருங்கைக்காய் சாம்பார், கீரை மசியல், பீர்க்கங்காய் கூட்டு, ரசம் என்று பாத்திரங்களில் தென்பட்ட சமையலை காட்டி கேட்டான்.

''சமையல்காரி!''

''சமையல்காரின்னா?''

''டேய்... டேய்... அப்படி பார்க்காதே!

அந்தம்மாவுக்கு ஐம்பது வயசாகுது! தினமும் காலையிலே வந்து சமைச்சு வச்சிட்டுப்போயிடு வாங்க.''

''நான் என்னவோ நீதான் சமைக்கறியோன்னு பயந்துட்டேன். நல்லவேளை தப்பிச்சேன்!''

''எல்லாம் நேரந்தான்! ஊர்ல எல்லாரும் சௌக்கியமா முகேஷ்?''

''அதைவிடு, அம்மா எப்படியிருக்காங்க? உன் தங்கை வாணி எப்படியிருக்கா?''

''நல்லாயிருக்காங்க! வாணி பிளஸ் டூ பாஸாயிட்டா. அவளுக்கு கல்யாணம் பண்ணி வச்சிடணும்னு ஆசைப்படறாங்க! ஆனா, அவளோ ஒரு டிகிரியாவது வாங்கணும். நான் காலேஜுக்கு போயாகணும்னு அடம்பிடிக்கிறா.''

''படிக்கணும்னு நினைக்கிறவளை தடுக்கணுமா முத்து? நானு எழுத்து படிச்சதும், வயசுக்கு வந்ததுமே கல்யாணத் தகுதி வந்திட்டதுன்னு நினைக்கறது மகாதப்பு! பெண்ணுக்கு திருமண வயது 21 அப்படின்னு ஒவ்வொரு ஆட்டோ முதுகிலேயும் எழுதி வச்சிருக்காங்களே.அதுவும் தப்பு! ஒவ்வொரு பெண்ணும் படிச்சோ, கைதொழில் செஞ்சோ... சொந்தமா பணம் சம்பாதிக்க, யாரோட உதவியும் இல்லாம சொந்த கால்ல நிக்கிற கெபாஸிட்டி எப்ப வருதோ... அப்பதான் ஒரு வாழ்க்கை துணையை தேடுற தகுதியை அடையறாங்க. அது புரியாம நிறையப் பெண்கள்...''

''போதும்டா சாமி... போதும்!'' இரு கைகளையும் உயர்த்துக்கி பொய்யாய் கும்பிடு போட்டான் முத்து. ''சென்னையிலே உன்ன பொண்ணுங்களை கெடுக்கறதுக்குன்னே ஒருத்தன் நாகர்கோவில்லேர்ந்து வந்திருக்கான்டோய்!'' ஒரு கையை வாயருகே குவித்து வாசலைப்பார்த்து சத்தமாய் கத்துவதுப் போல் பாவ்லா செய்தான்.

முகேஷ் கரண்டியை எடுத்து அடிக்க ஓங்கினான்.

''டேய்... கண்ணா! விட்ருப்பா! ஏன் இப்படியெல்லாம் பேச ஆரம்பிச்சிட்டே? உங்க ஊர்ல போதிமரம் ஏதாவது இருக்கா என்ன?''

''கூவம் தண்ணிய குடிக்கிறவனாச்சே! இப்படித் தான் பேசுவே!''

''நீயும் அதே தண்ணியதான் குடிச்சாகணும் ஞாபகம் வச்சுக்க!'' சிரித்தபடி சாப்பாடு பரிமாறினான்.

கேலியும், கிண்டலுமாய் நண்பர்கள் இருவரும் சாப்பிட ஆரம்பித்தனர்.

முகேஷும், முத்துக்குமாரும் கல்லூரிக் கால நண்பர்கள். முகேஷ் நாகர்கோவிலிலிருந்து பிரசிடென்சி கல்லூரியில் பி.எஸ்சி. சேர்ந்தான். முத்துக்குமார் மதுரை அரசரடியிலிருந்து அதே கல்லூரியில் அதே வகுப்பில் சேர்ந்தான். ஹாஸ்டலிலும் ஒரே அறை! அப்புறமென்ன? இணைபிரியா தோழர்களாகி விட்டனர். இருவருக்குமே சினிமாத்துறையில் ஆர்வமிருந்தது. அதனாலேயே பி.எஸ்சி. முடித்த கையோடு பிலிம் இன்ஸ்ட்டியூட்டில் சேர்ந்து முத்து ஒளிப்பதிவை படிக்க, முகேஷ் ஒளிப்பதிவுடன் டைரக்‌ஷன் கோர்ஸையும் படித்தான். முத்துக்குமார் பிரயத்தனப்பட்டு தூர்தர்ஷனில் கேமராமேனாக நுழைந்து விட்டான். முகேஷின் எண்ணம் வேறுமாதிரியாக இருந்தது. தன் திறமையை குறுகிய வட்டத்திற்குள் அடைத்து வைக்க விரும்பவில்லை. அவனின் பரந்த பார்வை சினிமாவை குறி வைத்திருந்தது.

அதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது தான் அவனுக்கு தந்தி வந்தது. அவனின் தாயார் இறந்து விட்டதாக! அப்போது ஊருக்குப் போனவன் தான். அதன்பிறகு அவனை சென்னைக்கு அனுப்ப மறுத்து விட்டார் அப்பா.

தட்சிணாமூர்த்திக்கு இரண்டே பிள்ளைகள் தான். பெரியவன் சுரேஷ்குமார் ஈ.பி.யில் சூபர்வைசராக பணிபுரிகிறான். சின்னவன் முகேஷ்குமார். தட்சிணாமூர்த்திக்கு இளையமகனும் சுரேஷை போல ஏதாவது அரசுப் பணியில் பணிபுரிய வேண்டுமென்பது விருப்பம். அவன் பட்டப்படிப்பை முடித்த கையோடு பிலிம் இன்ஸ்ட்டியூட்டில் சேர்ந்தது சற்றும் பிடிக்கவில்லை. அவரும் அரசாங்க பணியிலிருந்து ஓய்வு பெற்றவர் தான்.

ஆனால், முகேஷ் தான் வீம்பாக இருந்தான். தன்னால் குண்டு சட்டியில் குதிரை ஓட்ட முடியாது. கலைத்துறையில் தான் பணிபுரிவேன் என்று சென்னையிலேயே தவமிருந்தான்.

சாகும் தருவாயில் அம்மா ஆனந்தவல்லிக்கு முகேஷின் நினைவு தான். அதைத்தான் அப்பா, சொல்லி சொ[illegible] அழுதார்.

''சினிமா சினிமா என்று அலை[illegible] கடைசியில் பெற்றவளுக்கு ஒரு ஸ்பூன் [illegible] ஊற்றக்கூட முடியாத துப்புக்கெட்டவ[illegible] விட்டாயே? உன்னைப் பெத்த [illegible] ஏக்கத்திலேயே போய் - சேர்ந்துட்[illegible] என்னையும் அதே ஏக்கத்தோட காட்[illegible] அனுப்பி வச்சிடாதே!''

''என்னப்பா நீங்க? இப்படியெல்லாம் பேசறீங்க?''

''வேற எப்படிடா பேசறது? படிச்சே[illegible] முடிச்சோமா ஊரு வந்து சேர்ந்தோமா[illegible] இல்லாம சென்னையிலே வீதிவீ[illegible] அலையறதுக்கா உன்னை படிக்க வச்சேன்?''

''இல்லேப்பா... சீக்கிரமே என[illegible] சினிமாவில் ஒரு நல்ல வாய்ப்பு...''

''பேசாதே! எப்பப் பார்த்தாலும் சினி[illegible] சினிமான்னு பைத்தியம் பிடிச்சு அலையறே[illegible] எப்பவும் என் கண்ணெதிரே இருக்கணும்[illegible] ஆசைப்படறேன். சினிமா முக்கியமா? பெ[illegible] தகப்பன் முக்கியமான்னு இப்பவே மு[illegible] பண்ணிக்க! இங்கேயே ஒரு வேலை[illegible] தேடிக்கிட்டு பெத்தவன் மனசை குளி[illegible] பண்ணினா... நீ என் பிள்ளை! இல்லேன்னா[illegible] சாவுக்குக் கூட வரக்கூடாது... ஆமாம்!'' அப்[illegible] கடைசி அஸ்திரத்தை எடுத்து வீசினார்.

ஆடிப்போய் விட்டான் முகேஷ்.

''அப்பாவைப் பத்தி உனக்[illegible] தெரியாதா? சொன்னா சொன்னதுதா[illegible] எல்லாம் உன்மேல உள்ள பாசத்தினால தா[illegible] சொல்றார்? நீ கொஞ்சம் விட்டுக் கொடுக்[illegible] கூடாதா முகேஷ்? அப்பாவை விடவா சினி[illegible] பெரிசு?'' சுரேஷும் தன் பங்கிற்கு தூ[illegible] போட...

அவனின் லட்சியக் கனவுகளை அ[illegible] மனதில் புதைத்துக் கொ[illegible] வேண்டியதாயிற்று.

சென்னைக்கு ஒரு கும்பிடு போட்[illegible] விட்டு ஊரிலேயே தங்கினான்.

சுரேஷ்குமாருக்கு சொந்தத்திலே[illegible] பெண் பார்த்து மணம் முடித்[illegible] தட்சிணாமூர்த்தி.

அலுவலகம் சென்று தடதடவென்[illegible] சுழலும் ஃபேன் அடியில் அமர்ந்து லெட்ஜ[illegible] புரட்டி, கணக்கு வழக்கு பார்த்[illegible] காலையிலிருந்து மாலை வரை ஒரே இடத்தி[illegible] உட்கார்ந்து வேலை செய்ய முகேஷ் ம[illegible] ஒப்பவில்லை.



படித்த படிப்புக்கு, கற்றுக் கொண்ட கலைக்கு ஏற்ற அளவிலாவது தொழில் செய்ய வேண்டும் என்பதில் பிடிவாதமாய் இருந்தான்.

தட்சிணாமூர்த்தியும் அவனை மேலும் இம்சைப்படுத்த விரும்பாமல் ஒரு ஸ்டுடியோ வைத்துக் கொடுத்தார். திருமணம் போன்ற விசேஷங்களுக்கு போட்டோ, வீடியோ கவரேஜ் செய்வது என்று தன் கலை தாகத்துக்கு ஓரளவு தீனிப் போட்டுக் கொண்டான்.

இடையில் அவ்வப்போது சென்னை வந்து முத்துக்குமாரை பார்த்துவிட்டு செல்வான். இரண்டு வருடத்திற்கு முன்பு கடைசியாய் வந்தது. அதோடு இப்போது தான் வந்திருக்கிறான்.

சாப்பிட்டு முடித்து கையைக் கழுவினர்.

''என்னை இவ்ளோ விசாரிச்சியே! நான் இப்ப உன்னை ஒண்ணு கேட்கட்டுமா?'' என்றான் முத்து.

''கேளேன்!''

''உனக்கு எப்ப கல்யாணம்?''

''யூ மீன் தாலி கட்டி, மாலை மாத்தி பண்ணிக்குவாங்களே அதுவா?''

''ஒண்ணுமே தெரியாத பாப்பா பாரு! கேட்கறான் கேள்வி! அதுவே தான்!'' என்றான் கிண்டலாய்.

''அதுதான் நடந்து முடிஞ்சிருச்சே?'' கேஷுவலாய் சொன்னான் முகேஷ்.

## 5

''**ஏ**...என்ன?'' அதிர்ந்துப் போனான் முத்துக்குமார்.

''தாலி கட்டி, மாலை மாத்தி, ரிஜிஸ்டர் மேரேஜ் முடிஞ்சாச்சு!''

''டேய்.. என்னடா சொல்றே? எல்லாமே விளையாட்டா உனக்கு?''

''நான் கிண்டலக்கிறேன்னு நினைச்சியா? கிடையாது. எல்லாமே நிஜம்!''

''எப்போடா நடந்தது?'' அதிர்ச்சி விலகாமல் கேட்டான்.

''மூணு மாசத்துக்கு முன்னாடி!'' டி.வி.யில் ஓடிக்கொண்டிருந்த கார்ட்டூன் படத்திலிருந்து கண்களை விலக்காமலேயே பதில் கூறினான்.

''என்னைக் கூட கூப்பிடலே!''

''ஒரு இக்கட்டான சூழ்நிலையிலே நடந்தது. யாரையும் கூப்பிட முடியலே!''

''தீபாவைதானே பண்ணிக்கிட்டே?''

''ம்!''

''கல்யாண விஷயத்தை சிரிக்கக்கிட்டே சந்தோஷமா சொல்றதுக்கென்ன?''

''எல்லாம் முன்னாடியே சிரிப்பா சிரிச்சாச்சு!''

அதன் அர்த்தத்தை முத்து உணரவில்லை.

''சரி... கல்யாணத்துக்குதான் கூப்பிடலே. மூணு மாசமாய்டுச்சுங்கறே. இதுநாள் வரைக்கும் சொல்லாம மறைச்சிட்டியே. நான் என்ன உனக்கு தேர்ட் பர்ஸனா?''

''ப்ச்... காரணம் அதுவல்ல. உன்னை அப்படி நினைச்சிருந்தா... இப்ப உரிமையோட உன்னைத் தேடி வந்திருப்பேனா? மாமியார் வீட்டுக்கு போய் வந்தேன். அதனால சொல்ல முடியலே.''

''பரவாயில்லையே! மாமியார் வீட்லே சமாதானமாய்ட்டாங்களா? கேக்கவே சந்தோஷமாயிருக்கு. ஆமா... அங்கேயே சொந்தமா ஸ்டுடியோ வச்சு பிஸினஸ் நல்லாப் போய்ட்டிருக்குன்னு சொன்னியே. அதை விட்டுட்டு இங்கே எதுக்கு வந்தே? அதுவும் தீபாவை விட்டுட்டு?''

''.....''

''தீபா உன்னை விட்டு பிரிஞ்சிருக்க மாட்டாளே பிறகெப்படி அனுப்பினா?''

முத்துக்குமார் சொல்லி முடிக்குமுன்பே பெரிய ஹாஸ்யத்தை கேட்டு விட்டாற்போல் வாய் விட்டு பலமாய் சிரிக்க ஆரம்பித்தான்.

''டேய்... இப்ப நான் என்ன சொல்லிட்டேன்னு இப்படி சிரிக்கிறே?''

''பின்னே? ஜோக்கடிச்சா சிரிப்பு வராமா?''

''ஜோக்கா?''

''ஆமாம்! என்ன சொன்னே? தீபா என்னை விட்டு பிரிஞ்சிருக்க மாட்டாளா?''

''ஆமாம்! புதுசா கல்யாணமானப் பொண்ணு. அதுவும் காதலிச்சு கல்யாணம் பண்ணியிருக்கீங்க. எப்படி பிரிய மனசு வரும்? போக வேண்டாம்னு அழுதிருப்பாளே!''

''அதெப்படி? அழுதா... அவ புருஷன் சும்மா விட்ருவானா? உதைக்க மாட்டானா?''

முத்துக்குமாரின் முகம் சுருங்கியது.

''நீ பேசறது எதுவுமே புரியலே! தலைய பிச்சிக்கணும் போலிருக்கு!''

''தீபா... இப்ப அவ புருஷனோட சந்தோஷமா வாழ்ந்துக்கிட்டிருக்கா!''

''என்னடா உளர்றே? நீதானே அவளோட

புருஷன்'' கண்கள் அகன்றன முத்துவிற்கு.

''தாலி, மாலை, கல்யாணம், சடங்கு, கணவன், மனைவி... எல்லாமே சுத்த ஹம்பக் முத்து. நம்ம பண்பாடு செத்துப்போய் ரொம்ப வருஷமாகுது. நாகரீகம்ங்கற நச்சுப்புகை எல்லாத்தையும் அழிச்சி குட்டிச்சுவராக்கிடுச்சு! எனக்கே இப்ப



எதிலேயும் நம்பிக்கையில்லாம போயிடுச்சு!''

''என்னதான் நடந்தது?''

''சொல்றேன்...!''

**ஆ**சை, லட்சியம் அத்தனை எதிர்கால கனவுகளையும் ஒரு கனவாகவே ஆக்கிவிட்டார் அப்பா. அவர் பணம் செலவழித்து வைத்துக் கொடுத்த ஸ்டுடியோவில் ஈடுபாடு இல்லாமல்தான் அமர்ந்தான். ஆனால் அவனின் நல்ல நேரமோ, திறமையோ, ஏதோவொன்று ஸ்டுடியோ வெகு விரைவில் பிரபலமாயிற்று.

வீடியோ கவரேஜிற்கு நிறைய ஆர்டர்கள் வந்து குவிந்தது. திருமணம் போன்ற சுபகாரியங்களுக்கு மட்டுமின்றி அரசியல் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்கும் ஆர்டர்கள் வந்தன.

முகேஷ் பிஸியாகவே இருந்தான். வாரத்தில் ஒரு நாள் அல்லது மாதத்தில் ஓரிரு நாள், எப்போது ப்ரீயாக இருக்கிறானோ.. அப்போதெல்லாம் ஒரு கேமராவோடு கிளம்பிப் போய் விடுவான். இயற்கை காட்சிகளை, பறவைகளை, விலங்குகளை விதவிதமாய் படமெடுத்துத் தள்ளுவான். அவன் மனத்திருப்தியோடு எடுக்கிற படமென்றால் அதுவாக மட்டும்தான் இருக்கும்.

இப்படி ஒரு இலக்குமின்றி அவனின் நாட்கள் கடந்துக் கொண்டிருந்த சமயத்தில் தான் தீபாவை சந்தித்தான்.

அது ஒரு பெரிய பணக்காரர் வீட்டு திருமண நிகழ்ச்சி. முகேஷ்தான் வீடியோ கவரேஜ். உதவியாளர்களுடன் இங்குமங்குமாய் கவர் பண்ணிக் கொண்டிருந்தவனின் கேமராவினுள் ஒரு

முகம் மட்டும் அடிக்கடி தென்பட்டது.

எப்போதும் அகலாத சிரிப்புடன், அலை அலையாய் படர்ந்திருந்த அடர்ந்த கூந்தலுடன், சிவந்த நிறமுடைய அழகிய இளம்பெண்.

முகேஷ் கேமராவிலிருந்து கண்களை அடிக்கடி அகற்ற வேண்டியிருந்தது.

அவளும் கூட இவனை ஓரக்கண்ணால் அடிக்கடிப் பார்த்து புன்னகைப்பதுப் போலிருந்தது.

'யாரிந்த அழகி?'

அந்த கேள்விக்கு அரை மணி நேரத்தில் விடை கிடைத்து விட்டது. கல்யாணப் பெண்ணின் சித்தப்பா மகளாம்.

அந்த நிகழ்ச்சியில் மட்டுமின்றி, அதற்கடுத்த இரண்டு மூன்று நிகழ்ச்சியிலும் அவளை சந்திக்கும் வாய்ப்பு அமைந்தது.

அந்த வாய்ப்பை அவளே தான் உருவாக்கினாள் என்பதும் புரிந்துப் போயிற்று. ஒன்று அவளின் மாமா பெண்ணின் திருமணம். மற்றவை தோழிகள் வீட்டு நிகழ்ச்சிகள். அத்தனைக்கும் இவள் தான் இவன் தொழில் நேர்த்தியை எடுத்துக் கூறி சிபாரிசு செய்தது.

காந்தத்தைக் கண்டதும் போய் ஒட்டிக் கொள் என்று இரும்பிற்கு யாரும் சொல்ல தேவையில்லை. அது இயல்பு.

சந்திரனைக் கண்டதும் மலர்ந்து விடு என்று அல்லியிடம் யாரும் அறிவுறுத்த வேண்டியதில்லை. அது இயற்கை.

தீபா என்னும் பெண்ணின் காதலுக்காகவே படைக்கப்பட்ட இதயம் முகேஷோடது. யாரும் அறியா நொடிப்பொழுதில் மலரும் பூவைப்போல் அவர்களுக்குள் காதல் மலர்ந்து விட்டது. கேமரா வழியே கண் பார்த்து இதயத்திற்குள் இறங்கி விட்டது காதல்!

தீபா- மணிவாசகம் என்னும் வர்த்தக பிரமுகரின் ஒரே மகள். தீபாவிற்கு கோகுல் என்கிற திருமணமான அண்ணனும் உண்டு. மணிவாசகம் ஒரு காலத்தில் வியாபாரத்தில் கொடிகட்டி பறந்து லட்சம் லட்சமாய் சம்பாதித்தவர். யார் கண்பட்டதோ? சீட்டுக்கட்டைப் போல் அவர் வியாபாரம் மளமளவென சரிந்து பெருத்த நஷ்டம்! அதை சரிக்கட்ட சொத்துக்களை விற்க வேண்டிய கட்டாயம். அந்த அதிர்ச்சியும், வேதனையும் தாங்காமல்தான் தீபாவின் அம்மா ஐந்து வருடத்திற்கு முன்பு இறந்துப்போனார்.

தாயை இழந்த மகள் மீது அளவற்ற பாசம் வைத்திருந்தார் மணிவாசகம். அவளுக்கு நல்ல மணவாழ்க்கையைத் தேர்ந்தெடுத்து தரவேண்டும் என்பதில் கவனமா இருந்தார். அதிலும் அவர் ஜாதிப்பந் மிக்கவர்.

ஆனால், தீபாவோ, வேறு ஜாதி முகேஷுடன் காதல் பறவையாய் சிறகடித் பறந்துக் கொண்டிருந்தாள்.

முகேஷ்... தீபா தன் வாழ்க்கையி நுழைந்த பிறகுதான் வசந்தம் வந்தத நம்பினான். தன்னை வற்புறுத்தி சொ ஊரிலேயே ஸ்டுடியோ வைத்து கொடுத் இருக்க வைத்த தந்தையை நன்றியுட நினைத்துக்கொண்டான்.

தீபாவை ஒரு நாள் பார்க்காவிட்டாலு அவன் உலகம் இருண்டு விட்டதைப்போ உணர்ந்தான்.

சந்தன வாசனையை எவ்வள நாட்களுக்கு கூடைபோட்டு மறைக்க முடியும் இயலுகிற காரியமா அது?

இவர்களின் காதல் முதலில் கோகுலி காதுக்கு எட்ட... விதிர் விதிர்த்துப்போ அப்பாவிடம் போட்டு உடைத்தான் மணிவாசகத்திற்கு பெருத்த அதிர்ச்சி.

மகளை கண்டித்தார், அடித்தார் மறுபடியும் அவனைப் போய் பார்த்தால்.. நடக்கக் கூடாததெல்லாம் நடக்கும் என்றார்.

அணை மீறிய வெள்ளத்தை இருகைகளால் தடுத்து நிறுத்திவிட முடியுமா?

தீபா, முகேஷை சந்தித்து நடந்தவைகளை கூறி, "நீங்கள் இல்லாவிட்டால், நான் உயிரோடவே இருக்க மாட்டேன். இப்போதே நம் திருமணம் நடந்ததாக வேண்டும்" என்றாள் பிடிவாதமாய்.

முகேஷிற்கும் அவளை திருப்பி அனுப்ப மனசில்லை.

'பிரிவதற்கா காதலிக்கிறோம்? ஜாதி என்கிற ஒரே காரணத்துக்காக இவளை பறிகொடுத்து காலம் முழுக்க கண்ணீர் விட்டு கொண்டிருக்க முடியுமா? நான் ஆண்! தீபாவை சந்தோஷமாய் வைத்துக் கொள்ள என்னால் முடியும். அந்த தைரியமும், உறுதியும் இருப்பதால்தானே காதலித்தேன்? ஆண் என்பவன் தானொரு ஆண் என்று நிரூபிக்க மக்கள் தொகையை பெருக்கும் காரியத்தில் ஈடுபட்டால் மட்டும் போதும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அது தவறு! தன்னையே நம்பி வருபவளை கைப்பிடித்து கரை சேர்த்து, கண்ணீர் துடைப்பவன் தான் ஆண்மகன்! நானொரு ஆண் சிங்கம் என்பதை நிரூபிப்பேன்!'

அவன் நினைத்ததுப்போலவே தானொரு ஆண்பிள்ளை என்பதை நிரூபித்தான்.

## 6

எட்டப்பர்கள் எங்கும் உண்டு!

முகேஷ் தீபாவை பதிவுத் திருமணம் ...ய்து கொள்ள ஏற்பாடுகளை கவனித்துக் ...ாண்டிருந்தான். முகேஷின் நண்பர்கள் ...ட்டத்தில் ஒரு எட்டப்பன் இருந்தான். அவன் ...ாவை ஒரு தலையாய் நேசித்து, இப்போது ...ிறெரிந்து கொண்டிருப்பவன். திருமண ...ஷயம் கூட அரைமணி நேரம் முன்பாகத்தான் ...ரிவித்து அழைத்திருந்தான் முகேஷ். அந்த ...ப்பு வேறு.

உடனடியாக மணிவாசகத்திற்கு போன் ...ய்து தெரிவித்து விட்டான். அவர் ...ட்களுடன் வந்து சேர்வதற்குள் திருமணம் ...டிந்து விட்டது.

அப்பாவைக் கண்டதும் மிரண்டு ...ானாள் தீபா. முகேஷ் அவரை எதிர்க்கத் ...ணிந்தான். ஆனால் அவரிடம் ஆட்கள் அதிகம் ...ருந்ததால்... முகேஷ் காயப்பட்டான். தீபா ...ழுத்துச் செல்லப்பட்டாள்.

முகேஷ் போலீசிடம் புகார் செய்தான்.

ஸ்டேஷனுக்கு தீபா வருவிக்கப்பட்டாள். ...டன் மணிவாசகம், கோகுல் மற்றும் சில ...றவினர்களும் வந்திருந்தனர்.

"ஏம்மா... உன் பேருதான் தீபாவா?" ...ன்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"ஆமாம்!" என்றாள் நன்றாய் நிமிர்ந்து.

"உனக்கும் இதோ இவருக்கும் ...லையில் பதிவு திருமணம் நடந்ததா?"

"ஆமாம்! ஆனால்!"

"என்னம்மா சொல்லு?"

"இது என் விருப்பத்திற்கு மாறாய் நடந்த ...ருமணம்!"

"தீ..பா!" திடுக்கிட்டு அலறினான் ...முகேஷ்.

"ஆமாம் இன்ஸ்பெக்டர்! இந்த ஆள் என் ...பின்னாலேயே அலைந்தார். நான் திட்டினேன். ...இதெல்லாம் எனக்கு பிடிக்காது என்றேன். மிரட்டினார். என்னை திருமணம் செய்து கொள்ளாவிட்டால் உன் வீட்டையே கொளுத்தி விடுவேன். உன்மேல் ஆசிட் ஊற்றி விடுவேன் என்று மிரட்டினார். அதற்கு பயந்துதான் விருப்பமேயில்லாமல் சம்மதித்தேன்!"

"தீபா... என்ன பேசுகிறோம் என்று தெரிந்து தான் பேசுகிறாயா? நானா உன்னை மிரட்டினேன்?" அலறினான் முகேஷ்.

"சார்... எனக்கு இந்த ஆளோட முகத்தைப் பார்க்கக் கூட விருப்பமில்லை. தயவு செய்து இந்த கல்யாணத்தை செல்லாததாக்கி என்னை எங்கப்பாவோடு சேர்த்து வைத்து விடுங்கள். என்னை காப்பாற்றுங்கள்" கதறி அழுதாள் தீபா.

முகேஷிற்கு ஒன்றும் புரியவில்லை.

'எதற்காக என் மீது நெருப்பை வாரி இறைக்கிறாள்? அவளின் அப்பா இப்படி பேச வேண்டும் என்று மிரட்டி இருப்பாரோ? அப்படியே இருந்தாலும் கூட அவளிடம் எந்தவித பதட்டமும் தெரியவில்லையே! அப்பட்டமாய் பொய் சொல்லிக் கொண்டிருக்கிறோம் என்கிற உணர்வேயின்றி, நிஜமாகவே பெரிய ஆபத்திலிருந்து தப்பிக்க வேண்டும் என்கிற அவசரத்தில் அல்லவா பேசுகிறாள்? ஏன், ஏன்?'

குழப்பத்திலும், வேதனையிலும் இறுகிப்போன முகேஷ் வாயே திறக்கவில்லை.

இன்ஸ்பெக்டர் மணிவாசகத்துக்கு வேண்டப்பட்டவர். அவரையும் கவனிக்க வேண்டிய விதத்தில் கவனிக்கப் பட்டிருந்ததால்,.. முகேஷ் குற்றவாளியானான்.

முகேஷ் மீது, இளம் பெண்ணை மிரட்டி கட்டாய திருமணம் செய்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டது. தீபா அவன் கட்டிய தாலியை கொஞ்சம் கூட வருத்தமோ, சஞ்சலமோ இன்றி கழற்றி அவனிடம் கொடுத்தாள்.

"தீபா... நீயா இப்படி?" என்றான் பொறுக்க மாட்டாமல்.


"ஸாரி... அவசரப்பட்டு ஒரு தப்பான முடிவை எடுத்திட்டோம். அதை புத்திசாலித்தனமா சரிப்பண்ணிக்கிட்ட திருப்தி எனக்கு! வயசுக் கோளாறுல ஏற்படற கவர்ச்சியை காதல்னு தப்பா முடிவுப் பண்ணி ரிஜிஸ்டர் மேரேஜ் வரைக்கும் போய்ட்டோம். நடந்தது ஒரு பொம்மைக் கல்யாணம். அவ்வளவு தான். இனிமேல் என் வாழ்க்கையில் குறுக்கிட வேண்டாம். ப்ளீஸ்!" அவனுக்கு மட்டுமே கேட்கும் விதமான மெல்லிய குரலில் முணுமுணுத்து விட்டு சென்றவளை... நம்ப

முடியாத அதிர்ச்சியோடு வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் முகேஷ்.

முகேஷ் சொல்ல சொல்ல... மிகப்பெரும் திடுக்கிடலோடு முகம் வெளுத்துப் போயிருந்தான் முத்துக்குமார்.

''என்னடாது? தீபாவா அப்படிப் பண்ணினா? நம்பவே முடியலியே! கழுத்திலே தாலி ஏறினப் பிறகு, அதை அவ்வளவு ஈஸியா எப்படி கழற்றி கொடுத்தா? ஏன் அவ மாறிப்போனா?''

''நானும் உன்னை மாதிரிதான். பதில் தெரியாம துடிச்சேன். ஒரு வாரம் கழிச்சு என் குழப்பத்துக்கெல்லாம் விடை தெரிஞ்சது. அவளுக்கு என்மேலே ஏற்பட்டது காதலில்லே இன்ஃபாச்சுவேஷன்! எதையாவது வில்லங்கமா செஞ்சுக்கிட்டிருக்க தூண்டற வயது. என்னை பயன்படுத்திக்கிட்டா! கல்யாணமான கையோட அவளோட தகப்பன் என்கிட்டேர்ந்து அவளை பிரிச்சி, வீட்டுக்கு அழைச்சிட்டுப் போனார் இல்லையா? அவர் அடிக்கலே, உதைக்கலே. இதமா எடுத்து சொல்லியிருக்கிறார். நான் உனக்கு ஏற்கனவே அருமையான மாப்பிள்ளை பார்த்து முடிவு பண்ணி வச்சிருக்கேன். ரொம்ப அழகானவன், பெரிய பணக்காரன், பெத்தவங்க உயிரோட இல்லே. மூணு கார் நாலஞ்சு பங்களா. உன்னை அவர் ஒரு கல்யாணத்துல பார்த்திருக்கார். ரொம்ப பிடிச்சுப்போச்சு. கட்டினா உன்னைதான் கட்டுவேன்னு ஒத்தைக்கால்ல நிக்கிறார். அந்த மாளிகைக்கு நீதான் மகாராணி. நீ இப்ப செஞ்ச கோமாளித்தனத்தைக் கூட அவர் மன்னிச்சுட்டார். புத்திசாலித்தனமா நான் சொல்றபடி நடந்துக்கன்னு ப்ரெய்ன்வாஷ் பண்ணியிருக்கிறார். அவர் பொண்ணாச்சே! புத்திசாலித்தனமா நடந்துக்கிட்டா. பணம், என்னை விடவும் பர்சனாலிட்டி வேற.. நடந்ததை பொம்மை கல்யாணமா நினைச்சு தாலிய கழற்றி கையிலே கொடுத்திட்டுப் போய்ட்டா! இந்த மண்ணோட பெருமையே தாலிதானே? தீபா மாதிரியான பெண்கள் அதுக்கு என்ன மரியாதைத் தர்றாங்க? வசதி வாய்ப்புக்காக இஷ்டத்துக்கு மாத்தி மாத்தி



கட்டிக்கறதனால... அதற்கு அர்த்தமே இல்ல போய்டுச்சே முத்து?''

என்னா ஜீரணிச்சுக்கவே முடியல அப்புறம் என்ன நடந்தது?''

''ஒரே வாரத்த அவளோட அப்பன் பார்த்து வச்சிருந்த பணக்கா மாப்பிள்ளை கையால இன்னொரு தாலி கட்டிக்கிட்டா. அப்ப நான் ஜெயில்லே இருந்தேன். அப்பாவுக்கும், அண்ணனுக்கும் என்மேலே கோபம். குடும்ப கவுரவத்தை குழிதோண்டி புதைச்சிட்ட நீ... இனி எங்க முகத்திலேயே முழிக்காதேன்னு ஜெயிலுக்கு வந்து காறித்துப்பிட்டுப் போய்ட்டார் அப்பா. என்னை ஜாமீன்ல கூட எடுக்கலே. ஃப்ரண்ட்ஸ்தான் எடுத்தாங்க. மூணுமாசம் ஜெயில்லே இருந்தேன். எல்லாமே வெறுத்து போச்சு முத்து. அதான்... அந்த ஊருக்கே ஒ



# அழகுக்கு ஆசைப்பட்டா

**உ**லகில் உள்ள பெண்கள் அனைவரும் தாங்கள் உலக அழகியாக வேண்டும் என விரும்புகிறார்கள். அழகிப் போட்டிகளில் கலந்து கொள்ளவும், ஆண்களை கவரவும் பல பெண்கள் உட... எடையை, சதையை குறைத்து ஒட்டடை குச்சி போல் காட்சி அளிக்கிறார்கள்.

அழகிப் போட்டியில் 'கேட்வாக்' நட... செல்வதற்காக உடல் எடையை குறைத்து வைத்திருக்கும் பெண்களு... எதிர்காலத்தில் கேடு காத்திருப்பதாக பேராசிரியர் ரோஸ் பிரிவ்ஷ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இவர் தான் எழுதியுள்ள மகப்பேறு தொடர்பான நூலில், உடலில் கொழுப்பு சத்து குறைவான பெண்கள் ...ல்லிப் பெண்கள்) ...ருத்தரிப்பதில் சிக்கல் ஏற்பட்டு ...ளதாக தெரிவித்து உள்ளார். ...ந்தவித பெண்களின் ...ருவிடாய் காலத்தில் பிரச்சினை ...தும் ஏற்படுவது இல்லை ...ன்றாலும் கருத்தரிப்பதில் ...லதாமதம் ஏற்படுகிறது. சில ...நேரங்களில் மலட்டுத்தன்மை ...ட ஏற்படுகிறது. எனவே ...டலில் கொழுப்புச் சத்து ...சதைப்பற்று) இருப்பது அவசியம் என பேராசிரியர் ரோஸ் தெரிவிக்கிறார்.

கருத்தரிக்க தேவையான ஆற்றல் கொழுப்பில் இருந்து கிடைக்கிறது எனவும் இவர் தெரிவித்து உள்ளார்.

மேலும் பெண்களின் உடலில் 40 சதவீத அளவிற்கு கொழுப்பு சத்து இருக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

எனவே அழகுக்கு ஆசைப்பட்டு மழலைச் செல்வத்தை இழந்துவிடாதீர்கள்.

-மனோரஞ்சிதம்.



ருட்டை சொல்லிட்டு கிளம்பிட்டேன். பணத்துக்காக தானே அந்த நாய் என்னை இந்தளவு அசிங்கப்படுத்தினா? அந்த பணத்தை என்னால சம்பாதிக்க முடியாதா? பெத்த தகப்பனுக்காக லட்சியத்தை இங்கேயே போட்டுட்டு ஊருக்குப் போனேன். இப்ப மறுபடி வந்திருக்கேன். நான் உழைக்கணும், உயரணும், பெரிய டைரக்டராகணும். அதுக்காக என்ன வேணும்னாலும் செய்யத் தயாராயிருக்கிறேன்.''

முத்துக்குமார் அவன் முதுகில் ஆறுதலாய் தட்டிக் கொடுத்தான்.

''ஜெயிப்பே முகேஷ்! கண்டிப்பா நீ ஜெயிப்பே. உன் கூட நான் இருக்கிறேன். கவலைப்படாதே!''

முகேஷ் தலையசைத்து அதை ஆமோதிப்பவன் போல் புன்னகைத்தான்.

**லை**ப்ரரியிலிருந்து எடுத்து வந்திருந்த பிரபல எழுத்தாளரின் அடர்த்தியான புத்தகத்தை படித்துக் கொண்டிருந்த முகேஷ், அலுப்புடன் அதை மூடி வைத்தான்.

முத்துக்குமார் அவனை கவனித்தான்.

''என்ன முகேஷ்! உனக்கு பிடிச்ச ரைட்டரோட கதையாச்சே. படிச்சா முடிக்காம வைக்க மாட்டியே! என்னாச்சு கதை பிடிக்கலியா?''

''ப்ச்.. இதிலேயும் கல்யாணம், தாலி அது இதுன்னு பயங்கர சென்டிமெண்ட் டயலாக் தான். எனக்குப் பிடிக்கலே.''

''நீ ரொம்ப மாறிட்டே!''

''மாத்திட்டாங்க. பட், நல்ல மாற்றம்தான். உண்மை எது, பொய் எதுன்னு ஒரு தெளிவு கிடைச்சிருக்கு. அதுக்காக தீபாவுக்குதான் தாங்க்ஸ் சொல்லணும்!''

''அவளைப் பத்திய பேச்சு எதுக்கு? மறந்துடு முகேஷ்.''

''அவளை மறந்திடலாம். பட், காயம் நினைவுப் படுத்திக்கிட்டே இருக்கு. ஆமாம்... வெளியிலே என்ன பேண்டு வாத்தியம் சத்தம்?''

''ஓ... அதுவா? இந்த தெருவிலே பத்து வீடு தள்ளி நாளை காலைல கல்யாணம். இன்னைக்கு பெண் அழைப்பு. ஊர்வலம். அதான்.''

''தாலி, மந்திரம், மறுபடி மறுபடி அதே வார்த்தைகள் தான் காதிலே விழுந்திட்டிருக்கு. எல்லாமே சுத்த ஹம்பக்'' என்றான் வெறுப்பாக.

''முகேஷ்... உன்னை நினைச்சா எனக்கு கவலையா இருக்கு. தீபாங்கற ஒரு பொண்ணு உன்னை ஏமாத்தினதுக்காக ஒட்டு மொத்த பெண்களையே குறை சொல்றியா?''

''நோ... நோ... யூ ஆர் ராங்! நான் லேடீஸை குறை சொல்லலே. இந்த கலாசாரம், பண்பாட்டை தான் குறை சொல்றேன். தீபா மாதிரியான மனநிலை கொண்ட பெண்கள் பெருகிட்டு வர்றாங்க. சும்மா பாசாங்கிற்காக வேஷம் போட்டு கலாசார சிறுமை செய்யாம வாழ்க்கையை அவரவர் போக்கிலே எத்துக்கிட்டா நல்லதுதானே? எந்தவித நிபந்தனையுமில்லாம ஃபாரின்ல வாழற மாதிரி

வாழ்ந்திட்டு போறதை விட்டுட்டு ஐயரை உக்கார வச்சி, மந்திரம் சொல்லி, தாலின்னு ஒரு கயிறை கட்டி அதை அசிங்கப்படுத்தணுமா?'' என்றான் தீவிரமாக முகேஷ்.

''ஸ்டாப்... ஸ்டாப்! இந்தப் பேச்சு இதுக்கு மேலே தொடர வேண்டாம். நடக்க வேண்டிய காரியத்தைப் பார்ப்போம். நான் சொன்னேனே சம்பத்ங்கற சீரியல் டைரக்டரைப் பத்தி! அவர் நாளைக்கு உன்னை அழைச்சிட்டு வரச் சொன்னார். நாளை நாம அவரை பார்க்கப் போகிறோம். ஓக்கே?'' என்றான் பேச்சை மாற்றி.

''ஓக்கே!''

## 7

''**வ**ணக்கம் சார்! நான் சொல்லியிருந்தேனே என் ஃப்ரண்ட் முகேஷ்! இவன் தான் சார்!'' என்று அறிமுகப்படுத்தினான் முத்துக்குமார்.

''வாப்பா!'' என்று வரவேற்ற சம்பத்திற்கு வயது நாப்பதிற்கு மேல். கறுப்பாய், பின்வாங்கிய முன் நெற்றியோடு இருந்தவருக்கு ஆளை பார்த்த மாத்திரத்தில் எடைபோடும் நுண்ணிய கண்கள்.

முகேஷ் கைகூப்பினான்.

''வணக்கம் சார்!''

''வணக்கம்.. உக்காருங்க ரெண்டு பேரும். வேலு மூணு காபி எடுத்துக்கிட்டு வா'' என்று உள்ளே பார்த்து குரல் கொடுத்தார்.

''முத்து தம்பி உங்களைப் பத்தி சொல்லுச்சு. என்கிட்டே அஸிஸ்டண்டா சேரணும்னு சொன்னீங்களாம். டைரக்ஷன்ங்கறது அவ்வளவு ஈஸியான வேலையில்லை. எடுத்ததுமே ஜெயிச்சு உயரப்போய் கட்டு கட்டாய் பணம் சம்பாதித்து விட முடியாது. உழைக்கணும். நாய் மாதிரி உழைக்கணும். உன்னால் முடியுமா?''

''முடியும் சார்! சாதிக்கணும்ங்கற வெறி இருந்தா வெற்றியை எட்டிப் பிடிச்சிடலாம். ஒவ்வொரு விதைக்குள்ளும் ஒரு மரம் இருப்பதை யாரும் உணருவதில்லை. ஆனா, விதை முளைவிட்டு வளர்ந்து கிளை பரப்பி, பிரம்மாண்டமாய் நிற்கும்போதுதான்.. அடடா.. இவ்வளவு பெரிய மரம் அந்த சின்ன விதைக்குள்ளிருந்தல்லவா வந்ததுன்னு ஆச்சர்யப்படுவாங்க. நானும் என்னை எல்லோரும் பிரம்மிப்போட பார்க்க வைப்பேன் சார்'' அடக்கமாய், அதே சமயம் தெளிவாய் பேசினான் முகேஷ்.

சம்பத்தின் முகத்தில் புன்னகை உற்பத்தியானது.

''வெல்லெட் முகேஷ்! உனக்குள்ளே இருக்கு. பிரகாசமா வருவே: இப்படிப்பட்ட இளைஞர்கள் தான் எனக்குத் தேவை. அடுத்த வாரம் ஒரு பெரிய பேனருக்காக மெகா சீரியல் பண்ணப் போகிறேன். ஏவிஎம்ல் ஷூட்டிங். இருந்த நம்பர் ஒன் நடிகை தான் ஹீரோயின். விளம்பரத்திலேயே பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறோம். உன்னோட திறமைக்கு அங்கு நீனி கிடைக்கும். அடுத்த வாரம் என்னை வந்துப் பார்!'' அவன் தோளில் தட்டிக் கொடுத்தார்.

புல்லரித்துப் போனான் முகேஷ்.

''ரொம்ப.. ரொம்ப நன்றி சார்'' நெகிழ்ச்சியுடன் கை கூப்பினான்.

நண்பர்கள் இருவரும் வெளியில் வந்தனர்.

''ரொம்ப தாங்க்ஸ் முத்து!''

''எதுக்கு?''

''இந்த டைரக்டரைப் பத்தி கேள்விப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டையே கலக்கின ரெண்டு மெகா சீரியலை தந்தவர். சிறந்த சின்னத்திரை இயக்குனர்னு அவார்டு வாங்கினவர். அவரிடம் அஸிஸ்டண்டா சேர்றது சாதாரண விஷயமில்லை. நீயில்லேன்னா.. நான் இவரை சந்திச்சிருக்க முடியுமா?''

''அதுக்காக? தாங்க்ஸ் சொல்லிடுவியா? ஏன்டா.. நான் யாரு? உன் ஃப்ரண்ட் தானே? இது என் கடமையில்லையா?''

''சரி... சரி.. தெரியாம சொல்லிட்டேன் விடு!'' என்றான் மன்னிப்பு கேட்கும் பாவனையுடன்.

''உக்காரு.. உன்னை ட்ராப் பண்ணிட்டு நான் ஆபீஸ் போகிறேன்.''

''முத்து.. வீட்டுக்கு போய் தனியா இருந்தா... பழைய நினைவுகள் வந்து கஷ்டப்படுத்துது. சும்மா காலாற நடந்திட்டு வர்றேன். என்னை மவுண்ட் ரோடுல ட்ராப் பண்ணிடேன்.''

''பார்த்துடா.. வழி தவறிப் போய்டப் போறே?''

''என்ன கிண்டலா? சென்னையிலேயே ...ங்கெ படிச்சவன் நான். இந்த ஊரு புதுசா எனக்கு?''

வெகு நாட்களுக்குப் பிறகு சென்னையின் ...றுகறுப்புக்கு பெயர் போன மவுண்ட்ரோடு ...ரியாவின் பிளாட்பாரத்தில் மெல்ல நடை பயின்று கொண்டிருந்தான் முகேஷ். பூட்டு சாவி உட்பட புத்தகம் வரை விற்றுக் கொண்டிருந்தவர்களை வேடிக்கைப் பார்த்தபடி நடந்தான்.

அங்கங்கே சில கடைகளில் வெளிநாட்டு பயணிகள் பர்ச்சேஸ் பண்ணிக் கொண்டிருந்தார்கள். அதில் ஒருத்தி அடர்த்தியான சிவப்பு நிறத்தில் சேலை அணிந்து.. குங்குமப் பொட்டு வைத்து, பிரவுன் நிற முடியை பின்னி விட்டிருந்தாள்.

இந்திய நாட்டு பண்பாட்டில் மோகம் கொண்ட அந்நிய நாட்டுப் பெண்!

முகேஷிற்கு ஒரு பக்கம் சந்தோஷமாயிருந்தாலும், இன்னொரு பக்கம் சிரிப்பும் வந்தது. அழகான பார்பி பொம்மைக்கு சேலை கட்டி விட்டது போலிருந்தது.

திரும்பி திரும்பி அவளைப் பார்த்தபடி நடந்தவனை ''சார்!'' என்ற குரல் அவனை ஈர்த்தது.

ஏதோ ரியல் எஸ்டேட் விளம்பரம் கொண்ட பேப்பரை வருவோர் போவோரிடம் விநியோகித்துக் கொண்டிருந்த அந்த பெண்..!

முகேஷ் கண்கள் சுருக்கி அவளைப் பார்த்தான்.

'இவளை எங்கோ பார்த்திருக்கோமே! எங்கே?'

'ஓ.. நினைவு வந்துவிட்டது. ரயிலில் டிக்கட் எடுக்காமல் ட்ராவல் செய்து மாட்டிக் கொண்டவள்.'

அவளுக்கும் அவனை பார்த்ததும் சற்று நேர நினைவு கசங்கலுக்குப் பிறகு ஞாபகம் வந்தாலும் தன் வியப்பை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அந்த பிட் நோட்டீஸை அவனிடம் நீட்டினாள்.

வாங்கியவன் அதை பிரித்துப் பார்க்காமலேயே பேன்ட் பாக்கெட்டில் செருகிக் கொண்டான்.

அவள் அடுத்த பாதசாரியிடம் கவனம் செலுத்த.. முகேஷ் நடையைக் கட்டினான்.

சற்று தூரம் நடந்தவன் தன்னிச்சையாய் திரும்ப.. அதே சமயம் அவளும் இவனை திரும்பிப் பார்த்து சட்டென வேறு பக்கம் தலையை திருப்பிக் கொண்டாள்.

முகேஷ் தனக்குத் தானே சிரித்து கொண்டான்.

**ஏ**வி.எம். ஸ்டுடியோ பிஸியாக இருந்தது.

டிராலியில் அமர்ந்தபடி வியூ பார்த்துக் கொண்டிருந்தார் சம்பத்.

கேமராமேன் லைட்டிங் கோணம் பற்றி உதவியாளர்களுடன் விவாதித்து இடம் மாற்றிக் கொண்டிருந்தார்.

ஆர்ட்டிஸ்டுகள் மேக்கப்புடன் ஹேண்ட் ஃபேனுடன் கால்மேல் கால் போட்டபடி அமர்ந்திருந்தனர்.

முகேஷ் கதாநாயகிக்கு காட்சியை விளக்கி ஏற்றத்தாழ்வுடன் வசனத்தை சொல்லிக் கொண்டிருந்தான்.

அதே ஸ்டுடியோவில் ஒரு பக்கம் இரண்டாவது கதாநாயகியாக நடிக்கும் பானுஸ்ரீயிடம் ஒரு இளம் பெண் அழகு சாதனப் பொருட்களை காட்டி அதனுடைய நிரந்தரப் பயன்பாடுகளை விளக்கிக் கொண்டிருந்தாள்.

''அத்தனையும் ஃபாரின் புராடக்ட் மேடம். இதை யூஸ் பண்ணினால் மேக்கப் கலையாது. தவிர, மேக்கப்பிற்கென்று வேறு க்ரீம்களை நீங்கள் பயன்படுத்த வேண்டாம். மைக்கேல் ஜாக்ஸன் கூட இந்த க்ரீமை தான் யூஸ் பண்றார். மேலும்... இதோ இந்த ஸ்கின் க்ரீம் முகத்து சுருக்கங்களை அடியோடு போக்கி இளமையை நிலைக்கச் செய்யும். தொடர்ந்து மூன்று மாதம் இரவில் பயன்படுத்தி வந்தால்... கண்களின் கருவளையமும் சுருக்கமும் காணாமல் போய்விடும்: முகப்பருக்களை வராமல் தடுப்பதுடன் ஏற்கனவே பருக்களால் உள்ள வடுக்களையும் பள்ளங்களையும் மறைக்க செய்து விடும் ஆற்றல் கொண்டது. இந்த இருபத்தைந்து மில்லி டியூப் பேஸ்ட் இரண்டாயிரத்து ஐநூறு மட்டும் தான்.''

''வாட்? இரண்டாயிரத்து ஐநூறு ரூபாயா?'' வாயை பிளந்தாள் பானுஸ்ரீ.

''விலைக்கேற்ற பயனுண்டு மேடம்! நீங்கள் இதை உடனே வாங்க வேண்டாம். நானே இப்போது உங்களுக்கு மேக்கப் போட்டு விடுகிறேன். ஸ்க்ரீனில் உங்களைப் பாருங்கள். இதற்கு முன்பு இருந்த முகத்திற்கும், இப்போது உள்ள முகத்திற்கும் உள்ள வித்தியாசத்தை!''

அவளை எப்படியும் வாங்க வைத்து விடவேண்டும் என்பதில் குறியாக இருந்தாள்.

''முகேஷ்!..'' டைரக்டர் அழைத்தார்.

''இதோ வந்துட்டேன் சார். எக்ஸ்க்யூஸ்மீ மேடம்!'' என்று ஹீரோயினிடம் மன்னிப்பு

கேட்டு விட்டு டைரக்டரிடம் ஓடினான்.

''அந்தம்மா ரெடியா?''

''ரெடி சார்.''

''அடுத்த சீன் என்ன?''

''பானுஸ்ரீயும், அவங்களோட கல்லூரித் தோழியும் காதலைப் பத்தி பார்க்ல உட்கார்ந்து பேசிக்கிட்டிருக்கிற சீன் சார்.''

''பானு ரெடியா?''

''மேக்கப் போட்டுக்கிட்டு இருக்காங்க சார்.''

''நாலு மெகா சீரியல்ல கமிட் ஆனதும் தன்னால பந்தா வந்திடுது பாரு. முதல்லயெல்லாம் செட்டுக்கு வரும்போதே மேக்கப்போட தான் வருவா. சரி.. கல்லூரித் தோழியா நடிக்க சித்ராவை கூப்பிட்டிருந்தேனே.. வந்துட்டாளா?''

''சார்.. இப்பதான் சித்ரா வீட்லேர்ந்து ஃபோன் வந்தது. கேரளாவிலே அவங்க பெரியம்மா இறந்துட்டாங்களாம். அவசர அவசரமா கிளம்பிட்டிருக்காங்களாம்'' என்றான் மற்றொரு அஸிஸ்டண்ட் டைரக்டர்.

''அடடா! இப்ப என்ன பண்றது? ஃப்ரண்ட் கேரக்டருக்கு இப்ப போய் யாரைத் தேடறது?'' டென்ஷன் ஆனார் சம்பத்.

''வேணிக்கு ஃபோன் பண்ணி வரச் சொல்லட்டுமா சார்?''

''அண்ணி, அக்கா கேரக்டர் பண்றவளை காலேஜ் ஸ்டுடண்டா நடிக்க வச்சா சாதிச்சுப்புவாங்க!'' கவலையுடன் மோவாயை சொறிந்தபடி திரும்பியவரின் கண்களில் அவள் விழுந்தாள்.

பானுஸ்ரீயிடம் பேரம் பேசிக் கொண்டிருந்தவள் அவர் கண்களை கவர்ந்தாள்.

''முகேஷ்.. அங்கே பார்.. பானுவிடம் ஒரு பொண்ணு பேசிக்கிட்டிருக்காளே.. அவளை அழைச்சிட்டு வா!''

முகேஷ் அவர்களை நோக்கிச் சென்றான்.

''எக்ஸ்க்யூஸ் மீ., மேடம்''

குரல் கேட்டு திரும்பினாள்.

முகேஷினுள் மின்னல் அடித்தது.

'மறுபடியும் அவள் தான்.'



**சற்று** தள்ளி படுத்திரு[ந்த] முகேஷிடமிருந்து சிரிப்பொலி கேட்டு[...] ஆச்சர்யமாய் திரும்பிப் பார்த்தா[ன்] முத்துக்குமார்.

# பழமையான பழக்கம்...

ஆப்பிரிக்க நாட்டில் இப்போது பெண்கள் பெரியவளாகிவிட்டால் தலையில் ஒரு சேவலை வைத்து, அந்த தெருவில் உள்ள மற்ற பெண்களை அழைத்து வந்து அவர்கள் நீரை கொப்பளித்து, ஆசீர்வதித்தால் தீட்டு கழிந்துவிடும் என்பதை பழக்கமாக கொண்டுள்ளனர்.

-வச்சலா பார்த்தசாரதி, பாரீஸ்.



சுழன் [...] கொண்டிருந்த ஃபோனை[...] பார்த்தபடி சிரித்து[...] கொண்டிருந்தான்.

'அப்படி என்ன[...] இருக்கிறது அதில்?' என்று முத்துக்குமாரு[...] ஃபோனை பார்த்தான்[...] ஒன்றும் [...] பிடிபடவில்லை.

முகேஷை [...] சீண்டினான்.

''எதுக்கு[...] ஃபோனை பார்த்[து] சிரிக்கிறே?''

''ம்.. ஓயாம ஒ[...] இடத்திலே [...] சுத்திக்கிட்டிருக்கேன்னு என்ன கிண்டலா? நான் வேற ஒண்ணை நினைச்[சு] சிரிச்சுக்கிட்டிருந்தேன்'' என்றான் முகேஷ்.

''அதென்ன வேற ஒண்ணு?''

''நான் உன்கிட்டே ஒரு முறை [...]சொன்னேனே.. டிரெய்ன்ல ஒரு பொண்ணு [டி]க்கட் வாங்காம டிராவல் பண்ணி [...]டி.ஆர்.கிட்டே மாட்டிக்கிட்டான்னு''

''ஆமாம்.. அம்புஜம்!''

''பொம்பளை பேராசே.. நல்லா [ஞா]பகம் வச்சிருக்கே!''

''ரொம்ப அலட்டாதே. சொல்லு [அ]துக்கென்ன?''

''அவளை இருபது நாள் முன்னால [மௌ]ண்ட் ரோடுல பார்த்தேன். பிட்நோட்டீஸ் [...]நியோகம் பண்ணிக்கிட்டிருந்தா. இப்ப [...]ந்தும் அவளை பார்த்தேன்.''

''எங்கே மக்கடையிலே ம[...] போட்டுக்கிட்டிருந்தாளா?''

''என்ன நக்கலா?''

''இல்லே.. அந்த அம்புஜம் ஒவ்வொரு அவதாரமா எடுத்துக்கிட்டிருக்காளே.. அதை சொன்னேன்.''

''சொன்னா ஆச்சர்யப்படுவே! நேத்து [இ]ங்க ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு தான் வந்திருந்தா!''

''இப்ப எனக்கு புரிஞ்சு போச்சு!''

''என்ன?''

''அந்த அம்புஜத்திற்கு உன் மேலே ஒரு [...] இது இருக்கு. அதனால தான் உன் கவனத்தை [ஈ]ர்க்கிற மாதிரி உன் கண்ணெதிரே நடமாடிக்கிட்டிருக்கா.''

''சேச்சே! அந்த மாதிரி எல்லாமில்லே. எதேச்சையா தான் பார்த்துக்கறோம். நேத்து பியூட்டி காஸ்மெடிக் ஐட்டம் எதையோ காட்டி ஆர்ட்டிஸ்ட்களிடம் விித்துக்கிட்டிருந்தா.''

''பல தொழில் மன்னி போலிருக்கு!''

''குறுக்கே பேசாம கவனி. ஒரு சுவாரஸ்யமான விஷயம் அங்கே நடந்தது.''

''என்னாச்சு?''

''நேத்து திடீர்னு ஒரு ஆர்ட்டிஸ்ட் வரலை. இவளைப் பார்த்த டைரக்டர் அந்த கேரக்டருக்கு அந்தப் பொண்ணு சூட்டாவா.. நீ போய் கூட்டிட்டு வான்னு என்னை அனுப்பினார். நான் போய் எக்ஸ்க்யூஸ்மீ மேடம்னு கூப்பிட்டேன். திரும்பிப் பார்த்தால்.. அவள்! அவளுக்கும் ஆச்சர்யம். எனக்கும் ஆச்சர்யம்.''

''உன்கிட்டே பேசினாளா?''

''அவசியமில்லையே! பட், அவளும் என்னை அங்கே அதுவும் ஒரு அஸிஸ்டண்ட் டைரக்டரா எதிர்பார்த்திருக்க மாட்டா சிரிச்சா. அவ்வளவு தான். டைரக்டர் நடிக்கறியாம்மான்னு கேட்டதுக்கு மாட்டவே மாட்டேன்னு அலறி உடம்பெல்லாம் லேசா நடுங்கினதை நானே பார்த்தேன்.''

''ஜெயிமான்னா அவ்வளவு பயமா?''

''இல்லே.. அதையும் தாண்டி வேறு ஏதோ காரணம் இருக்கணும்.''

''சரி.. இந்த சம்பவத்துக்கும் இப்ப நீ சிரிச்சதுக்கும் என்ன சம்பந்தம்?''

''அவளை முதமுதல்ல டிரெய்ன்ல பார்த்தப்ப.. ரொம்ப ரஃபா நடந்துகிட்டா. டிக்கட் வாங்காம டிராவல் பண்றதை யாரும் கண்டுபிடிச்சிடக் கூடாதுன்னு அடிக்கடி பாத்ரூம் போய் வந்துக்கிட்டிருந்தா. கடைசியிலே பாத்ரூம்லேயே மாட்டிக்கிட்டா. அதை நினைச்சேன். சிரிப்பு வந்தது.''

முத்துக்குமார் துளைத்து விடுவதைப் போல் அவனை பார்த்து விட்டு சிரித்தான்.

''நீ ஏன் சிரிக்கிறே?''

''ஒண்ணுமில்லே!''

''பொய் சொல்றே!''

''சிரிக்கணும்னு தோணுச்சு சிரிச்சேன். ஆனா, என் சிரிப்புக்கான காரணம் மிக விரைவில் கிடைக்கும் அப்ப சொல்றேன்.''

''உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு? காரணமே இல்லாம சிரிப்பு வருமாம். அப்புறம் காரணம் வருமாம். என்னடா சங்கதி இது?''

''யானை வரும் பின்னே.. மணியோசை வரும் முன்னேன்னு சொல்வாங்களே! அந்த மாதிரி! சரி.. எனக்கு தூக்கம் வருது... குட்நைட்!'' என்று கூறிவிட்டு அவனுக்கு முதுகு காட்டிக் கொண்டு திரும்பி படுத்து விட்டான் முத்துக்குமார்.

**ஃபோ**ன் ஒடிக் கொண்டிருந்ததே தவிர

கொஞ்சமும் காற்று உறைக்கவில்லை.

உடம்பெங்கும் முத்து முத்தாய் வியர்வை. டவலால் துடைத்துக் கொண்ட முகேஷ் வெற்றுடம்போடு இருந்தான்.

இன்று அவனுக்கு ஷூட்டிங் இல்லை. அதனால் வீட்டில் இருந்தான். முத்துக்குமார் தூர்தர்ஷன் போய் விட்டிருந்தான். தனியே வீட்டில் இருக்க போர் அடித்தது. இந்த வெயிலில் வெளியே போகவும் பிடிக்கவில்லை.

அதனால் உருப்படியாய் எதையாவது செய்வாமே என்று, தன்னுடைய சட்டைகளையும், முத்துக்குமாருடைய சட்டைகளையும் அயர்ன் பண்ணிக் கொண்டிருந்தான்.

அவனுக்கு பழைய பாடல்கள் என்றால் பிரியம். அதனால் டேப்பில் பழைய பாடல் சன்னமாய் ஒலித்துக் கொண்டிருந்தது.

அதே சமயம்.. காலிங்பெல் அலறியது.

''ப்ச்.. யாரிந்த நேரத்தில்?'' அலுத்தபடி அயர்ன் பாக்ஸ் ஸ்விட்சை அணைத்து விட்டு வாசல் கதவை திறந்தான்.

''சார்.. இந்த வாஷிங் பவுடர் புதுசா மார்க்கெட்டுக்கு..'' என்று ஆரம்பித்த அந்த பெண்.. அவனைப் பார்த்ததும் மேற்கொண்டு வார்த்தை வராமல் தடுமாறி நின்றாள்.

முகேஷிற்கும் அதே நிலை!

மறுபடியும் அவன்.

'அங்கே, இங்கேன்னு கண்களில் பட்டவள் கடைசியில் வீட்டிற்கே வந்து விட்டாளா?'

'கடவுளே.. இதென்ன? எங்கே சென்றாலும் இவர் பார்வையில் படவேண்டியதாயிருக்கிறதே?' சங்கடத்துடன் அவனைப் பார்த்து சிரிக்க முற்பட.. முகேஷ் வாய்விட்டு சிரித்து விட்டான்.

சங்கடம் அகன்று போக அந்த சிரிப்பில் அவளும் கலந்துக் கொண்டாள்.

சிரித்துக் கொண்டே இருமினாள்.

தொண்டை வறண்டு போயிருந்தது.

''கொஞ்சம் தண்ணீர் கிடைக்குமா?'' என்று கேட்டாள்.. தயக்கமாய்.

''கொஞ்சமென்ன.. நிறையவே தருகிறேன். உள்ளே வாங்க..'' என்றழைத்தவன்.. ஹேங்கரில் தொங்கிய சட்டையை எடுத்து அவசரமாய் அணிந்துக் கொண்டான்.

தயங்கி.. தயங்கி உள்ளே வந்தாள்.

''உக்காருங்க..!'' சேரை இழுத்துப் போட்டான்.

அமர்ந்தாள்.

தண்ணீர் கொண்டு வந்து தந்தான்.

வாங்கி ஆவலாய் குடித்தாள்.

கழுத்து பகுதியெல்லாம் வியர்வை[...] நனைந்திருந்தது.

'பாவம்.. வெயிலில் அலை[...] திரிந்திருக்கிறாள்.'

பரிதாபப்பட்டான்.

''ரொம்ப தாங்க்ஸ்.. நான் வரட்டுமா[...]'' என்று எழுந்துக் கொண்டாள்.

''வந்த வேலையை முடிக்காமலே[...] போறீங்க?''

''...?'' புரியாமல் பார்த்தாள்.

''அதாங்க.. வாஷிங் பவுடர் விக்கணும்[...] தானே வந்தீங்க?''

''அது.. வந்து இது நல்ல பவு[...] மார்க்கெட்ல புதுசா வந்திருக்கு. இ[...] வாங்கினா பெப்ஸோடன்ட் பேஸ்ட் ஒன்[...] ஃப்ரீயா தருவோம்.'' என்றாள் அவன[...] நிமிர்ந்து பார்க்காமலேயே.

''கண்டிப்பா வாங்கிக்கறேன். முதல்[...] உக்காருங்க!''

அமர்ந்தாள்.

''வித விதமா அவதாரம் எடுக்கறீங்[...] அன்னைக்கு மவுண்ட்ரோடுல, அடுத்த மு[...] ஏவி.எம். ஸ்டுடியோவில, இப்ப இங்கே... ஏ[...] இப்படி?''

''நிரந்தரமா எந்த வேலையு[...] கிடைக்கலேன்னு அர்த்தம்.'' முகத்தி[...] வேதனையின் சாயல்.

''அதுக்காக எரிக்கிற வெயில்[...] அலையறீங்க, கஷ்டமாயில்லே?''

''பசிங்கற உணர்வு இலலேன்னா[...] வெயில், மழைங்கற உணர்வு[...] இருந்திருக்குமோ, என்னவோ? உழைக்கா[...] எப்படி சார் சாப்பிட முடியும்?''

முகேஷ் அவளை ஆச்சர்யமா[...] பார்த்தான்.

''உங்களை நான் ஒண்ணு கேட்டா தப்பு[...] நினைக்க மாட்டீங்களே?''

''கேளுங்க..''

''உங்களை இப்படி பார்க்கற[...] ஆச்சர்யமாயிருக்கு மிஸ் அம்புஜம். கடுமை[...] உழைச்சி சாப்பிடணும்னு நினைக்கிற நீங்க[...] அன்னைக்கு டிக்கட் வாங்காம டிரெய்ன்[...] டிராவல் பண்ணினது?''

அவன் சொல்லி முடிக்குமு[...] கலகலவென சிரித்தாள்.



''ரெண்டு விஷயத்தையும் தப்பா சொல்றீங்க! முதல்ல என்பேரு அம்புஜம் இல்லை. ரஞ்சனா. ரெண்டாவது டிக்கட் வாங்காம டிராவல் பண்றது ரொம்ப கேவலமான விஷயம்னு எனக்கே நல்லாத் தெரியும். ஆனா, சந்தர்ப்பமும், சூழ்நிலையும் என்னை அந்த கேவலமான விஷயத்தை செய்ய காரணமாயிடுச்சு'' என்றவளின் கண்கள் ஈரமானது.

இளகிப் போனான் முகேஷ்.

''அப்படியென்ன பிரச்சினை ரஞ்சனா?''

இதமாய் வெளிப்பட்ட அவனின் தொனி, அவளுள் அதுவரை படர்ந்திருந்த அடர்த்தியான வேதனையின் படிவம் சற்றே விலகுவதுப் போலிருந்தது.

அவனை நேருக்கு நேர் பார்த்து புன்னகைத்தாள்.

''இத்தனை முறை யதேச்சையாக சந்திச்சிருக்கிறோம். இனி மேலும் சந்திப்போம்ங்கற நம்பிக்கை நிறையவே இருக்கிறது. அப்ப சொல்கிறேன். இன்னும் பல தெருக்கள் அலைய வேண்டியிருக்கு. இந்த பவுடருக்கான பணத்தை கொடுத்தால் கிளம்பி விடுவேன்! ப்ளீஸ்..'' என்றாள் சிநேகமாய் ரஞ்சனா.

முகேஷ் முறுவலித்தபடி பாக்கெட்டில் கையை விட்டான்.

## 9

**லே**டீஸ் ஹாஸ்டல்!

ரஞ்சனா இரவு உணவை முடித்து விட்டு அறைக்கு சென்று படுத்து விட்டாள். அந்த அறையில் அவளைத் தவிர மேலும் நான்கு பேர் இருந்தனர். மாதம் எழுநூற்றைம்பது ரூபாய் கட்டினால் போதும். மூன்று வேளை உணவுடன் தங்கிக் கொள்ள அறை! சிட்டியிலேயே மிக குறைந்த அளவில் வாடகை வாங்கும் ஹாஸ்டல் இதுவாகத்தான் இருக்க முடியும். ஏடாகூடமாய் சாப்பாடு, மெகா சைஸ் கொசுக்களுடன் காற்று வசதியில்லாத அறையில் உறங்கியாக வேண்டிய கட்டாயம்.

ரஞ்சனாவுக்கு எதுவும் குறையாய் தெரியவில்லை. பாதுகாப்பாய் நாலு சுவர்களுக்கு மத்தியில் பெண்கள் புடைசூழ இருக்கிறோம் என்பதே நிம்மதியாக இருந்தது.

ஹாஸ்டலுக்கு வாடகை பணம் கட்டுமளவிற்காவது சம்பாதித்தாக வேண்டிய கட்டாயத்தால்தான்... கிடைக்கிற வேலைகளை எல்லாம் செய்து கொண்டிருந்தாள். முடிந்தால் சித்தாள் வேலைக்கு செல்லக்கூட அவள் தயாராக இருந்தாள்.

கண்மூடி படுத்தவளுக்கு அவன் நினைவு வந்தது.

முகேஷ்! அதுதானே அவன் பெயர்? ரயிலில், வரும்போது வலிய என்னிடம் அறிமுகப்படுத்திக் கொண்டபோது இந்தப் பெயரை தானே சொன்னான்?

ரயில் சிநேகம் ரயிலோடு முடிந்து போகும் என்பார்கள். அதுவும் இவனுடன் சிநேகமும் இல்லை. பிறகெப்படி எங்கே சென்றாலும் இவனை சந்திக்க நேரிடுகிறது?

சிரிப்பு வந்தது.

'அப்படியென்ன பிரச்சினை ரஞ்சனா?'

அந்த வார்த்தைகள் தான் எவ்வளவு மென்மையாய் அக்கறையாய் வெளிப்பட்டன? எத்தனை வருடமாகி விட்டன இப்படிப்பட்ட வார்த்தைகள் கேட்டு? எண்ணும்போதே சிறு கற்களை கஷ்டப்பட்டு விழுங்குவதுப் போல் சொல்லொணா வேதனை எழுந்தது.

கண்களுக்குள் கடந்து சென்ற கறுப்பு நாட்கள் மறுபடி ஒருமுறை வந்துப் போனது.

**அ**ண்ணன் இப்படி அகால மரணமடைந்து விடுவார் என்று ரஞ்சனா சற்றும் எதிர்பார்க்கவில்லை.

காய்ச்சல் என்று படுத்தவன் தான் வெங்கடேசன். ஒரு வாரமாகியும் விடவில்லை. கூடவே மஞ்சள் காமலையும் இருந்து தொலைக்க இதற்கு பத்தியம் என்று கொடுக்கும் உணவு அதற்கு ஆகவில்லை. அதற்கென கொடுத்த மருந்து இதற்கு பக்க விளைவு ஏற்படுத்த... படாதபாடுபட்டு பத்தாவது நாள் கண்ணை மூடிவிட்டான் வெங்கடேசன்.

இறக்கும் போது முப்பத்தேழு வயது தான் அவனுக்கு. மனைவி கலக்ஷனா. ஒரே பெண் அஞ்சு. எட்டு வயது. மின்சார துறையில் காண்ட்ராக்ட் அடிப்படையில் எலக்ட்ரீஷியனாக இருந்தான். கஷ்ட ஜீவனம் தான்.

கருணை அடிப்படையில் நிர்வாகம் கலக்ஷனாவுக்கு துப்புரவு பணியை போட்டுக் கொடுத்தது. அவள் எட்டாவது வரைக்கும் தான் படித்திருந்தாள். அதனால், தன் தகுதிக்கு அதற்கு

மேல் பெரிய வேலை கிடைக்காது என்பதும் தெரியும். தவிர காண்ட்ராக்ட் அடிப்படையில் பணிபுரிந்த தன் கணவரின் மரணத்திற்கு பிறகு தனக்கொரு வேலை கிடைத்தது சட்டப்பூர்வமான விஷயமல்ல மனிதாபிமான அடிப்படையில் தான் என்பதும் நன்றாக தெரிந்தது.

வெங்கடேசனின் ஒரே தங்கை தான் ரஞ்சனா. பெற்றோரை சிறுவயதிலேயே இழந்து விட்டவள். அண்ணனின் நிழலில் பத்து வருடமாய் இளைப்பாறிக் கொண்டிருந்தாள். இருந்த ஒரே ரத்தபந்தம் அதையும் இழந்ததில் பலத்த அதிர்ச்சி.

அண்ணனே போனபின் அண்ணி தன்னை வைத்து காப்பாற்றுவாளா? என்னும் பெருத்த நியாயமான சந்தேகமும், பயமும் எழுந்தது. ஆனால், கலக்ஷனா, அந்தளவு கொடுமைக்காரியாய் இல்லை. தன்னுடனேயே ரஞ்சனாவை வைத்துக் கொண்டாள். ஆனால், ஒன்றை மட்டும் தெளிவாய் கூறிவிட்டாள்.

''இதோபாரு ரஞ்சனா! இதுநாள் வரைக்கும் இருந்த நிலைமை வேறு. இப்போதிருக்கும் நிலைமை வேறு. வருமானமும் குறைவு. எனக்கும் ஒரு மகன் இருக்கிறான். அவன் எதிர்காலத்திற்கு நான் சேமித்து வைத்தாக வேண்டும். இந்த நிலையில் உன் படிப்பிற்கு என்னால் செலவு பண்ண முடியாது. நானும் வேலைக்குப் போவதால்... வீட்டிலிருந்து எல்லாவற்றையும் நீதான் பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்று கூறிவிட்டாள்.



ரஞ்சனாவுக்கு ஏமாற்றமாக தான் இருந்தது. இப்போது தான் கல்லூரியில் பி.ஏ. முதல் வருடம் படித்துக் கொண்டிருக்கிறாள். டிகிரி முடித்துவிட்டால் ஏதாவதொரு வேலையை தேடிக் கொண்டு எதிர்காலத்திற்கு சேர்த்துக் கொள்ளலாம். அண்ணனின் பாரத்தை குறைக்கலாம் என்று நினைத்திருந்த நினைப்பின் மீது மண்ணள்ளி விழுந்தது.

ஆனால், அண்ணி இருந்த நிலையில் அவ... எடுத்த முடிவை குறை சொல்ல முடியாது.

வேறு வழியே இன்றி படிப்பை நிறு... வீட்டில் இருந்து எல்லா வேலைகளை... கவனித்துக் கொண்டாள்.

கலக்ஷனாவுக்கு கோபி என்கிற தம்... இருந்தான். லாரி டிரைவர். மாதத்தில் இருப... இருபத்தைந்து நாட்கள் லாரியில் ஊர் ஊரா... சுற்றிக் கொண்டிருப்பது தான் அவன் வேலை... ஊரில் இருக்கிற நாட்களில் அக்கா வீட்டி... வந்து விடுவான். அங்குதான் சாப்பா... தாராளமாய் செலவு செய்யும் தம்பியை... தலைமேல் வைத்துக் கொண்டாடுவா... கலக்ஷனா. கோபிக்கு ரஞ்சனா மீது பிரிய... இருந்தது. அவளையே சுற்றி சுற்றி வருவா... அவளிடம் வலிய பேச்சு கொடுப்பான். அவ... பத்து கேள்வி கேட்டால் இவள் ஒரு பதி... தருவாள். ஏனோ அவனை கண்டால் இவளுக்... பிடிக்கவில்லை. அவன் பார்வையில் காம... வழிந்தது. பல்லைக் கடித்து பொறுத்து... கொண்டாள் ரஞ்சனா. இரண்டு வருட... ஓடிப்போனது.

ஒரு நாள்!

கோபிக்கு விடாமல் காய்ச்சலடித்தது... கட்டு மஸ்தாய் இருந்த உடம்பு வற்றிப் போ... மெலிந்துப் போனான்... அவர்கள் இருந்தது வாஞ்... மணியாச்சியில். பெரி... டாக்டர் என்று பெயருக்... பின்னே வால் போ... பட்டங்கள் கொண்... டாக்டர் அங்... யாருமில்லை. அதனா... தம்பியை...

...நெல்வேலிக்கு அழைத்துச் சென்று... காண்பித்தாள் கலக்ஷனா.

கிட்டத்தட்ட பதினைந்து நாட்கள் ...ஹாஸ்பிடலிலேயே தங்கி தம்பியை பார்த்துக் கொண்டாள்.

ஓரளவு குணமானதும் ஊருக்கு அழைத்து வந்தாள். கோபி ரொம்பவே களைத்து, இளைத்துப் போயிருந்தான்.

ரஞ்சனாவுக்கே பார்க்க பரிதாபமாகதான் இருந்தது.

'சாதாரண காய்ச்சலுக்கே இப்படியாகி விடுவார்களா என்ன?'

''டாக்டர் என்ன சொன்னார் அண்ணி? ...இப்ப தேவலையா?''

பெருமூச்சுடன் பதில் கொடுத்தவளின் கண்கள் கலங்கியிருந்தது.

''என் குடும்பத்து மேலே யார் கண்பட்டதோ? ஆம்பளைங்களா படுக்கையிலே விழுறாங்க. கோபிக்கு காய்ச்சல் தான். வேற ஒன்னுமில்லே!''

''உடம்பெல்லாம் ரொம்ப இளைச்சிப் போயிருக்கே அண்ணி!''

''அது... அது! கல்யாண ஏக்கமாம். உடனடியா கல்யாணம் பண்ணி வச்சா எல்லாம் சரியாய் போய்டுமாம்!''

''அப்படியா?''

''ஆமாம் ரஞ்சனா. அதான் நானும் நல்லா யோசிச்சு ஒரு முடிவுக்கு வந்திருக்கேன்.''

''......?''

''உனக்கும் வயசாகுது. உன் மனசுக்குள்ளேயும் கல்யாண கனவுகள், ஏக்கங்கள் இருக்கும். ஆனா, நகை, சீர், செனத்தின்னு செலவு பண்ணி கல்யாணம் பண்ணிக் கொடுக்க எனக்கு வசதி இல்லை. கோபிக்கு உன்மேலே கொள்ளை ஆசை. அவனுக்கே உன்னை கல்யாணம் பண்ணி கொடுத்திடலாம்னு முடிவு பண்ணிட்டேன்.''

''அ... அண்ணி...'' அதிர்ந்தாள்.

''நீ மறுக்க மாட்டேன்னு தெரியும். எனக்கும் உன்னை இன்னொரு வீட்டுக்கு அனுப்ப மனசு வரலே. கோபி மாதிரி ஒரு பிள்ளை புருஷனா கிடைக்க நீ குடுத்து வச்சிருக்கனும். உன்னை கண்ணுக்குள்ளே வச்சு காப்பாத்துவான். அடுத்த மாசமே நல்ல முகூர்த்தம் இருக்குன்னு ஐயர் சொன்னார்.'' கலக்ஷனா பேசிக் கொண்டே போக நெஞ்சடைத்துப் போனது போலிருந்தது ரஞ்சனாவுக்கு.



'கோபியை மணக்க உனக்கு சம்மதமா?' என்று ஒரு வார்த்தை கேட்கவில்லை. இவர்களாகவே முடிவுப் பண்ணிவிட்டு, அடுத்த மாதம் திருமணம் என்கிறாள். அடுத்த வேளை உணவிற்கு கூட இவள் கையை எதிர்பார்த்திருப்பதால் தானோ' இதயம் குமுறியது. என்ற போதிலும் தன் விருப்பமின்மையை வெளிப்படுத்த உரிமையில்லை.

மனதை இரும்பாக்கிக் கொண்டாள்.

நாட்கள் வேகமாக சென்றது. ரஞ்சனாவுடன் திருமணம் என்ற நினைப்பே கோபியை கொஞ்சம் உற்சாகமாய் நடக்க வைத்தது.

**வி**டிந்தால் கல்யாணம்!

சிறிய மண்டபமாய் பார்த்து ஏற்பாடு செய்திருந்தாள் கலக்ஷனா.

மணமகள் அறையில் அமர்ந்திருந்தாள் ரஞ்சனா. அணிந்திருந்த ஒருசில நகைகளை கழற்றி பெட்டியில் வைத்து பூட்ட வேண்டும். சாவி அண்ணியிடம் இருந்தது. அவளைக் காணோம். நகைகளை கழற்றி கர்ச்சீப்பில் சுற்றி முடிச்சுப் போட்டு கொண்டு வெளியில் வந்தாள். திருமணத்திற்காக வந்திருந்...

## எல்லாம் தங்கமயம்

பஞ்சம், பசி, பட்டினிக்கு பெயர்போனது ஆப்பிரிக்கா. அங்கு ஒருபக்கம் பட்டினி சாவுகள் நடந்தாலும் இன்னொரு பக்கம் தங்கமயமாக நடமாடுபவர்களும் உள்ளனர். ஆப்பிரிக்காவில் உள்ள கனியாவில் மன்னர்களுக்கு மதிப்பளிப்பது தங்கம்தான். இங்குள்ள மன்னர்களின் அணிகலன்கள் மட்டுமின்றி மணிமகுடம், மார்பு கவசம், ஆடைகள் எல்லாமே தங்கம்தான். இவற்றை அணிந்து மன்னர் குடும்பத்தினர் உலா வருவது கண்கொள்ளாக் காட்சி ஆகும்.

-விட்டுக்கட்டி மஸ்தான், குவைத்.

உறவினர்கள் உறங்குவதற்கு இடம் தேடினர்.

ரஞ்சனா மெல்ல நடந்து சென்று மணமகள் அறைக்குச் சென்றாள். உள்பக்கமாய் தாழிடப்பட்டிருந்தது. பின்பக்கமாய் இருப்பாள் என்று பாத்ரூம் இருந்த அறைபக்கமாய் நடந்தாள்.

அண்ணியின் சன்னமான பேச்சுக்குரல் கேட்டது. அது மணமகள் அறையிலிருந்து வந்தது. தாள் இல்லாத லேசாய் திறந்திருந்த ஜன்னல் வழியே கசிந்த வார்த்தைகள் அவள் காதை கூர்மையாக்கின.

''ரஞ்சனாவுக்கு தெரிஞ்சா என்ன ஆகும்?''

''ஒண்ணும் ஆகாது. நீ வாயை மூடிக்க!''

''நாளைக்கு கல்யாணம். இன்னைக்கு இப்படி குடிச்சிட்டு ஆடறே! டாக்டர் உன்னை இதையெல்லாம் தொடவே கூடாதுன்னு சொன்னாரா, இல்லையா? குடியை தொட்டா ஒரு வருஷம் உயிரோடு இருக்கறதுக்கு பதிலா ஒரு மாசத்திலேயே செத்துப் போய்டுவேன்னு அவ்வளவு சொல்லியும் இப்படி நடந்துக்கிறயே!''

''சாகப் போறேன்னு முடிவாய்டுச்சு. எல்லாத்தையும் அனுபவிச்சிட்டே சாகறேனே''

''உனக்கேன்டா இப்படி ஒரு மோசமான நோய் வரணும்? ஊர் ஊரா சுத்தி... விபச்சாரிய தேடிப் போய் விலை கொடுத்து எய்ட்ஸை வாங்கி வந்திருக்கியே'' விசும்பினாள் கலக்ஷனா.

ஒரு சேர ஆயிரம் இடிகள் ஒன்றாய் வந்து தலையில் விழுந்த அதிர்ச்சி ரஞ்சனாவுக்கு.

'எய்ட்ஸா?'

## 10

**பூ**மி இரண்டாய் பிளந்து தன்னை உள்வாங்குவதுப் போலிருந்தது.

அவளால் ஜீரணித்துக் கொள்ளவே முடியவில்லை. 'கோபிக்கு எய்ட்ஸ் என்று தெரிந்தும் என்னை அவனுக்கு திருமணம் செய்து வைக்க எப்படி மனசு வந்தது?'

உள்ளிருந்து பேச்சுத் தொடர்ந்தது.

''நடந்தது.. நடந்துப்போச்சு. விடுவியா? நாம பேசறது யார் காதிலாவது விழப்போகுது!''

''இன்னைக்கு மறைச்சாலும் என்னைக்கு இருந்தாலும் உண்மை வெளியே வரத்தானே போகுது? ரஞ்சனாவுக்கு தெரிஞ்சா... நினைக்கும்போதே பயமாயிருக்குடா!''

''என்னாடப் போகுது? தாலி கட்டி... என் காலடியிலே விழுந்துதானே கிடக்கணு... கடமையேன்னு நான் உயிரோட இருக்... வரைக்கும் வாழ்க்கை நடத்திதான் ஆகணு... எனக்குப் பிறகு அவளும் சாகணும். ... எனக்காக பிறந்தவள். அவ மட்டும் இ... கல்யாணத்துக்கு சம்மதிக்காமலிருந்த... மட்டும் விட்டிருப்பேனா என்ன? அவ... கற்பழிச்சாவது கல்யாண... பண்ணியிருந்திருப்பேன்!''

அவர்கள் பேச.. பேச.. தலை சுற்றி... உடல் நடுங்கியது.

'கொடுமைக்கார மனிதர்கள்! பெண்ணாய் இருந்தும் ஒரு பெண்ணை பெற்றிருந்தும் என்னை படுகுழியில் தள்... அண்ணிக்கு எப்படி மனசு வந்தது? என்னை... கேட்க நாதியில்லை என்பதாலா? தாலி என்... புனிதமான கயிறைக் கொண்டு ... வாழ்க்கையை, உயிரை இல்லாமல் ஆ... சுயநலமாய் முடிவெடுத்திருக்கிறார்கள். தா... ஒரு பெண்ணிற்கு வேலியாய் வாழ்க்கையி... ஆதாரமாய் இருக்க வேண்டுமே தவிர விஷம... இருக்கக்கூடாது. மூன்று முடிச்சின் மூலம் ... மூச்சை நிறுத்தப் பார்க்கிறார்களே பாவிகள். ... மீது காம வெறிக் கொண்டு அலைகிறான் கோ... இந்த கல்யாணத்தை நிறுத்தியே ஆக வேண்டு... ஆனால், அதை இவர்களை எதிர்த்து நிறு... முடியாது. சொன்னது போல் கோபி என் கற்... நாசம் செய்து விடுவான். இவர்கள் கண்க... மண்ணை தூவி விட்டு பறந்து விட வேண்டு...

முடிவு செய்தவள் அங்கிருந்து அவ... அவசரமாய் அகன்றாள். அறைக்குள் வந்தவ... பெட்டியில் கலைந்து கிடந்த துணிமணிக... சுருட்டி போட்டு மூடினாள். அவசரத்தி... நகைகளை பழக்கூடையில் போட்டு விட்டா...

பெட்டியை எடுத்துக் கொண்டு பின்ப... கதவை திறந்து வியர்க்க விறுவிறுக்க ஓட்டமு... நடையுமாய் வெளியேறினாள்.

சாலையில் நடந்தாள். யார் கண்ணிலாவ... அகப்பட்டாலும் போச்சு. எல்லாமே பாழ்.

தூரத்தில் ஒரு பஸ் வருவது தெரிந்த... கையை காட்டி நிறுத்தினாள். மதுரை செல்லு... பஸ் அது. அதில் ஏறி அமர்ந்த பிறகுதான் உயி... வந்தது. சிறிது நேரம் படபடப்பு அடங்கு... வரை கண் மூடி அமர்ந்திருந்தாள்.

''எங்கேம்மா போகணும்?''

...குரல் கேட்டு திடுக்கிட்டு கண் திறந்தாள். ...டக்டர்!

அப்போதுதான் அவளுக்கு உறைத்தது. ...தை அவசரத்தில் தன்னிடம் ...மில்லாததே மறந்துப் போனதை.

'கடவுளே... என்ன செய்யப் ...கிறேன்?' உடல் நடுங்கியது.

அப்போது சட்டென நினைவு வந்தது.

பள்ஸ்-டூவில் முதல் வகுப்பில் பாஸ் ...ய்ததற்காக அண்ணன் மகிழ்ந்துப் போய் ...வீட் வாங்கி சாப்பிடு என்று கூறி நூறு ரூபாய் ...கொடுத்ததும், அதை ஸ்வீட் வாங்கி செலவு ...ய்ய மனமின்றி அண்ணன் ஞாபகார்த்தமாக ...திரப்படுத்தி வைத்ததும்.

அந்த நூறு ரூபாயை இந்த பெட்டியில் ...னே வைத்தோம்.

'அப்பாடா!' அண்ணனே வந்து கை ...டுத்ததுப் போல் உணர்ந்தாள்.

பெட்டியைத் திறந்து நூறு ரூபாயை ...க்கும்போது இதய மூலையில் வலித்தது.

''எங்கேம்மா போகணும்?'' பணத்தை ...ங்கிக் கொண்டே கேட்டார்.

''ம... மதுரைக்கு!''

மதுரையில் இறங்கியபோது அடுத்து ...ன்ன செய்வது என்று தெரியவில்லை. ஆனால், எந்த ஊரும் தனக்கு பாதுகாப்பானதாய் இருக்காது என்று புரிந்தது. அண்ணியின் கோத்தப்பா மதுரையில்தான் வசிக்கிறார்.

இங்கிருந்து எங்கே போவது? கையில் ...ணமில்லை. எப்படி வாழ்க்கையை ...ட்டுவது? எப்பாடு பட்டாவது ஒரு ...லையை தேடிக் கொண்டு வாழ்ந்து ...டலாம். ஆனால், முதலில் இந்த ஊரை விட்டு ...சன்றாக வேண்டுமே!

கால் போன போக்கில் நடந்தாள். ...யில்வே ஸ்டேஷன் வந்தது. அப்போது ...ன்னியாகுமரி எக்ஸ்பிரஸும் வந்து நின்றது. ...றுகணமே அதில் ஏறி விட்டாள் ரஞ்சனா.

**தி**ருட்டு என்ற வார்த்தையை கேட்டாலே முகம் சுளிப்பவள்தான். அப்படிப்பட்ட நானா டிக்கட் வாங்காமல் ...யணம் செய்து மாட்டிக் கொண்டு ...அசிங்கப்பட்டு தண்டனை பெற்று ...னைக்கும்போதே வேதனையும் மீறி சிரிப்பு ...வந்தது.

அவ்வளவு கடுமையாக அவனிடம் ...டந்துக் கொண்ட அதே டி.டி.ஆர்.தான் ...யில்வே செக்யூரிட்டி போர்ஸில் இரண்டு நாள் சிறை வைத்த பின், அவள் நிலையை உணர்ந்து, அந்த வேலை ஓரான்டதுக்கு அழைத்துச் சென்று பணம் கட்டி தங்க ஏற்பாடு செய்ததோடு, கையில் முந்நூறு ரூபாயையும் கொடுத்து உதவினார்.

அதன் பிறகு, கிடைக்கிற வேலைகளையெல்லாம் செய்து வருமானத்திற்கு வழி தேடிக் கொண்டாள்.

ஒரு விஷயத்தில் தன்னை நினைத்து பெருமையும், ஆச்சர்யமும் அடைந்தாள் ரஞ்சனா. இத்தனை பிரச்சினைகளுக்கும் மத்தியிலும் தனக்கு தற்கொலை என்ற எண்ணமே ஏற்படவில்லை என்பதே. எப்பாடுபட்டாவது வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட்டாவது கரை சேர்ந்து விட வேண்டும் என்கிற தன்னம்பிக்கையும் தைரியமும் அவளிடம் நிறையவே இருந்தன.

**அ**டுத்த வாரம் கம்பெனி அறிமுகப்படுத்திய புதிய வாஷிங் பவுடரை எடுத்துக் கொண்டு முகேஷ் வீட்டின் கதவை தட்டினாள்.

கதவை திறந்த முத்துக்குமார் இவளைப் பார்த்ததும் ''வேண்டாங்க.. போன வாரம் வாங்கிய பவுடரே அப்படியே இருக்கு'' என்றான்.

குரல் கேட்டு அவசர அவசரமாய் ஓடி வந்தான் முகேஷ்.

''ஹலோ.. வாங்க! முத்து வழியை விடு..!''

''ஓ...'' என்று நண்பனை அர்த்தமுடன் பார்த்து சிரித்தபடி வழி விட்டான்.

தயங்கியபடி உள்ளே வந்தாள் ரஞ்சனா.

''முத்து.. இவங்கதான் மிஸ்..''

''அம்புஜம்தானே?'' என்றான் பட்டென்று.

தலை உயர்த்தி வியப்பாய் அவனைப் பார்த்தாள்.

''என்னங்க பார்க்கறீங்க? டி.ஆர். அம்புஜம் அலையல் ரஞ்சனா. டிரெய்ன்ல வித்தவுட்ல டிராவல் பண்ணி மாட்டிகிட்டதிலேர்ந்து, போன வாரம் சேல்ஸ் கேர்ளா உங்களை சந்திச்சது வரை எல்லாமே தெரியும். முகேஷ் வேற, முத்து வேற.... ஐ மீன் நான்தாங்க.. நாங்க ரெண்டு பேரும் வேற வேற இல்லே. எங்களுக்குள் எந்த ரகசியமும் இல்லே. நான் தூர்தர்ஷன்ல கேமராமேனா ஒர்க் பண்றேன். உங்களுக்கு என்ன தாட்டும்? காபி ஆர் கூல் ட்ரிங்ஸ்..!''

''டேய்.. டேய் கொஞ்சம் மூச்சு விட்டுக்கடா'' என்றான் முகேஷ்.

ரஞ்சனா அந்த சூழ்நிலையை ரசித்தாள். முகத்தில் புன்னகை அரும்பியது.

''உட்காருங்க!'' என்றவள், ப்ரிட்ஜை திறந்து பாண்டாவை ஊற்றி கொடுத்தாள்.

''ஐயோ.. எதுக்குங்க.. இதெல்லாம்?'' தயங்கினான்!

''தோ பார்மாலிட்டீஸ்! என்னை கஸ்டமரா நினைக்காம ஒரு நல்ல நண்பனா நினைச்சுக்குங்க. டேக் இட்!''

வாங்கிக் கொண்டான்.

''நானும் நல்ல நண்பன்தாங்க. உங்க குரூப்ல என்னையும் சேர்த்துக்குங்க'' பவ்யமாய் சொன்னான் முத்துக்குமார்.

பக்கென்று சிரித்து விட்டாள் ரஞ்சனா

''நிஜமாகவே எனக்கு ரொ
சந்தோஷமா இருக்குங்க.
ஊரைப்பத்தியும், இங்குள்ள மனுஷங்க
பத்தியும் கொஞ்சம் பயம் இருந்தது. ஆ
உங்களை மாதிரி நல்ல மனுஷங்
இருக்கிறாங்கன்னு நினைக்கறப்ப..''


''அவசரப்படாதீங்க அம்புஜம். 
ரெண்டு பேருமே வெளியூர்க்காரங்க
சொந்த ஊரைப் பார்த்து மிரண்டுப் போ
முகேஷ் இந்த ஊரைத் தேடி வந்தான்.
நல்ல மனுஷங்களும், கெட்ட மனுஷங்
எல்லா ஊர்லேயும்தான் இ
கிடக்கிறாங்க. ஊரைப் பார்த்து பயப்பட
கொஞ்சம் கவனமா இருந்தாலே போதும்,
ப்ளஸ்? யாரு மைனஸ்னு தெரிஞ்சிடும்!''

''நீங்க சரியாதான் சொல்றீங்க. ஆனா
பேரு அம்புஜம் இல்லை. ரஞ்சனா'' என்
சிரித்தபடி.

''ஓக்கே.. ஓக்கே.. இனி ரஞ்சனான்
கூப்பிடறேன்!''

''எங்க ரஞ்சனா! இந்த வருஷம் வெ
அதிகமாக இருந்ததே... எங்களாலேயே த
முடியலே. பாவம் நீங்க, வீடு வீடாய்ப்
விற்கணும். வேற வேலை தேடிக்கக் கூடா
அக்கறையாய் கேட்டான் முகேஷ்.





''நல்ல வேலை கிடைச்சா மறுக்கவா போகிறேன்? நான் டிகிரிய முழுசா முடிக்கல. தவிர எந்த சர்ட்டிபிகேட்டும் என்கிட்டே இல்லே. அவசரத்திலே எதையும் எடுத்துக்கிட்டு வரலே. சர்ட்டிபிகேட் இல்லாம நல்ல வேலைய தேட முடியுமா?''

''ஓ.. அப்படி ஒரு பிரச்சினை இருக்கா? ஓக்கே கவலைய விடுங்க. முத்துவுக்கு நிறைய காண்டாக்ட் இருக்கு. அவனால ஒரு நல்ல வேலைய ஏற்பாடு பண்ணித்தர முடியும். இல்லையா முத்து?''

''அ... ஆமாமா! என்னால முடியும்.

கவலைப்படாதீங்க'' என்றவன், முகேஷிற்கு மட்டும் கேட்கும் விதமா... ''கதை இப்படிப் போகுதா?'' என்றான்.

''டேய்.. சும்மாருடா!''

''என்ன சொல்றார் உங்க நண்பர்?'' என்றாள் ரஞ்சனா.

''அது ஒன்னுமில்லே. கண்டிப்பா வேலை வாங்கித் தர்றானாம். அதுவும் அடுத்த வாரமே இல்லையா முத்து?''

''அ.... ஆமா.. ஆமா!'' பெரிதாய் தலையாட்டியவன் நண்பனைப் பார்த்து கண்ணடித்தான்.

## 11

முகேஷ், ரஞ்சனாவின் சந்திப்பு அடிக்கடி நிகழ்ந்தன. ஆழமான நட்பு முகிழ்ந்தது. ஒருத்தர்மேல் ஒருத்தர் வைத்திருந்த நம்பிக்கையில் பரஸ்பர வாழ்க்கையில் நடந்த கசப்புகளை பகிர்ந்துக் கொண்டனர்.

இப்படியும் நடக்குமா? என்று அடுத்தவருக்காக, கவலைப்பட்டனர்.

''நாம ரெண்டு பேருமே கிட்டத்தட்ட ஒரே மாதிரி தான் ஏமாற்றப்பட்டிருக்கிறோம், அடிபட்டிருக்கிறோம். தாலியை அரைஞாண் கயிறு மாதிரி பயன்படுத்தி என்னையும், இந்த சாஸ்திர, சம்பிரதாயத்தையும் அசிங்கப்படுத்திட்டா தீபா! செத்தாலும் பரவாயில்லே... தனக்கு பிடிச்சப் பொண்ணை அடைஞ்சே தீரணும்னு தாலியை சங்கிலியா நினைச்சு உங்களை சிறை வைக்க நினைச்சான் கோபி! இதிலேர்ந்து என்ன புரியுது ரஞ்சனா?''

கடற்கரை காற்றின் சீற்றத்தில் பட்டம் போல் பறக்க முயன்ற சுடிதார் துப்பட்டாவை சட்டென பிடித்து இரண்டு முனைகளையும் ஒன்று சேர்த்து முடி போட்டவள் கலங்கரை விளக்கின் வெளிச்சத்தில் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

''தாலிங்கறது செண்டிமெண்ட் சமாச்சாரம், அப்படி இப்படின்னு சொல்றதெல்லாம் சுத்த ஹம்பக். நீங்க கட்டிய தாலியை நீங்க உயிரோட இருக்கும் போதே கழற்றி எறிஞ்க இன்னொரு தாலியை வாங்கிக்கிட்டா தீபா. கழுத்தை விட்டு தாலி இறங்கினாலே புருஷனுக்கு ஏதாவது ஆகிவிடுமோன்னு பயப்படுவாங்க.''

''நான் முன்பை விட இப்ப இ... ஆரோக்கியமாக தான் இருக்கிறேன்'' எ... நகைச்சுவையாய்.

அவளும் சிரித்தபடி தொடர்ந்தாள்.

''தாலியை நானும் புனிதமாக நினைச்சிருந்தேன். ஆனா, அதை வலையாக்கி என்னை மாட்ட வை... சுயநலத்துக்காக என் உயிரையும் பலி... நினைச்சது கொடூரத்தின் உச்சம்! நிறைய இப்படி தான் சாஸ்திரத்தை... சம்பிரதாயத்தையும் தங்களுக்கு சாதகமா... அப்பாவிங்க தலையிலே மண்ணை... போட்டுடறாங்க! வாழுறதுக்காகவே பி... நாம, எதுக்காக இந்த மாதிரி செண்டிமெ... வளையத்துக்குள்ளே சிக்கி சீரழியணு... ஆவேசமாய் வெளிப்பட்டது பேச்சு.

''வெல்லெட் ரஞ்சனா!'' சப்தம் வர... கை தட்டினான் முகேஷ்.

''என்னோட எண்ணங்களே... அப்படியே ஒத்துப் போறீங்க. ரொ... சந்தோஷமாயிருக்கு. சரி.. இனி கடந்துப் போ... விஷயங்களை பத்தி பேசி நம்ம நேரத்... வீணாக்க வேண்டாம். வேற ஹாஸ்... பார்க்கணும்னு சொன்னீங்களே! பார்த்தாச்... 

''ம்ஹூம்... இப்போதைக்கு இல்... வேற நல்ல வேலை கிடைக்கற வரைக்... அதைப் பத்தி யோசிக்கக் கூட முடியாது!''

''பாருங்களேன்... முக்கியம... விஷயத்தையே சொல்ல மறந்துட்டேன். மு... உங்களுக்காக சில இடங்கள்ல வேலை... சொல்லியிருக்கான். பயோடேட்டா... சர்ட்டிபிகேட் ஜெராக்ஸும் கொடுத்திடுங்க...''

''எங்கிட்டே எந்த சர்ட்டிபிகேட்டு... இல்லையே? எல்லாத்தையும் ஊர்லே... விட்டுட்டு வந்துட்டேன் அவசரத்திலே!''

''ஐ... ஸீ! சரி பரவாயில்... அதையெல்லாம் முத்து சொல்லி அட்ஜ... பண்ணிடுவான். பயோடேட்டா மட்... கொடுத்திடுங்க!''

''கடவுளுக்கு என்மேலே ஏதோ கொஞ்... கருணை இருக்கு போலிருக்கு!''

''ஏன் அப்படி சொல்றீங்க?''

''இல்லேன்னா... உங்க நட்பு என... கிடைச்சிருக்குமா என்ன?''

சில கணங்கள் அவளையே பார்த்த... பிறகு தன் உள்ளங்கையை பிரித்து அதை... பார்த்தபடி சிரித்தான்.

''நீங்க நம்புவீங்களோ, இல்லையோ... ...ங்க நட்பு எனக்கு பெரிய ஆறுதலா ...ருக்குங்க. இது நீடிக்கணும்ங்க!''

''நீடிக்கும்!'' என்றான் அழுத்தமாக.

''ரஞ்சனா ரொம்ப பாவம்டா முத்து!'' ...ாப்பிட்டு முடித்து கழுவிய கையை ...டைத்தபடி பேசினான் முகேஷ்.

''டேய்.. டேய்... மறுபடியும் ரஞ்சனா ...தையை ஆரம்பிச்சிட்டாதேடா! நான் ரொம்ப ...ாவம்டா! ஒரு நாளைக்கு எத்தனை முறைதான் ...அவளோட கதையை சொல்லி போரடிப்பே! ...ாவம்டா... என்னை விட்டுடுடா!'' என்றான் ...கஞ்சுவது போல் பாவனை செய்து.

''ஏன்டா... அவளோட சோகக்கதை ...னக்கு கிண்டலா போய்டுச்சா?''

''கோவிச்சுக்காதே முகேஷ். நடந்ததையே ...பேசிப் பேசி ஆகப்போறதென்ன? இனி ...டக்கப் போறதை பத்தி பேசு!''

''அதுவும் சரிதான். அவளுக்கு சீக்கிரமே ...ரு நல்ல வேலைக்கு ஏற்பாடு பண்ணு முத்து. ...ாவம் ரொம்ப கஷ்டப்படறா!''

''உன் ஆளுக்கு சுபிக்ஷாவிலே ...பர்வைசர் வேலைக்கு ஏற்பாடு ...ண்ணியிருக்கேன். அடுத்த வாரம் ஜாய்ன் ...ண்ணிக்க சொல்லு. இப்ப சந்தோஷம் ...ானே?''

''என்ன... என்ன சொன்னே?''

''சுபிக்ஷாவிலே சூபர்வைசர் ...வேலைக்கு...''

''அதில்லே... அதுக்கு முன்னாடி ஒரு ...ார்த்தை சொன்னியே...''

''ரஞ்சனாவுக்கு சுபிக்ஷாவிலே...''

''இல்லே... அப்படி சொல்லலே! உன் ஆளுக்குன்னு சொன்னே...''

''அப்படியா சொன்னேன்?''

''அப்படிதான் சொன்னே!''

''சரியாதானே சொல்லியிருக்கேன்?'' ...நண்பனை நேருக்கு நேர் பார்த்தான் முத்து.

''என்ன சரி?''

''ரஞ்சனா உன் மனசுக்குள்ளே சம்மணம் போட்டு உட்கார்ந்திருக்கா!''

''அப்படியெல்லாமில்லே...!''

''சரி... அப்பவிடு! என் கொலீக் ஒருத்தர் தன்னோட விடோயர் தம்பிக்கு ஆதரவற்ற பொண்ணு இருந்தா சொல்லுங்க முடிச்சிடலாம்னு சொன்னார். எனக்கு ரஞ்சனா ஞாபகம் தான் வந்தது. சரி... உனக்கு அவமேலே ஏதாவது ஈடுபாடு இருக்குமோன்னு தயங்கினேன். அப்படி எதுவுமில்லேன்னு க்ளியராய்டுச்சு.. ஒக்கே... இதுபத்தி ரஞ்சனாகிட்டே பேசிட வேண்டியது தான்.''

''ஏன்டா அவசரப்படறே?''

''என்ன சொல்ல வர்றே?''

''போயும், போயும் ஒரு விடோயருக்கு ரஞ்சனாவா? வேண்டாம் முத்து!''

''அதை ரஞ்சனா முடிவு பண்ணட்டுமே!''

''வேண்டாம்னா விடேன்'' என்றான் சற்றே கோபமாக.

''நீ ஏன் கோபப்படறே முகேஷ்? அவ வாழ்க்கை அவ தீர்மானிக்கட்டும். உனக்கென்ன கஷ்டம்?''

''அவ வாழ்க்கை... அவளே தீர்மானிக்கட்டும். எனக்கென்ன?'' அமைதியிழந்தது மனம்.

முத்து பொங்கி வந்த சிரிப்பை மறைத்துக் கொண்டு அவன் தோளில் கைவைத்தான்.

''ரஞ்சனா கை நழுவிப் போய்டுவாளோன்னு கவலையா இருக்கா?''

''என்ன நீ? என்னென்னவோ பேசறே? இப்ப எதுக்கு கல்யாணம்? நல்லா சம்பாதிச்சி, ஸ்திரமா நின்ன பிறகு பண்ணிக்கட்டுமேன்னு நினைச்சேன். வேற ஒன்னுமில்லே! நீ பாட்டுக்கு எதையோ கற்பனை பண்ணிக்காதே...'' அதை பேசி முடிப்பதற்குள் முகமும், கழுத்தும் வியர்த்துப் போனது.

''சார்...'' வாசலில் குரல் கேட்டது.

வீட்டின் எதிரேயுள்ள பப்ளிக் டெலிபோன் பூத்தில் வேலை செய்யும் சிறுவன்.

''என்னடா?''

''முகேஷ் சாருக்கு போன்... ரஞ்சனா மேடத்திடமிருந்து...''

முகேஷ் நண்பனை சங்கடத்துடன் பார்த்தபடி எழுந்து சென்றான்.

'என்னிடமே நடிக்கிறியா படவா ராஸ்கல்!' மனதிற்குள் சொல்லி சிரித்துக் கொண்டான் முத்து.

## 12

''ரொம்ப ரொம்ப தாங்க்ஸ் சார். அதிகமாய் பழக்கமில்லைன்னாலும், எனக்காக இந்த வேலையை வாங்கிக் கொடுத்திருக்கீங்க. இது ரொம்ப பெரிய விஷயம். ஸ்வீட் எடுத்துக்குங்க..'' என்றபடி ஸ்வீட் பாக்ஸை

முத்துக்குமாரிடம் நீட்டியவள் நெகிழ்ந்துப் போயிருந்தாள்.

''என்னங்க ரஞ்சனா? எதுக்கிந்த ஃபார்மாலிட்டீஸ்? அப்படியென்ன பெரிய உதவி செஞ்சுட்டேன்? முகேஷிற்கு தோழின்னா.... எனக்கும் தோழி தானே? இதைக்கூட செய்யலேன்னா எப்படி? நாளைக்கு எனக்கே ஒரு உதவி தேவைப்பட்டா செய்ய மாட்டீங்களா என்ன?'' ஸ்வீட்டை எடுத்து வாயில் போட்டான்.



''கண்டிப்பா.''

''அப்புறமென்ன? மனிதர்கள் நேசமாயிருக்கிற இடத்தில் உப்புத் தண்ணீர் கூட இனிக்கும்னு சொல்லுவாங்க. சென்னையிலே தண்ணீர் ரொம்ப உப்பாயிருக்குன்னு முகேஷ் ஃபீல் பண்றான். நாம எல்லோரும் சேர்ந்து இனிப்பா மாத்தினா என்ன? ஏதோ நம்மால் ஆனது.''

அவன் கூறியதைக் கேட்டு கலகலவென்று சிரித்தாள் ரஞ்சனா. சிரிக்கும் போது ரோஜாப்பூ மலர்வது போல் அதீத அழகை வெளிப்படுத்திய அவள் முகத்தை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் முகேஷ்.

முத்து அவனை கவனிக்கத் தவறவில்லை.

ரஞ்சனா முகேஷிடம் வந்தாள்.

''நீங்களும் எடுத்துக்குங்க.''

''அ.. ரொம்ப தாங்க்ஸ்!'' திடுக்கிட்டு, வழிந்து எடுத்துக் கொண்டான்.

''இந்த வேலை உங்களுக்குப் பிடிச்சிருக்கா ரஞ்சனா?'' என்று கேட்டான் முத்து.

''ரொம்ப... ரொம்ப.. அங்கே அக்கவுண்ட்ஸ்ல வேலை பார்க்கிற லதா எனக்கு நல்ல ஃப்ரண்டாய்ட்டாங்க. என் லைஃப்ல முதல் முறையா சந்தோஷத்தை உணர்றேன்.''

''இனிதான் உங்களுக்கு நல்ல காலம் பொறக்கப் போகுது. ஒரு முக்கியமான விஷயத்தை இப்ப உங்களுக்கு சொல்லப் போறேன்.''

''என்ன விஷயம்?'' என்றாள் ஆர்வமாய்.

''என்னோட கொலீக் ஒருத்தர் இருக்கிறார். அவரோட தம்பி..'' என்று முகேஷை ஓரக்கண்ணால் பார்த்தபடி ஆரம்பிக்க..

அவன் எதிர்பார்த்தபடியே இடைமறித்தான் முகேஷ்.

''இப்ப எதுக்குடா அதெல்லாம்?''

''இருங்க... அவர் ஏதோ சொல்ல நினைக்கிறார். நீங்க சொல்லுங்க..''

''உங்க கல்யாண விஷயம்தாங்க..''

''என் கல்யாண விஷயமா?'' ஆச்சர்யமாய் பார்த்தாள்.

''ஆமாம்.''

''மாப்பிள்ளை பார்த்து வச்சிருக்கீங்களா?''

''அப்படி சொல்ல முடியாது. உங்களுக்கு பிடிச்சிருந்தா மேற்கொண்டு பேசலாம்.''

# கையடக்க கம்ப்யூட்டர்

**உ**ள்ளங்கைக்குள் அடங்கக் கூடிய கம்ப்யூட்டரை 'ஓ. கியூ. ஓ.' என்ற நிறுவனம் தயாரித்து உள்ளது. இது ...ார்ப்பதற்கு சிறிய புத்தகம் போலவே ...ருக்கிறது. இதன் அகலம் 6 இஞ்ச், ...யரம் 8 இஞ்ச் ஆகும்.

இந்தச் சிறிய கம்ப்யூட்டரின் எடை ...வறும் 250 கிராமே ஆகும். இதை ...ல்சட்டைப் பைக்குள் வைத்து ...ளிதில் எடுத்துச் செல்லலாம்.

-ரம்யா.

''எங்கே இருக்கிறார்?'' என்றவள் ஒருவித எதிர்பார்ப்புடன் முகேஷை பார்த்தாள்.

''என்னோட ஆபீஸ்ல வொர்க் பண்றவரோட...''

''இல்லை.. வேண்டாங்க!'' என்றாள் அவசரமாக. முகேஷின் முகம் மலர்ந்தது.

முத்துக்குமாரின் இதழ்க்கடையோரம் புன்னகை பிறந்தது.

தான் அவசர அவசரமாய் மறுத்தது மூலம் தன் மனதிலிருப்பதை முகேஷ் புரிந்து கொண்டு விட்டிருப்பானோ என்கிற பதற்றம் ரஞ்சனாவைப் பற்றிக் கொள்ள..

''நேரமாயிடுச்சு.. நான் புறப்படறேங்க.'' என்று கூறிவிட்டு வெளியேறினாள்.

''முகேஷ்..!''

''என்னடா?''

''எனக்கொரு சந்தேகம்?''

''சந்தேகமா?''

''ஆமாம். ரஞ்சனா யாரையோ காதலிக்கிறா!''

''என்னடா சொல்றே?'' முகேஷ் அதிர்ச்சிக்குள்ளானான்.

''ஆமாம். உண்மையைத்தான் சொல்றேன்.''

''உனக்கெப்படி தெரியும்?''



''எப்படியோ.. இப்ப அதுவா ...க்கியம்?''

''யாரை காதலிக்கிறா?''

''யாருக்குத் தெரியும்? அது அஸிஸ்டண்ட் ...டைரக்டர் முகேஷாக்கூட இருக்கலாம்.''

''உனக்கு ...ளையாட்டுத்தான்.'' என்று கூறிவிட்டு ...ர்த்தாலும், அவன் சொன்ன வார்த்தை ...தயத்திற்கு இதமாய் இருப்பதை உணர்ந்தான்.

**மு**கேஷ் அஸிஸ்டண்ட் டைரக்டராக ...ணிபுரிந்தபடியே தனியே டைரக்ட் செய்யும் ...ன்ஸ்..க்காகவும் முயற்சிக்கிறான். சில ...யல்களுக்கு கேமராமேனாகவும் ...ணிபுரிகிறான்.

முகேஷ் எவ்வளவு தான் பிஸியாக ...ருந்தாலும் தினசரி ரஞ்சனாவுக்கு போன் ...ய்து பேசுவது வாடிக்கை ஆயிற்று.

முத்துக்குமாரை உடனே புறப்பட்டு ...ரும்படி அவன் தாயார் டெலிகிராம் ...னுப்ப... அடுத்த ரயிலை பிடித்து சென்று ...ட்டிருந்தான்.

அவன் சென்ற மறுநாளே உடல் நிலை ...யில்லாமல் போனது முகேஷிற்கு.

படுக்கையை விட்டு எழக்கூட ...டியாதளவிற்கு காய்ச்சல் அவலாய் ...ாதித்தது. இடைவிடாத வாந்தி வேறு. ...ளைத்துப் போனான்.

ரஞ்சனாவுக்கு வேலையில் கவனம் ...ல்லவில்லை. போன் பெல் அடிக்கும் ...ாதெல்லாம் ஒரு எதிர்பார்ப்புடன் மனம் ...த்தது.

''ரஞ்சனா உங்களுக்கு தான் போன்'' ...ன்று கூறமாட்டார்களா? என்று செவியை ...மைப்படுத்திக் கொள்வாள். அவளுக்கு ...ான் பண்ணும் ஒரே ஆள் முகேஷ் மட்டும் ...ன்.

'நான்கு நாட்களாய் அவனிடமிருந்து போனே வரவில்லை. ஏன்? ஷூட்டிங்கில் பிஸியாய் இருக்கிறானோ? இல்லையே.. எவ்வளவு பிஸியாய் இருந்தாலும் பண்ணாமல் இருக்க மாட்டானே! ஏன்.. ஏன் பண்ணவில்லை?' அதற்கு மேல் அவளால் பொறுமையாய் இருக்க முடியவில்லை.

அவன் வீட்டின் எதிரே இருந்த பப்ளிக் பூத்திற்கு தொடர்பு கொண்ட போது போன் அவுட் ஆஃப் ஆர்டர் என்று வந்தது.

அரை நாள் விடுப்பு எடுத்துக் கொண்டு அவன் வீட்டிற்கு சென்ற போது... தாழிடப்படாத கதவு கை வைத்ததும் திறந்துக் கொண்டது.

மனது திக் திக்கென்று அடித்துக் கொள்ள உள்ளே சென்றாள்.

அங்கே...

படுக்கையில் நைந்த துணியாய் முகேஷ்!

திடுக்கிட்டு அவனருகே ஓடி வந்தவள்.. ''முகேஷ்'' என்றழைத்தாள்.

மிக ஆயாசத்துடன் கண்களை திறந்தவன் அவளைப் பார்த்து மகிழ்ந்தான்.

''வாங்க.. ரஞ்சனா!''

''என்னாச்சு?''

''காய்ச்சல்.''

''ஓ..'' என்றபடி அவன் நெற்றியில் கை வைத்தவள் பதறிப்போனாள்.

''ஐயோ.. இப்படி கொதிக்கிறதே? டாக்டரிடம் போனீர்களா?''

''இல்லை.. என்னால் படுக்கையை விட்டு எழவே முடியவில்லை. முத்துக்குமாரும் ஊரில் இல்லை.''

''மைகாட்.. இதோ வந்துட்டேன்.'' என்று விரைவாக செயல்பட்டாள்.

வெளியில் சென்று ஆட்டோவை அழைத்து வந்தாள். அவனை ஹாஸ்பிடலுக்கு அழைத்துச் சென்றாள். காய்ச்சல் அதிகமாய் இருந்ததால் அட்மிட்டாக வேண்டியிருந்தது.

ரஞ்சனா லீவு எடுத்துக் கொண்டு அவனருகேயே இருந்து கவனித்துக் கொண்டாள்.

அவளுடைய அன்பும், அக்கறையும், மனிதாபிமானமும் முகேஷை கவர்ந்து விட.. நெகிழ்ந்து போனான்.

அன்று.. சாத்துக்குடியை பிழிந்து ஜூஸ் எடுத்தவள் குளுகோஸ் கலந்து அவனிடம் நீட்டினாள்.

அவன் வாங்காமல் அவளையே பார்த்தான்.

''என்ன முகேஷ் அப்படி பார்க்கறீங்க?''

''நீ... நீங்க இல்லேன்னா.. நான் என்னாகியிருப்பேன்?''

''அதெல்லாம் எதுக்கு இப்ப? மனசைப் போட்டு அலட்டிக்காம குடிங்க..ம்..''

''இல்லே ரஞ்சனா.. உங்களுக்கு எதையாவது கொடுக்கணும் போலிருக்கு!'' என்றவன் சட்டென அவள் கையைப் பற்றி ஜூஸை வாங்கி டீப்பாயில் வைத்து விட்டு.. புறங்கையில் முத்தமிட்டான்.

எதிர்பார்க்காத ரஞ்சனா சிலிர்த்துப் போனாள்.

முகேஷ் தான் அவசரப்பட்டு விட்டோமோ என்று பயந்தான்.

ரஞ்சனா அவனை நெருங்கினாள்.

முகத்தை நோக்கி குனிந்தாள்.

நெற்றியில் இதமாய் இதழ்களை பதித்தாள்.

## 13

''ரஞ்சனா மட்டும் இல்லேன்னா... நான் என்னாகியிருப்பேன்னு எனக்கேத் தெரியாது. எனக்காக மூணுநாள் லீவு போட்டுட்டு என் பக்கத்திலேயே இருந்தா. அதுக்கெல்லாம் ஒரு மனசு வேணுமில்லையா? அது ரஞ்சனாகிட்டே இருக்கு. அவ ரொம்ப நல்லப் பொண்ணுடா.''

முகேஷ் பேசிக் கொண்டேயிருக்க.. ஒரு சிறு புன்னகையுடன் அவனையேப் பார்த்துக் கொண்டிருந்தான் முத்துக்குமார்.

அவன் அன்று தான் ஊரிலிருந்து வந்திருந்தான்.

''லோ.. நான் ஊர்ல இல்லாததும் ஒரு வகையிலே நல்லதுன்னு சொல்லு.''

''சேச்சே.. என்னடா சொல்றே?''

''இல்லேன்னா.. ரஞ்சனா ரொம்ப நல்ல பொண்ணுன்னு தெரிஞ்சுக்க வாய்ப்பு கிடைச்சிருக்குமா?'' என்றான் கிண்டலாய்.

''என்ன கிண்டலா?'' என்று பேச்சிற்கு கூறினாலும் அந்த கிண்டலை ரசித்தான்.

''சரி.. அவசர அவசரமா ஊருக்கு கிளம்பி போனியே.. என்ன விஷயம்?''

''இனி உனக்கு ஒரு நல்லது கெட்டதுன்னா.. ரஞ்சனா தான் வந்து பார்த்துக்கணும்.''

''நான் என்ன கேட்டேன்? நீ என்ன சொல்றே?''

''எல்லாம் சரியாத்தான் சொல்றேன். ஊர்லே அம்மா எனக்கு சொந்தத்திலேயே பொண்ணு பார்த்து முடிவுப் பண்ணிட்டாங்க. எனக்கும் பிடிச்சிருந்ததால சரின்னு சொல்லிட்டேன். ரெண்டு மாசத்துல கல்யாணம். இங்கே தனிக்குடித்தனம்.''

''கங்கிராஜுலேஷன்ஸ்'' என்று சந்தோஷமாய் அவன் கைப்பற்றி குலுக்கியவன்

''அப்ப நான் வேற வீடு பார்த்து போக வேண்டியது தான்'' என்றான்.

''தப்பா நினைச்சுக்காதே முகேஷ்.''

''சேச்சே! அதுதான் நாகரீகம். எல்லோருக்கும் நல்லதும் கூட.''

''நான் ரஞ்சனாவை பார்க்கணுமே.''

''ஏன்?''

''நான் இல்லாதப்ப சரியான சமயத்திலே உனக்கு ஹெல்ப் பண்ணியிருக்காளே.. அதுக்கு தாங்க்ஸ் சொல்ல தான்.''

''ஆமாமா! சொல்லு.. ரொம்ப நல்ல பொண்ணுடா அவ.'' சிலாகித்து சொன்னவனின் முகம் எங்கோ கவனம் தப்பி போயிருந்தது.

''முகேஷ்!''

''ம்..''

''நான் ஒண்ணு கேட்பேன். மறைக்காம பதில் சொல்லணும்.''

''என்ன?''

''ரஞ்சனாவை விரும்பறியா?''

''ஏன் அப்படி கேட்கறே?'' என்றவன் வெட்கத்துடன் சிரித்தான்.

''கேட்டதற்கு பதில்!''

''ம்...!'' என்றான் தரை நோக்கி தலை கவிழ்ந்து.

''ம்.. என்றால் என்ன அர்த்தம்?''

''அ.. ஆமாம்.''

அவன் தோள்களில் கைகளை பதித்து அழுத்தினான்.

''இப்பவாவது ஒப்புக்கிட்டாயே சந்தோஷம்டா! ரஞ்சனாவுக்கும் உன்மேலே பிடிப்பு இருக்கு முகேஷ். இல்லேன்னா.. லீவு போட்டுட்டு உன்னை கவனிச்சிருப்பாளா? முகேஷ்.. நீ ரஞ்சனாவை கல்யாணம் பண்ணிக்கிட்டா என்ன?''

''கல்யாணம்? யூ மீன்.. மாலை மாத்தி தாலி கட்டிக்கறது அதுதானே?''

''ஐயோ.. ஒண்ணுமே தெரியாத பாப்பா பாரு! படவா ராஸ்கல் இந்த குசும்புதானே வேண்டாங்கறது''

''புரியுது முத்து! பட், எனக்கு அந்த வெத்துவேட்டு சம்பிரதாயத்திலெல்லாம் நம்பிக்கையில்லே.''

''அதுக்காக?''

''ரெண்டு மனசு ஒண்ணு சேருது பார் அது தான் கல்யாணம்! கடைசி வரை இவங்களுக்கு துணை இருப்போம், கஷ்ட நஷ்டங்களில் பங்கெடுத்துப்போம்னு நம்பிக்கையோட வாழ்க்கையை பரஸ்பரம் ஒப்படைக்கறது தான் நிஜமான தாம்பத்யம். நான் தாலியை மதிக்கலே. ஒரு பாசாங்குக்காக கட்ட நான் தயாராயில்லே. ரஞ்சனாவை எனக்கு பிடிச்சிருக்கு. என்னுடைய யதார்த்த சிந்தனைக்கு கை கொடுக்கறவளா இருந்தா.. ரெண்டு பேரும் சேர்ந்து வாழ்ந்துக்கறோம்.''

''கேட்கவே சரியாயில்லையே முகேஷ்! அர்த்தமே இல்லாம, அஸ்திவாரமே போடாம கட்டிடம் கட்டற மாதிரியிருக்கு. இதுக்கு எந்தப் பொண்ணு தான் சம்மதிப்பா?''

''ரஞ்சனாவுக்கும் திருமணம்ங்கற கண்கட்டு வித்தையிலே நம்பிக்கையில்லே. ஒருவேளை அவள் சம்மதிக்கலாம்.''

''நான் பேசிப்பார்க்கட்டுமா?''

''வேண்டாம்னு சொல்ல மாட்டேன்.''

''அலையாதே!'' செல்லமாய் வலிக்காமல் அவன் கன்னத்தில் குத்தினான் முத்துக்குமார்.

''தாலி பெண்களை அடிமைப் படுத்துவது. ஆணாதிக்கத்தை வளர்ப்பதற்காக யாரோ கண்டுபிடிச்சு கொடுத்துட்டு போன சங்கிலி. அந்த சங்கிலியால என்னைக் கட்டிப் போடறதை நான் விரும்பலே'' என்ற ரஞ்சனாவின் குரல் தெளிவாய், உறுதியாய் வெளிப்பட்டது.

இடம்.. கடற்கரை.

''எனக்கு உங்களோட சிந்தனை ஆச்சர்யத்தைத் தருது ரஞ்சனா. தாலி கட்டிக்காம கெட்டு கெதரா வாழ்ந்துக்கறது வெளிநாட்டுக்காரங்களுக்கு சரியா வரலாம். நம்ம கலாசாரத்துக்கு ஒத்து வருமா? புடவை, குங்குமம், தாலின்னு வெளிநாட்டுக்காரங்க நம்ம பண்பாட்டை நேசிக்க ஆரம்பிச்சதோடயில்லாம.. நம்ம இந்தியாவுக்கே வந்து கல்யாணம் பண்ணிக்கிட்டு நமக்கு பெருமை தேடி தர்றாங்க.. ஆனா...!''

''இல்லே சார்! நான் அடிபட்டவ. முகேஷ்-ம் அடிபட்டவர். அந்த வலி எங்களுக்கு தான் தெரியும். எனக்கு வாழணும்ங்கற ஆசை வந்ததற்கு காரணமே முகேஷ்-ம் என்னை மாதிரி காயப்பட்டவர்ங்கறதும், எங்களோட சிந்தனை ஒரே மாதிரி இருக்குங்கறதாலேயும் தான். தாலி கட்டி கல்யாணம் பண்ணிக்கிற எல்லாரும் சேர்ந்து தான் வாழறாங்களா? அவங்கள்ல எத்தனை பேர் ஸ்டவ் வெடிச்சு சாகறாங்க? எத்தனை பேர் டைவர்ஸ் கேட்டு கோர்ட்டுக்கு போறாங்க? ஏன் தாலி பொண்ணை காப்பாத்தக் கூடாதா? கோர்ட்டுக்கு போகாம தடுக்கக் கூடாதா? எல்லாம் சுத்த ஹம்பக்! ஒருத்தருக்கொருத்தர் நல்லா புரிஞ்சுக்கிட்டு, அன்போட.. நம்பிக்கையோட சேர்ந்து வாழலாம். தாலிங்கறது என்னைப் பொறுத்தவரை பெண்ணோட சுயசுவரூபத்தை கட்டி போடற கயிறு. நான் என் சுயசுவரூபத்தை விட்டுத்தர மாட்டேன்.''

''அப்படீன்னா..?'' முத்து அவளை ஆர்வமாய் பார்த்தான்.

''தாலிங்கற வேலி இல்லாம நானும் முகேஷ்-ம் கணவன் மனைவியா வாழ எனக்கு பரிபூரண சம்மதம்.''

''ஒக்கே! சுத்தி வளைச்சி மூக்கைத் தொட்டா என்ன? நேரடியா தொட்டா என்ன? எப்படியோ, என் முகேஷிற்கு ஒரு நல்ல பெண் மனைவியா கிடைச்சிட்டா! அது போதும் எனக்கு. எனிவே... அட்வான்ஸ் வாழ்த்துக்கள்...'' என்று அவளை நோக்கி கையை நீட்ட... மலர்ந்த ரோஜாப்பூவாய் சிரித்தபடி அவன் கைப்பற்றி குலுக்கினாள் ரஞ்சனா.

அடுத்த பத்தாவது நாள்!

மேளம் தாளமில்லை. தாலி, மாலை, அட்சதை, ஐயர் இல்லை. முத்துக்குமாரின் வற்புறுத்தலுக்காக புதிதாய் பட்டுப்புடவை, பட்டு வேட்டி சட்டை அணிந்து, அன்பின் வெளிப்பாடாக பரஸ்பரம் மோதிரம் அணிவித்து... ஆகாயம் சாட்சியாக, நண்பன் சாட்சியாக, முத்துக்குமாரின் வீட்டில் மிக எளிமையாக திருமணம் நடந்து முடிந்தது.

முகேஷ்-ம், ரஞ்சனாவும் தனியே வீடு பார்த்து குடிபோயினர். சந்தோஷமான திருமண வாழ்க்கை ஆரம்பமானது. கெஞ்சலும், கொஞ்சலுமாய் வாழ்க்கை எவ்வித பிரச்சினையுமின்றி போனது.

ரஞ்சனா வந்த ராசி... முகேஷிற்கு தனியே

ஒரு சீரியலை டைரக்ட் செய்யும் வாய்ப்பு கிடைக்கிறது. அந்த சந்தோஷத்தில் முகேஷும், ரஞ்சனாவும் ஒரு சுற்று பெருத்து போயினர்.

## 14

ரஞ்சனாவும் தொடர்ந்து வேலைக்குச் சென்றாள். அதிகாலையில் எழுந்து வீட்டு வேலைகளை முடித்து, சமைத்து, முகேஷை தயார் படுத்தி அனுப்பி விட்டு இவளும் வேலைக்கு ஓடுவாள்.

முகேஷ் கடினமாக உழைத்தான். குருவிப்போல் சேர்த்த பணத்தில் ஒரு பைக் வாங்கினான். சீரியலின் முழுப் பொறுப்பும் அவனை சேர்ந்தது என்பதால் பெரும்பாலான நாட்களில் இரவில் தாமதமாகதான் வீடு வந்து சேருவான்.

அவன் வரும்வரை சாப்பிடாமல் காத்திருப்பாள் ரஞ்சனா.

முகேஷ் எத்தனையோ முறை சொல்லிப்பார்த்துவிட்டான்.

''ரஞ்சி... நான் ஆபீஸ்லே வேலை செய்யலே. பத்து மணிக்கு கிளம்பி அஞ்சு ஆறு மணிக்கெல்லாம் வீடு திரும்பறதுக்கு. நான் ஒரு டைரக்டர். எடிட்டிங், டப்பிங்னு எல்லாமே நான் அருகேயிருந்து பார்த்தால் தான் சரியா வரும். சில சமயம் ஷூட்டிங்கை நைட்டு ஒரு மணி வரை கூட நடத்த வேண்டி வரும். நான் மத்தவங்களோட சேர்ந்து ஸ்பாட்லேயே சாப்பிட்டுக்குவேன். நீ நான் வர்றவரைக்கும் காத்திருக்கணுமா? வேண்டாமே ரஞ்சி. நீ நேரத்துக்கு சாப்பிட்டுடு!''

''ம்ஹூம்... உங்களை விட்டு என்னால தனியா சாப்பிட மனசு வரலேங்க! நீங்க வர்றவரைக்கும் சாப்பிடாம காத்திருக்கறதிலே எனக்கொன்னும் கஷ்டமில்லே. நீங்க யூனிட் ஆட்களோட சாப்பிட்டாலும் என்னோட ஒரு கையளவு ரசம் சாதமாவது சாப்பிடணும்னு ஆசைப்படறேன்!''

''என்ன பொண்ணும்மா நீ!'' செல்லமாய் அவள் தலையை தன் மார்பில் சாய்த்து கன்னத்தை கிள்ளுவான்.

அவளுக்காகவே ஒரு பிடி சாதமாவது சாப்பிடுவான்.

முத்துக்குமாருக்கும் ரோகிணிக்கும் திருமணமாகி முகேஷ் இருந்த வீட்டருகிலேயே பத்து தெரு தள்ளி குடிவந்தனர்.

இரண்டு நண்பர்களின் வாழ்க்கையும் ரம்மியமாக சென்றுக் கொண்டிருந்தது.

அன்றிரவு!

ரஞ்சனாவின் மடியில் தலை வைத்து படுத்திருந்தான் முகேஷ்.

''நான் ரொம்ப சந்தோஷமாயிருக்கிறேன் ரஞ்சனா!''

''என்ன காரணம்?'' அவன் தலையை கோதியபடி கேட்டாள்.

''நீதான்! உன்னை நான் சந்திக்காமலிருந்திருந்தால்.... என் வாழ்க்கையே அர்த்தமற்றுப் போயிருக்கும்! என் எண்ணங்களுக்கும், கருத்துக்களுக்கும் ஏற்றபடி நீ எனக்கு கிடைத்தது.... அதிர்ஷ்டம்னு தான் சொல்வேன். உன்னோடு நான் சேர்ந்த பிறகு தான்... எனக்குள் ஒரு உத்வேகமே ஏற்பட்டது. இன்னும் உழைக்கணும், உயரணும்... நிறைய சம்பாதிக்கணும், பேர் வாங்கணும், சொந்தமா வீடு வாங்கணும், கார் வாங்கணும் இப்படி நிறைய ஆசைகள்! ஆசைகள் பெருகப்பெருக தான்... கடினமா உழைக்கணும்ங்கற வெறி வரும். அந்த வெறி தான் வெற்றிக்கு ஆதாரம்!''

''உங்க ஆசைகள் எல்லாம் கண்டிப்பா நிறைவேறும். எங்கோ பிறந்து, அடிமை மாதிரி வாழ்ந்து, பெரிய புதை குழியிலிருந்து தப்பி, இப்ப மலர்ப்படுக்கையிலே விழுந்திருக்கிறேன். இப்படி எனக்கே எனக்குன்னு உங்க அன்பு கிடைச்சதுக்கு நான் தான் அதிர்ஷ்டம் பண்ணியிருக்கணும். கடவுளுக்கும் என் மேல் இரக்கம் இருந்திருக்கு. இல்லேன்னா நீங்க எனக்கு கிடைச்சிருப்பீங்களா?''

அவன் கரம்பற்றி உள்ளங்கையில் முத்தமிட்டு, அதை அப்படியே தன் கன்னத்தில் வைத்து அழுத்திக் கொண்டாள்.

''ரஞ்சி...''

''என்னங்க?''

''நான் தான் இப்ப ஓரளவு நல்லா சம்பாதிக்கிறேனே! நீ வேலைக்கு போய் தான் ஆகணுமா?''

''கண்டிப்பா! இப்ப சொன்னீங்களே... இது வாங்கணும், அது வாங்கணும்னு பல லட்சிய கனவுகள்? அதெல்லாம் நிறைவேறணும்னா... பொருளாதார ரீதியா என்னோட பங்கும் அவசியம். தவிர, எனக்கு தெரிஞ்ச கைத்தொழிலை கிடைக்கிற நேரத்தில் வீட்டிலிருந்தே செய்யணும்னே நினைச்சிருக்கேன்!''

''அப்ப வேலைக்கு போய்தான் தீருவேன்ங்கறியா? என் பேச்சை கேட்க மாட்டியா? வேலைக்கும் போய்க்கிட்டு, வீட்டிலேயும் வேலை செஞ்சுக்கிட்டு கஷ்டப்படாதே செல்லம்!''

''எனக்கொன்னும் கஷ்டமில்லைங்க! நீங்க சொல்கிற மாதிரி வேலைக்கு போகாமலிருப்பேன். எப்ப தெரியுமா? நம்ம குழந்தைய சுமந்துக்கிட்டிருக்கும் போது!''

''அதுக்கு அஞ்சு வருஷமாகுமே ரஞ்சி!''

''அஞ்சு வருஷமா? ஏன்?'' என்றாள் திகைப்பாய்.

''இப்போதைக்கு நமக்கு குழந்தை வேண்டாம் ரஞ்சி. யோசிச்சு பார்.... நான் வெறியோட உழைக்க நினைக்கறப்ப... பொக்கைவாய் சிரிப்போட கைய காலை உதைச்சுக்கிட்டு நம்ம குழந்தை என்னை அன்பால கட்டிப்போட்டுடாதா? அந்த அழகிலே மயங்கி நான் வீட்டை விட்டு வெளியேப் போகதான் முடியுமா? இதுமட்டுமே காரணமில்லே ரஞ்சி! நம்ம குழந்தை பிறக்கறப்ப பணக்கார வீட்டு குழந்தையா பிறக்கணும்னு ஆசைப்படறேன். அதை எந்த குறையும் இல்லாம நல்லா வளர்க்கணும்!''

''நீங்க சொல்றது சரிதான்! ஆனா, அதுக்காக அஞ்சு வருஷம் காத்திருக்கணுமா?''

''என்னுடைய இலக்கு அஞ்சு வருஷம்! ஆனா, அதுக்குள்ளே நான் ஜெயிச்சிடுவேன். ஜெயிச்ச உடனே... குழந்தை தான்... ஓகேயா?'' என்றபடி அவள் கழுத்தில் கை போட்டு இழுத்தான்.

அவளும் அவனுக்கு வாகாய் வளைந்து கொடுத்து ஆசை ஆசையாய் அவன் நெற்றியில் இதழ் பதித்தாள். சிலிர்த்த முகேஷ் ஆவேசத்துடன் அவளை இறுக்கி அணைத்தான்.

லட்சியத்தை நோக்கி பயணப்படும் யாருமே வெற்றி எனும் கனியை ருசிக்காமல் விடுவதில்லை.

### 65 அடி உயர சிவன் சிலை



பெங்களூர் விமான நிலையப் செல்லும் வழியில் உட்கார்ந்த நிலையில் தவம் செய்யும் கோலத்துடன் 65 அடி உயரமுள்ள சிவன் சிலை உள்ளது. இந் சிவன் கோவில் மிகவும் அழகான சூழ்நிலையில் அமைக்கப்பட்டிருக்கிறது. பட படர்ந்த மலை போன்ற தோற்றம் சிவன் சிலைக்குப் பின்புறம் அமைந்துள்ளது. சிறிய குகை போன்ற அமைப்பில் போலேநாத் மகாகாளேஸ்வரர், விஸ்வநாத், மல்லிகார்ஜுனர், நாகேஸ்வர், ராமேஸ்வர், சோம்நாத், அமர்நாத், கிருஷ்னேஷ்வர், வைத்தியனாத், மமலேஷ்வர், பீமஷங்கர், த்ரியம்பகேஷ்வர் மற்றும் கேதார்நாத் ஜோதிலிங்கங்களின் மாதிரி வடிவங்கள் மிக அழகாகக் காட்சி அளிக்கின்றது.

சிவராத்திரியன்று இங்கு விசேஷ பூஜைகளும், அபிஷேகங்களும் நடக்கின்றன. பெங்களூர் வருபவர்கள் அனைவரும் கண்டு மகிழ வேண்டிய இடம் இது.

-ஜி. இந்திரா, பெங்களூர்.

வருடங்கள் சில கடந்து செல்கின்றன.

முகேஷை அவன் பெயர் சொன்னதும்... "ஓ... தெரியுமே... அந்த டைரக்டர் தானே?" என்று தெரிந்து வைத்திருக்கும் அளவிற்கு உயர்ந்திருந்தான். சில பத்திரிகைகளில் அவன் பேட்டியும் பிரசுரமாகி இருந்தன.

அன்று...

முகேஷ் காலை எழுந்ததிலேர்ந்தே பதட்டமாய் இருந்தான். இந்தளவு பதட்டத்தை ரஞ்சனா அவனிடம் கண்டதே இல்லை.

டிபன் கூட வேண்டாம் என்றான். ரஞ்சனா, கணவனை ஆச்சர்யமாய் பார்த்தாள்.

"என்னாச்சு உங்களுக்கு? ஏன் டென்ஷனாய் இருக்கீங்க?"

"ஒரு முக்கியமான விஷயத்திற்காக கிளம்பிட்டிருக்கிறேன் ரஞ்சி! போய் வந்து சக்ஸஸ்ஃபுல்லா உன்கிட்டே சொல்லணும்னுதான் சஸ்பென்ஸா வச்சிருந்தேன். ஆனா, என் ரஞ்சிக்கிட்டே எதையும் மறைக்க முடியலே. ஒரே ஒரு ஸ்லாட் கிடைக்காதான்னு அவனவன் க்யூவுல நிக்கிற நம்பர் ஒன் சேனல்ல முதமுதலா எனக்கு ஸ்லாட் கிடைச்சிருக்கு ரஞ்சி. கதை என்னோடது தான்! செலக்ட் ஆயிடுச்சு. அதுபத்தி பேசதான் இன்னைக்கு என்னை வரச்சொல்லியிருக்காங்க. நல்ல கதை ரஞ்சி. கண்டிப்பா ஹிட் ஆகும். என்னோட ரேஞ்சே உயரப்போகுது. இதுவரை டைரக்ட் மட்டுமே பண்ணிட்டிருந்தேன். முதமுதலா கதை, வசனம், ஒளிப்பதிவோட டைரக்ஷன் பண்ணப்போகிறேன்."

"நிஜமாகவா?" என்று சந்தோஷப்பட்ட ரஞ்சனா, "எல்லாம் நல்லபடியே நடக்கும். ஆல் த பெஸ்ட்... போய் வாங்க!" என்று வழியனுப்பி வைத்தாள்.

மெர்க்குரி சேனல் அலுவலகம்!

முழுக்க ஏஸியால் குளிரூட்டப்பட்டு, மெத்தென்ற பச்சை நிற கார்ப்பெட் கால்களை இதமாய் உள்வாங்கியது.

முகேஷ் பிரம்மித்துப் போனான்.

வரவேற்பறையில் காத்திருந்தான்.

அரைமணி காத்திருக்கலுக்கு பின் அவனுக்கு அழைப்பு வந்தது.

இதயம் படபட்டென்று அடித்துக் கொள்ள... அந்த அறைவாசலின் முன்னே சென்று நின்றான். தங்கநிற பினேட்டில் கரு நீலத்தில் பொறிக்கப்பட்டிருந்த பெயர் பலகை முகப்பில் பளீரென்றிருந்தது.

'திருபமா. எக்ஸிகியூட்டிவ்!'

# 15

அனுமதி கேட்டு உள்ளே நுழைந்த முகேஷ் குஷன் ரோலிங் சேரில் கம்பீரமாக அமர்ந்திருந்த திருபமாவை பார்த்து உச்ச வேகத்தில் அதிர்ந்தான்.

அந்த பதவியை வகிக்கும் பெண்மணிக்கு குறைந்தபட்சம் நாற்பது, நாற்பத்தைந்து வயதிருக்கும் என்று எதிர்பார்த்து வந்தவனுக்கு சாக்லேட் ஐஸ்கிரீம் போல் அழகான இளம் பெண்ணொருத்தி அமர்ந்திருப்பதை பார்த்து திகைத்துப் போனான்.

திருபமாவுக்கு இருபத்தி ஐந்து வயது சேனலை உருவாக்கி நம்பர் ஒன் இடத்திற்கு அரும்பாடுபட்டு கொண்டு வந்தவர் அவளின் தந்தை சேதுராமன். ஒரு வருடம் முன்பு இறந்து விட்டார். திருபமா ஒரே பெண்! அதனால் அப்பா இடத்தில் அவளிருந்து நிர்வகித்தாள் சும்மா சொல்லக் கூடாது. அப்பாவை விடவு கூடுதலான நிர்வாகத் திறமை அவளிடம் இருந்தது.

"சிட் டவுன் மிஸ்டர் முகேஷ்" என்று புன்சிரிப்புடன் கூறினாள் திருபமா.

"வணக்கம் மேடம்!" கைகூப்பினான்.

"வணக்கம்!" என்றவ

"உங்களைப்பத்தி கேள்விப்பட்டிருக்கிறே மிஸ்டர் முகேஷ். நீங்க அனுப்பியிருந் கதையை படிச்சேன். எனக்கு ரொம் பிடிச்சிருந்தது. அதனால் தான் ப்ரைம் டை ஸ்லாட் தரச் சொல்லியிருக்கிறேன். தென். இந்த கதையை நல்லா ரிச்சா பண்ணினா ரொம் நல்லா வரும். பட், ஒரு எபிசோடுக் இவ்வளவுதான் தயாரிப்பு செலவுன்னு நீங் குறிப்பிட்டிருக்கிற தொகை எனக்கு திருப்தின தரலே. ஸோ.. நான் ஒரு முடிவுக் வந்திருக்கிறேன்."

"......?!"

"நீங்க குறிப்பிட்டிருக்கிற புரொடியூ வேண்டாம். இந்த சீரியலை எங்க நிறுவன தயாரிக்கும். பயப்படாதீங்க... டைரக்ஷ உட்பட உங்க பொறுப்புகளை நீங்க தா பண்றீங்க.. அதையும் பறிச்சிட மாட்டேன் அவள் பேச்சில் சிநேகபாவம் தெரிந்தது.

எதிர்பார்க்காத முகேஷ் பெரித

நெகிழ்ந்துப் போனான்.

"தாங்க்யூ.. தாங்க்யூ ஸோ மச் மேடம்! நீங்க எனக்கு தந்திருக்கிற கோல்டன் ஆப்பர்சூனிட்டியை நான் திறமையோட பயன்படுத்தி எனக்கு மட்டுமில்லே உங்களுக்கும், உங்க நிறுவனத்துக்கும் நல்ல பெயரை வாங்கித் தருவேன்" என்றான் நெகிழ்ந்து போய்.

"அதை தான் நானும் எதிர்பார்க்கிறேன்."

சற்று நேரம் சீரியல், அதில் நடிக்கவுள்ள நடிகர்கள் என்று விவாதித்து விட்டு வெளியேறினான் முகேஷ்.

விடை கொடுத்த திருபமாவிற்கு ஏனோ அவனை மிகவும் பிடித்திருந்தது.

"ஸ்மார்ட் கை" என்று முணுமுணுத்துக் கொண்டாள்.

கொடுக்கிற தெய்வம் கூரையை பிய்த்துக் கொண்டு கொடுக்கும் என்பது முகேஷை பொறுத்தவரை நிஜமானது.

அவனின் புதிய சீரியல் முதல் பத்து எபிசோடிலேயே விறுவிறுப்புடன் எதிர்பார்க்க வைத்தது. டி.ஆர்.பி. ரேட்டிங்கில் முதலிடம் பற்றது. அந்த சீரியலில் சிறு வேடமாவது கிடைக்காதா என்று நடிகர்கள் முகேஷை மொய்த்தெடுத்தனர்.

அந்த வருடத்தின் சின்னத்திரையின் சிறந்த டைரக்டராகவும், சிறந்த ஒளிப்பதிவாளராகவும் முகேஷை தேர்ந்தெடுத்து அவார்டை வழங்கி கவுரவித்தது பல கல்ச்சுரல் அகாடமி.

தங்கள் நிறுவனத்திற்கும் கதையை இயக்க சொல்லி நிறைய அழைப்புகள். சினிமா அழைப்புகளும் வந்தன.

திருபமா அவன் திறமையை பாராட்டி ஒரு காரை பரிசாக வழங்கியதோடு, அடுத்த மெகா சீரியலுக்கும் அவனையே டைரக்டராக நியமித்தாள். அவள் நிறுவனம் சம்மந்தப்பட்ட நிறைய வாய்ப்புகளை அவனுக்கு அள்ளி வழங்கினாள்.

முகேஷிற்கு அவளை பார்க்கும்போது லட்சுமி தேவியே வந்து அருள்பாலிப்பது போலிருந்தது. ஆனந்தக் கண்ணீர் திரண்டு நின்றது.

"உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலே மேடம்."

"கால் மீ திருபமா!"

"ஐயோ நான் எப்படி?"

"நானே சொல்கிறேனே... கூப்பிடுங்க."

"ரொம்ப தாங்க்ஸ் திருபமா! எனக்கு கிடைச்ச இத்தனை புகழ்கள், வாய்ப்புகளுக்கு காரணம் நீங்க தான். என் வெற்றிக்கு பின்னாடி நீங்க தான் இருக்கிறீங்க."

"எப்பவும் இருப்பேன். அதே சமயம், இந்த மண்ணுல விதைப் போட்டா வளரும்ங்கற நம்பிக்கை எனக்கிருந்தது. மண் சத்துள்ளதா, விதையை மரமாக்கிற தகுதியுள்ளதா இருந்தது தானே எல்லாத்துக்கும் காரணம்? உங்க கிட்டே திறமை இருக்கு மிஸ்டர் முகேஷ்."

"என் மேல நீங்க வச்சிருக்கிற நம்பிக்கைக்கு ரொம்ப நன்றி மிஸ். திருபமா."

"வெறும் நன்றி மட்டும் தானா?" குறும்பாய் கேட்டாள்.

"உங்களுக்கு கொடுக்கிற அளவுக்கு என்கிட்டே மதிப்பு வாய்ந்த பொருள் எதுவுமில்லே. ஆனா, கேளுங்க. நீங்க என்ன கேட்டாலும் தருவேன்" என்றான் ஆர்வமாய்.

"நான் என்ன கேட்டாலும் தருவீங்களா?"

"சத்தியமாய்."

"நேரம் வரும்போது கேட்பேன். அப்புறம் இன்னொரு முக்கியமான விஷயம். நம்ம சேனல்ல பெரிய பட்ஜெட்ல பத்து டெலிஃபிலிம் பண்றதா முடிவெடுத்திருக்கிறோம். அதுல அஞ்சு ஃபிலிமை நீங்க தான் டைரக்ட் பண்றீங்க."

"ரியலி?" முகேஷால் நம்பவே முடியவில்லை. வானத்துக்கும் பூமிக்குமாய் குதிக்க வேண்டும் போலிருந்தது.

"இருங்க.. முழுசா சொல்லி முடிச்சிடறேன். ஃபர்ஸ்ட் ஃபிலிமை மலேஷியாவுல ஷூட் பண்றோம். அடுத்த வாரம் ரெடியா இருங்க."

தாங்க முடியாத சந்தோஷத்தில் கையெடுத்துக் கும்பிட்டான்.

"ஐயோ.. என்னங்க இது?"

"முடியலீங்க.. நீங்க எனக்கு அடுக்கடுக்கா தர்ற வாய்ப்புகளை.. எனக்கு என்ன பேசறதுன்னே புரியலீங்க. தாங்கிக்க முடியலீங்க."

"சரி...சரி.." அவன் தோளை மென்மையாய் தட்டிக் கொடுத்தாள்... முதன் முதலாய் அவனைத் தொட்டு.

"பேசாம இந்த சாமிப் படங்களையெல்லாம் எடுத்துட்டு திருபமா மேடத்தோட போட்டோவை வச்சு வணங்கலாம்னு பார்க்கிறேன். என் தெய்வம் அவங்கதான்."

ரஞ்சனா கடக்கட தோசையை கட்டு போட்டுக் கொண்டிருக்க.. சாப்பிட்டபடி கூறினான் முகேஷ்.

''உயிரோட இருக்கிறவங்களை தெய்வமாக்காதீங்க''

''உன் வயசு தான் அவங்களுக்கும். பயங்கர டேலண்டட் லேடி. ஒரு பெரிய நிறுவனத்தையே கட்டிக் காப்பாத்தறதுன்னா சும்மாவா?''

''எங்க... நான் ஒரு முக்கியமான விஷயம் பேசணுமே.''

''அழகு, திறமை இத்தனை இருந்தும், பணம் கோடி கோடியா கொட்டி கிடந்தும் ஏன் இன்னும் கல்யாணம் பண்ணிக்காம இருக்காங்கன்னு தான் புரியலே.'' ரஞ்சனா கூறுவதை காதில் போட்டுக் கொள்ளாமல் நிருபமாவை சிலாகித்து பேசிக் கொண்டிருந்தான்.

''எங்க பிராஞ்ச் சுபிக்ஷா மேனேஜர் அம்சா இருக்காங்க இல்லே.. அவங்க ரெண்டு நாள் முன்னாடி அவங்க வீட்லே சுமங்கலி பூஜை நடத்தியிருக்காங்க. என்னைத் தவிர எல்லாரையும் இன்வைட் பண்ணிலாங்க. நான் பளிச்சுன்னு கேட்டுட்டேன். 'என்னை மட்டும் ஏன் கூப்பிடலே'ன்னு. அதுக்கு அவங்க என்ன தெரியுமா சொன்னாங்க?''

''இந்த ரெண்டு வருஷத்துல என்னோடது அசுர வளர்ச்சி இல்லே? நாம நினைச்சபடி பங்களா, கார், பணம்! கூடிய விரைவில் சினிமா படத்தையும் டைரக்ட் பண்ணப் போகிறேன். இது எல்லாத்துக்கும் காரணம் மேடம் தான். அவங்க என்மேல ரொம்ப நம்பிக்கை வச்சிருக்காங்க. அதனால அவங்க சேனலுக்காக அஞ்சு டெலிஃபிலிம் பண்ண சொல்லியிருக்காங்க!''

''போதும்ங்க உங்க மேடம் புராணம். நான் சொல்லிட்டிருக்கிற விஷயத்தோட சீரியஸ்னஸ் புரியாம, காதிலே போட்டுக்காம எதையெதையோ பேசிட்டிருக்கீங்க'' என்று கோபப்பட்டவள் தொடர்ந்தாள். ''அதுக்கு அந்தம்மா, 'சுமங்கலி பூஜைன்னா என்னத் தெரியுமா? அம்மி மிதிச்சி, அருந்ததிப் பார்த்து, ஆயிரம் பேரோட அட்சதை வாழ்த்துக்களோட நெஞ்சு நிறைய தாலி வாங்கிக்கிட்ட பெண்மணிகள் கலந்துக்கற புனிதமான பூஜை! உன்னை மாதிரி குடும்பம் நடத்தற பொண்ணுங்களெல்லாம் கலந்துக்கக் கூடாதும்மா'ன்னு கிண்டலா சொன்னாங்க. எனக்கு மனசுக்கு ரொம்ப கஷ்டமாயிடுச்சுங்க''

குரல் அழுகைக்கு தயாரானது.

''உனக்கு நான் எத்தனையோ முறை சொல்லியாச்சு. கைநிறைய சம்பாதிக்கிறே... தேவையான வசதிகள் இருக்கு. நீ வேலைக்கு போய் தான் ஆகணும்ங்கற கட்டாயம் என்ன? போகாதே. மனசை புண்படுத்தணும்னே பேசறவங்க பேசிக்கிட்டு தான் இருப்பாங்க. அதெல்லாம் காதிலே விழக்கூடாதுன்னு விட்டோட இரு! அதை விட்டுட்டு இப்படி கண்ணை கசக்கிட்டிருந்தா எனக்குப் பிடிக்கா... அவ்வளவு தான் நான் சொல்லுவேன்.'' கை கழுவினான்.

''இல்லேங்க.. நான் என்ன சொல்ல வர்றேன்னா...''

''ப்ளீஸ் ரஞ்சனா! எனக்கு நீ சொல்றதையெல்லாம் கேட்டுக்கிட்டிருக்க பொறுமையில்லே. அடுத்த வாரம் ஷூட்டிங்கிற்காக மலேஷியா போகணும். கவனிக்க வேண்டிய வேலைகள் நிறைய இருக்கு. நீ கண்ணீர் விட்டு கதை பேசறதை விடு. நிருபமா மேடம் மாதிரி போல்டா இரு'' கூறிவிட்டு வெளியேறினான்.

போகிறவனை வித்தியாசமாய் பார்த்தாள் ரஞ்சனா.

# உடலுக்கு குளிர்ச்சி தரும் நெல்லிக்காய்

**நெ**ல்லிக்காய் சீசனில் நெல்லிக்காயை கணிசமாக வாங்கிக் கொண்டு வெய்யில் காலத்தில் குளிர்ச்சியை தரும் நெல்லி வடாம், எண்ணெய், ஊறுகாய் போன்றவைகளை தயாரித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

நெல்லிக்காயை எண்ணெயில் வதக்கும் போதே உப்பு, காயம், மிளகாய்தூள் பரவலாகத் தூவி நன்றாக எண்ணெயில் வேக வைத்து ஊறுகாய் தயாரித்து வைத்துக் கொண்டால் வீணாகாமல் பல மாதங்கள் வரை கெடாமல் இருக்கும். வேக வைத்து செய்தால் சீக்கிரம் கெட்டுப்போகும்.

நெல்லிக்காயை கொட்டை நீக்கி பச்சையாக சீவி இத்துடன் மிளகாய், உப்பு, இஞ்சி சேர்த்து மிக்ஸியில் அரைத்து உருண்டையாகவோ அல்லது தட்டையாகவோ தட்டி வெயிலில் காய வைத்து டப்பாவில் போட்டு வைத்தால் தேவைப்படும் போது கொஞ்சம் வெந்நீரில் ஊற வைத்து தயிரில் கலக்கி தொட்டுக்கொண்டோ, பிசைந்து சாப்பிட்டவோ நன்றாக இருக்கும்.

நெல்லிக்காயை சாறு எடுத்து நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெயில் ஊற்றி காய்ச்சி வைத்துக் கொண்டால் தினம் ஒரு ஸ்பூன் தலைக்குத் தடவினால், தேய்த்து குளித்து வந்தால் உடம்புக்கு நல்ல குளிர்ச்சி தரும்.

நீரில் உப்பு போட்டு நெல்லிக்காயை ஊறவைத்து தினம் ஒரு நெல்லிக்காய் உணவில் சேர்த்து வர உடம்புக்கு நல்ல குளிர்ச்சி கிடைக்கும்.

நெல்லி முள்ளியாக தயாரித்தாலும் அரைத்துக் குளிக்க உபயோகிக்கலாம். வெயிலில் அலைந்து வருபவர்களுக்கு கண் எரியாமல் குளிர்ச்சியாக இருக்கும்.

-ஜி. விஜயா,
திருவிடைமருதூர்.



# 16

**ம**லேஷியா!

வெற்றிகரமாய் ஷூட்டிங்கை முடித்து விட்டு, களைத்து போய் ஹோட்டல் அறைக்கு வந்த முகேஷ், ''ஹா''வென்று பெருமூச்சு விட்டபடி கட்டிலில் மல்லாந்து விழுந்தான். மனசு நிறைவாய் இருந்தது.

'என் வாழ்க்கையில் தான் எத்தனை மாற்றங்கள்? எல்லாமே நிருபமாவை சந்தித்த பிறகு ஏற்பட்டது தான்!'

கதவு தட்டப்பட்டது.

''கம்மின்!'' என்றான் எழாமலேயே.

அடுத்த கணம் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள் நிருபமா.

திடுக்கிட்டு எழுந்தமர்ந்தவன், ''வாங்க'' என்றான் பரபரப்புடன்.

அவனுக்கு பக்கத்து அறையில்தான் அவளும் தங்கி இருந்தாள்.

''கூப்பிட்டிருந்தா நானே வந்திருப்பேனே... மேடம்!''

''ஏன் நான் வரக்கூடாதா? எத்தனையோ முறை சொல்லியாச்சு பேர் சொல்லி கூப்பிடுங்கன்னு...!'' சோபாவில் அமர்ந்தாள்.

''அப்படி கூப்பிட முடியலீங்க! என்னைப் பொறுத்தவரை நீங்க தெய்வம்!''

''சேச்சே... தெய்வம், கிய்வம்னு என்னை தூர விலக்கி வைக்காதீங்க. நான் உங்க தோழி. ஓக்கே? ஷூட்டிங் நல்லபடியா முடிஞ்சது. நாளைக்கு இண்டியா கெளம்பறோம். அதுக்கு முன்னால ஒரு ஸ்வீட் நியூஸ் சொல்லணுமே?''

''என்னங்க?'' என்றான் ஆவலாய்.

''கால் மீ நிருபமா''

''ஓக்கே! சொல்லுங்க நிருபமா!''

''நான் இதுவரை சினி ஃபீல்டிலே இறங்கினதில்லை. பெரிய பட்ஜெட்ல ஒரு படம் பண்ணலாம்னு நினைக்கிறேன். நீங்கதான் அதுக்கும் டைரக்டர்!''

''ஓ... தாங்க்யூ... தாங்க்யூ லோ மச்!'' மகிழ்ச்சி வெள்ளம் முகத்தில்.

''வெறும் தாங்க்ஸ் மட்டும் தானா?''

''என்ன வேணும் கேளுங்க. எதை கேட்டாலும் தருவேன். இந்த வாழ்க்கை நீங்க போட்ட பிச்சை!''

''எமோஷனலாகாதீங்க! நான் எதை கேட்டாலும் தருவீங்களா?''

''உயிரை கேட்டாலும் தருவேன்!''

''கேக்கறேன். அதுக்கு முன்னாடி கொஞ்சம் பேசணும். என்னைப்பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க?''

''பெண்களுக்கு உதாரணமா சொல்லக்கூடிய அத்தனை தகுதியும் உள்ள ஒரு பெண்!''

மெல்ல சிரித்துக் கொண்டாள் நிருபமா.

''நான் ஏன் இன்னும் கல்யாணம் பண்ணிக்கலேன்னு யோசிச்சீங்களா?''

''ம்... ஆனா, கேட்க தயக்கமாயிருந்துச்சு. அதனால கேட்கலே!''

''நமக்குள்ளே இனி எந்த ஃபார்மாலிட்டியும் இருக்கக் கூடாது முகேஷ்!

காலேஜ்ல படிக்கறப்ப ஒருத்தரை காதலிச்சேன். அவர் ஒரு ஆக்ஸிடண்ட்ல இறந்துப் போய்ட்டார். அதனால வேற எந்த ஆணையும் என் மனசுக்குள்ளே அனுமதிக்க முடியலே. அப்பா எவ்வளவோ போராடி பார்த்தார். என் மனசை மாத்த முடியலே. பட், முதமுதலா உங்களைப் பார்த்தப்ப பயங்கர ஷாக்! இறந்துப்ப்பான என் லவர் ஆனந்த் மாதிரியே அச்சு பிசகாம இருந்தீங்க. குணத்திலே கூட ஓரளவு ஒற்றுமை. அதனாலே உங்கமேலே ஒரு தனிப்பட்ட பிரியம் ஏற்பட்டது. ஒரு கட்டத்துலே நீங்க இல்லாம என்னால வாழ முடியாதுங்கற அளவுக்கு... உங்களை நேசிக்க ஆரம்பிச்சிட்டேன்.''

''நி...ரு...ப...மா!'' அதிர்ச்சியில் உடல் நடுங்கியது.

''யெஸ்... ஐ.... லவ்... யூ''

''நா... நான் ஏற்கனவே...''

''தெரியும்... ரஞ்சனாவைப் பத்தி, நீங்க வாழ்ந்திட்டிருக்கிற முறைபற்றி...''

''தெரிஞ்சுமா?''

''பிகாஸ்... ஐ... லவ்... யூ! அசைக்கவே முடியாத என் இதயத்தை அசைச்சு பார்த்தவர் நீங்கள் தான். என் சுயநலத்துக்காக ரஞ்சனாவை வெட்டி எறிஞ்சிட சொல்ல மாட்டேன். அவளும் இருக்கட்டும். வாரம் ஒரு நாள் போய் பார்த்துட்டு வாங்க...!'' அவளாகவே தீர்மானம் செய்தாள்.

முகேஷால் பதில் கூற முடியவில்லை.

''என்ன முகேஷ் பேசாம இருக்கீங்க? என்னை உங்களுக்கு பிடிக்கலையா?''

''சேச்சே... அப்படியில்லை.. எ... எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலே...''

''நான் என்ன கேட்டாலும் தருவேன்னு சொன்னீங்களே முகேஷ்! உங்க இனிஷியல் வேணும். உங்க கையால தாலி கட்டிக்கணும். எனக்கு நீங்க வேணும் முகேஷ். நிர்வாகப் பொறுப்பை உங்ககிட்டே ஒப்படைச்சிடறேன். நான் உங்களை கவனிச்சுக்கறேன். சராசரி ஒரு பெண்ணைப்போல கணவன், குழந்தைகள், குடும்பம்னு வாழ ஆசைப்படறேன். ப்ளீஸ்.. மறுத்திடாதீங்க முகேஷ். உங்க மேலே அளவுக்கதிகமா பிரியம் வச்சிட்டேன். நீங்க மறுத்தா என்னால தாங்கிக்க முடியாது. ப்ளீஸ்'' அவன் கையைப் பற்றி கொண்ட நிருபமா கெஞ்சினாள். கண்களில் கண்ணீர் உற்பத்தியானது.

கோடீஸ்வரி. நூற்றுக்கணக்கான பேருக்கு சம்பளம் தரும் ராணி. எல்லோருக்கும் கொடுத்தே பழக்கப்பட்ட யாருக்குமே தான் விரும்பி கேட்டது கிடைக்காவிட்டால் எப்படி தாங்கிக் கொள்ள இயலும்? தன் தகுதியை விட்டு பல படிகள் கீழிறங்கி அவன் காதலுக்காக மண்டியிட்டாள் நிருபமா.

அதே அதிர்ச்சி தான் முகேஷிற்கும்.

'பெரிய நிறுவனத்தின் சாம்ராஜ்ய ராணி, திரண்ட கோடிக்கணக்கான சொத்துக்களுக்கு ஒரே வாரிசு. அவள் நினைத்தால், டாட்டா, பிர்லா குடும்பத்திற்கு கூட மருமகளாய் போகலாம். ஆனால், மிக சாதாரணமான என்னிடம் தன்னை திருமணம் செய்து கொள்ள சொல்லி கெஞ்சுவதா?' அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

''நிருபமா என்ன இது? நீங்க என்னிடம் கெஞ்சுவதா?''

''என்னை கல்யாணம் செஞ்சுக்கறேன்னு சொல்லுங்க!''

''அது... அது... ரஞ்சனாகிட்டே கேட்காம... நான் எப்படி?''

''அவ என்ன தாலி கட்டின பொண்டாட்டியா பர்மிஷன் கேட்கறதுக்கு?'' என்றாள் பட்டென்று.

''ஃபாரின் போய் வந்தா நல்ல செவ செவன்னு கலராகி வருவாங்கன்னு தான் கேள்விப்பட்டேன். நீங்க என்னன்ன கறுத்துப்போய் வந்திருக்கீங்க?''

ரஞ்சனா செல்லமாய் முகேஷின் கன்னத்தை தட்டிவிட்டு, இளஞ்சூட்டில் இருந்த எண்ணெயை அவன் தலைக்கும், உடம்பிற்கு தேய்த்து விட்டாள்.

அவளின் பாசாங்கற்ற அன்பு அவனுக் உறுத்திற்று.

''போதும் விடு ரஞ்சனா! நாே தேய்ச்சுக்கறேன்!''

''தோடா...! என்ன ஐயாவுக்கு திடீர் வெட்கம்...? இத்தனை வருஷமில்லாம! இ என்னோட இலாகா! அத்து மீறி பறிக் நினைக்காதீங்க!'' கிண்டலாய் கூறியவள், ''ஒ முக்கியமான விஷயம்!''

''என்ன?''

''உங்க விருப்பப்படி வேலை ரிஸைன் பண்ணிட்டேன்!''

''அப்படியா?'' என்றவனி எண்ணமெல்லாம் மலேஷியாவில் நடந் சம்பவம் பற்றியே இருந்தது.

'இவளிடம் எப்படி ஆரம்பிப்பது?'

''என்னங்க அப்படியான்னு சாதாரண கேட்டுட்டீங்க? சந்தோஷப்படுவீங்கன்னு நினைச்சேன். அப்புறம் இன்னொரு விஷயம்!''

''என்ன?''

''நாம எதிர்பார்த்ததுக்கும் மேலே நமக்கு வசதி வந்தாச்சு. சொந்த வீடு, கார், எல்லாமே இருக்கு. இனியும் தள்ளிப் போட வேண்டாம்னு பார்க்கறேன்!''

''எதை?'' எண்ணெயை வழித்துவிட்டு கண்களை சுருக்கி அவளைப் பார்த்தான்.

''குழந்தை பெத்துக்கறதை!'' சொல்லிவிட்டு வெட்கத்துடன் ஓடிவிட்டாள்.

முகேஷ் திகைத்துப்போனான்.

''**நோ**... நோ முகேஷ்! ரஞ்சனா குழந்தை பெத்துக்கக் கூடாது. அதுக்கு நீங்க அனுமதிக்க கூடாது. உங்க குழந்தையை நான்தான் சுமக்கணும். நான் மட்டும் தான் சுமக்கணும். நீங்க ரஞ்சனாகிட்டே பேசிடுங்க. சும்மா ஒரு ஃபார்மாலிட்டிக்கு தான். உங்களால முடியலேன்னா நான் வந்து பேசறேன்!''

''வே... வேணாம் நிருபமா! நா... நானே பேசிடறேன்!''

''சீக்கிரமே நல்ல பதிலை சொல்லுங்க முகேஷ்!''

அவனை நெருங்கிய நிருபமா, அவன் இடையைப் பற்றி தன்னருகே இழுத்து இதழ்களை கவ்வினாள்.

புதுசுகம், புதுமணம், புதுப்பெண்!

முகேஷிடமிருந்த - கொஞ்ச நஞ்ச தயக்கமும் காணாமல் போக... அவன் கைகள் அவளின் முதுகை அழுத்திற்று.

ஏதோ ஒரு மயக்கத்துக்கு கட்டுப்பட்டுதான் மனிதன் தன் சுதந்திரத்தை இழந்து விடுகிறான்.

ஆசை பேராசையாகவும், அன்பு வெறியாகவும் மாறும்போது அமைதி எங்கோ விலகிப் போய்விடுகிறது.

## 17

''**ஷ**ட் அப் முகேஷ். உனக்கென்ன பைத்தியமாப் பிடிச்சிருக்கு? எப்படி, எப்படிடா இப்படியெல்லாம் யோசனைப் போகுது? பாவம்டா ரஞ்சனா. உன்னையே நம்பிட்டிருக்கிற அவளுக்கு துரோகம் பண்ணாதே!'' ஆத்திரத்தில் முகம் சிவந்து விட்டது முத்துக்குமாருக்கு.

''நிருபமாவும் என்னையே நம்பிட்டிருக்கிறா முத்து. என்னால அவளை அவாய்ட் பண்ண முடியாது. நான் ஒன்னும் ரஞ்சனிய அம்போன்னு விட்டுடப் போறதில்லே. இன்னைக்கு நான் இந்தளவு உயர்ந்த நிலையிலே இருக்கிறேன்னா அதுக்கு நிருபமா தான் காரணம்.''

''நிருபமா தேத்து வந்தவ. அவளுக்கு நன்றிகடன் சுடுகாட்ட, ரஞ்சனாவுக்கு நம்பிக்கை துரோகம் பண்ணனுமா?''

''என்னை நீயாவது புரிஞ்சுக்க முத்து. தப்பா எடை போடாதே.''

''நல்லாப் புரிஞ்சுக்கிட்டேன். பணத்தை நாம ஆட்டிப் படைக்கணுமே தவிர, நம்மை பணம் ஆட்டிப் படைக்கக் கூடாது. நிருபமா உன்னை பணத்தால ஆட்டிப் படைக்கிறா.''

''அவ ரொம்ப நல்லவ முத்து''

''உடம்புக்கு முடியாம கிடந்தப்ப பக்கத்திலேயே இருந்து கவனிச்சுக்கிட்ட ரஞ்சனாவை விடவுமா?''

''அவளை நான் கெட்டவன்னு சொல்லலியே. அதே சமயம் நிருபமாவை கல்யாணம் பண்ணிக்க எடுத்த முடிவிலேயும் மாற்றமில்லே.''

''தாலி கட்டப் போறியா?''

''ஆமாம்''

''நீதான் முற்போக்குவாதியாச்சே. தாலி போலின்னு டயலாக் பேசுவியே.''

''நிருபமாவுக்கு நம்பிக்கை இருக்கு. அவளுக்காக என்னை நான் மாத்திக்கிட்டேன்.''

''மிருகமாகவா?''

''ப்ளீஸ் முத்து. வார்த்தையால என்னைக் குத்தி கிழிக்காதே. நீ என் நண்பன். இந்த விஷயத்திலே நீதான் எனக்கு ஹெல்ப் பண்ணனும். ரஞ்சனா கிட்டே நீதான் நயமா எடுத்து சொல்லி புரிய வைக்கணும்.''

''சொல்லாதேடா... உன் வாயால என்னை நண்பன்னு சொல்லாதே. ஒரு நம்பிக்கை துரோகி என் நண்பனா இருக்க முடியாது. நம்பிக்கைதான் ஆதாரம்னு தாலி கட்டிக்காமலேயே உன்னோட குடும்பம் நடத்தின ரஞ்சனாவை இதை விட உன் கையால வெட்டிப் போட்டுடு. என் நண்பன் முகேஷ் என்னைப் பொறுத்தவரை செத்துப் போயாச்சு. நீ போகலாம்'' என்றான் முத்து தீர்மானமாக.


''முத்து...''

''குட் பை! போகலாம்னு சொல்லியாச்சு''

அவனையே சில கணங்கள் முறைத்துவிட்டு சரேலென வெளியேறினான் முகேஷ்.

முத்துக்குமாருக்கு மனசு ஆறவில்லை. ரஞ்சனாவுக்கு போன் பண்ணி தன் வீட்டிற்கு வரவழைத்தாள்.

இதமாய், பதமாய், அவளுக்கு இழைக்கப்பட்டுள்ள துரோகத்தைப் பற்றி



எடுத்துரைத்தாள்.

திக்பிரமை பிடித்து அமர்ந்திருந்தாள் ரஞ்சனா. கண்களில் இருந்து பொலபொலவென கண்ணீர் வடிந்துக் கொண்டே இருந்தது.

"நீ பெரிய தப்புப் பண்ணிட்டே ரஞ்சனா. தாலி அடிமைச்சின்னம், அதுக்கு எந்த அர்த்தமும் இல்லேன்னு அதை மதிக்காம நம்பிக்கையின் அடிப்படையில் சேர்ந்து வாழ்ந்தியே... இப்ப எவ்வளவு ஈஸியா இன்னொரு பெண்ணை கல்யாணம் பண்ணிக்க துணிஞ்சிட்டான் பார்த்தியா?"

"......?!"

"தாலிங்கறது சாதாரண விஷயமல்ல ரஞ்சனா. சமூகத்தை ஒண்ணா சேர்த்து கட்டிப் போடற சங்கிலி. மனசுக்குப் பிடிக்கலேன்னாலும் எத்தனையோ பேர் சேர்ந்து வாழறாங்கன்னா... அதுக்குக் காரணம் பல பேர் முன்னிலையில் கட்டப்பட்ட தாலி. அந்தத் தாலிய உன் கழுத்துல முகேஷ் கையால கட்டியிருந்தா, அவன் இவ்னோ ஈஸியா நிருபமா விஷயத்திலே முடிவெடுத்திருப்பானா? கடைசியிலே ஒரு குழந்தை பெத்துக்கற உரிமையக் கூட உனக்கு அவன் தரலே. அவன் கல்யாணம் பண்ணிக்கப் போறதை உன்னால தடுக்க முடியுமா? கோர்ட்டுக்கு தான் போக முடியுமா? அட்லீஸ்ட் ஜீவனாம்சமாவது வாங்க முடியுமா? உங்க கல்யாணம் நடந்ததுக்கு எந்த எவிடென்ஸும் இல்லையேம்மா! சில விஷயங்கள் மூடநம்பிக்கையா தெரியலாம். அடிமைத்தனமா தெரியலாம். ஆனா, பெரியவங்க நம்ம நன்மைக்காக ரொம்ப யோசிச்சு சில கட்டுப்பாடுகளை, சம்பிரதாய சடங்குகளை உருவாக்கி வச்சிட்டுப் போயிருக்காங்க. அதை மதிக்காமப் போனதால பாதகம் யாருக்குன்னு இப்ப புரியுதா?"

ரஞ்சனா வேதனைகளை உள்வாங்கிக் கொண்டு கல்லைப் போலிருந்தாள்.

"என்னங்க நீங்க? ரஞ்சனா ரொம்ப ஷாக்காகி இருக்காங்க. இப்பப்போய் இது தவறு அது

தவறுன்னு குற்றம் சொல்லிக்கிட்டிருக்கீங்க? நடக்க வேண்டியதை பேசுங்க'' என்றாள் அவன் மனைவி ரோகிணி.

முத்துக்குமார் ரஞ்சனாவை பரிவுடன் பார்த்தான்.

''ரஞ்சனா... இந்த விஷயத்திலே நீ என்ன முடிவை எடுக்கப் போறேன்னு தெரியாது. பட், என்னை உன் கூடப் பொறந்த அண்ணனா நினைச்சுக்க. எந்த பிரச்சினைன்னாலும், எந்த உதவின்னாலும் நானும் ரோகிணியும் இருக்கோம்மா உனக்கு. அந்த தைரியத்தோட போய் வா.''

ரஞ்சனா கண்ணீரை வழித்தெறிந்து விட்டு புறப்பட்டாள்.

**மு**கேஷின் செல்போன் அலறியது.

நிருபமா தான் அழைத்தாள்.

''சொல்லு நிருபமா!''

''எங்கே இருக்கீங்க''

''டப்பிங் தியேட்டர்ல..''

''ரஞ்சனா கிட்டே பேசிட்டீங்களா?''

''இ... இன்னுமில்லே. ரெண்டு நாள்ல எப்படியாவது...''

''ம்ஹூம்... உங்களுக்கு இந்த ஜென்மத்துல தைரியம் வராது. இது என் வாழ்க்கை பிரச்சினை. நானே ரஞ்சனாகிட்டே பேசிக்கறேன்.''

''அவசரப்படாதே நிருபமா. பக்குவமா...''

''நோ...நோ! நான் நினைச்சா உடனே சாதிச்சாகணும் எனக்கு. இந்தளவுக்கு நீங்க தயங்கறதுல அர்த்தமே இல்லே. ரஞ்சனா முறைப்படி உங்க மனைவி இல்லையே. பிறகென்ன? லிஸன் முகேஷ்.... இப்ப நான் கார்ல டிரைவ் பண்ணிக்கிட்டே தான் பேசறேன். உங்க வீட்டுக்குதான் போய்க்கிட்டிருக்கேன்!'' என்றவள் தன் செல்போனை அணைத்தாள்.

''மை காட்!'' சகலமும் பதற தன் காரை நோக்கி ஓடினான் முகேஷ்.

**வீ**ட்டு வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டு எட்டிப்பார்த்த ரஞ்சனாவின் நெற்றி சுருங்கியது.

'யாரிவள்?'

சந்தன நிறத்தில் ஐந்தரையடி உயரத்தில் கடைந்தெடுத்த சிற்பமாய் அழகிய இளம்பெண். அடிக்கடி முன்பக்கம் வந்து விழுந்த பளபளப்பான கூந்தலை தலையை அசைத்து ஒதுக்கும் மேனரிஸமே கவர்ச்சியாக இருந்தது.

படியேறிய நிருபமா வாசலில் நின்றிருந்த ரஞ்சனாவை அலட்சியப் புன்னகையுடன் ஏறிட்டாள்.

''நீங்க ரஞ்சனா தானே?''

''ஆமாம்... நீங்க?'' என்றாள் இன்னும் ஆச்சர்யமாய்.

''நான்... நிருபமா. உங்களை தான் பார்க்க வந்தேன்.''

இன்னும் அதிர்ந்தாள். அரைமணி நேரம் முன்புதான் பெரிய இடி செய்தியை சுமந்து கொண்டு வீடு வந்து சேர்ந்திருந்தாள். இப்போது அடுத்த இடி நிருபமா.

தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''உள்ளே வாங்க!'' என்றாள்.

உள்ளே வந்த நிருபமா வீட்டை ஒ

தோட்டம் விட்டபடி சோபாவில் அமர்ந்தாள்.

''நான் யாருன்னு தெரியுமா?''

''நல்லாவேத் தெரியும்!''

''எப்படி?''

''என் கணவர் எப்பவும் உங்க புராண

த்தான் பாடுவார்''

''கணவரா?'' என்றவள் நக்கலா

சிரித்தாள்.

''அவரை விட அவர் நண்ப

முத்துக்குமார் உங்களைப் பத்தி நிறை

சொல்லியிருக்கிறார்'' என்றாள் கசப்பாய்.

''ஓ! நான் இப்ப எதுக்க

வந்திருக்கேன்னு தெரியுமா?''

''தெரியும்''

''தெரியுமா? எப்படி?''

''அதான் சொன்னேனே முத்துக்கும

உங்களைப் பத்தி நிறை

சொல்லியிருக்கிறார்னு''

''என்ன சொன்னார்?''

''நேரடியா விஷயத்துக்கு வர்றேன்

உனக்கு வெட்கமாயில்லே? அடுத்தவளோ

புருஷனை பங்கு போட வீடு தே

வந்திருக்கியே'' என்றாள் ஒருமைக்கு தாவி.

அவள் சட்டென்று விஷயத்தை

போட்டுடைப்பாள் என்று நிருபம

எதிர்பார்க்கவில்லை.

''ஏய்...ஷட்டப் யுவர் டங்க். நா

நல்லவிதமா பேசி முடிக்கணும்னு வந்தா.

திமிரா பேசறே!'' என்றாள் கோபமாய்.

''நீ யாரு? என் விஷயத்திலே தலையிட

பணமிருந்தா என்ன கேடுகெட்டதனத்தையு

செஞ்சிடலாம்ங்கற திமிரா?''

''ஏய்... உன்கிட்டே சண்டை போ



வரலே. நான் முகேஷை கல்யாணம் பண்ணிக்கப் போறேன்''

''அவர் என் கணவர்''

''தப்பு. கணவர்னு சொல்லாதே... வச்சுக்கிட்டிருந்தவர்னு சொல்லு.''

''மரியாதை கெட்டுப் போய்டும். யாரைப் பார்த்து என்ன வார்த்தை பேசறே?''

''ஏன் சரியா தானே பேசினேன்? இதோ பார். முகேஷுக்கும் எனக்கும் கல்யாணம் நடக்கப் போறதுன்னு முடிவாயாச்சு. ஒழுங்கா சம்மதிச்சா.. நீயும் வசதியா வாழலாம். என்ன சொல்றே?''

''என்ன மிரட்டறியா? நான் சம்மதிக்கலேன்னா?''

''உன் வாழ்க்கையை பறிச்சுக்க மாட்டேன். ஆனால், எடுத்துக் கொள்ளாமல் விடவும் மாட்டேன். சட்டப்படி, சம்பிரதாயப்படி எங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் நடக்கப் போகுது.''

அவள் பேசிக் கொண்டிருக்கும் போதே முகேஷின் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது. உள்ளே வந்தான் முகேஷ்.

அங்கு நிருபமாவையும், வெளுத்த முகத்துடன் ரஞ்சனாவையும் பார்த்து நடந்தவைகளை யூகித்துக் கொண்டான்.

தலை கவிழ்ந்தபடி நின்றான்.

ரஞ்சனா அவனருகே சென்றாள்.

''இவ சொல்றதெல்லாம் நிஜமா?''

''...?!''

''சொல்லுங்க இவ சொல்றதெல்லாம் நிஜமா?'' கோபமாய் கேட்டாள்.

''நிருபமா என் மேலே உயிரையே வச்சிருக்கா.''

''நான் உங்ககிட்டே பாசமா இருந்ததில்லையா?''

''விதண்டாவாதம் வேண்டாம் ரஞ்சனா. சம்மதிச்சா எல்லாரும் சந்தோஷமா வாழலாம்.''

''நான் சம்மதிக்கலேன்னா?''

''புரியாம பேசாதே ரஞ்சனா. உன்னிடம் சம்மதம் கேட்பது ஒரு மரியாதைக்காக தான். நீ என்ன... நான் தாலி கட்டிய பொண்டாட்டியா?

ஒருத்தருக்கொருத்தர் பிடிச்சிருந்தது. அஞ்சு வருஷம் குடும்பம் நடத்தினோம். அ.... அவ்வளவு தானே?''

''சபாஷ்'' கண்ணீர் மல்க கைத்தட்டினாள். எப்படியெப்படி? ஒருத்தருக்கொருத்தர் பிடிச்சிருந்தது... அஞ்சு வருஷம் குடும்பம் நடத்தினோமா? அப்படின்னா நான் யாரு? வச்சுக்கிட்டவளா? சீப்பா? அவ்வளவு சீப்பாகவா என்னை நினைச்சிட்டே? நீ மனசு கஷ்டப்பட்டா நானும் பட்டு, நீ சிரிச்சா நானும் சிரிச்சு, உன் உயர்வுல சந்தோஷப்பட்ட என்னை ஒரே வார்த்தையிலே குப்பையிலே வீசி எறிஞ்சிட்டியே. தாலிங்கறது பெண்களை பாதுகாக்கிற கவசம்ங்கறதை புரிஞ்சுக்காம, அடிமைத்தனம் அது இதுன்னு தான்தோன்றித்தனமா முடிவெடுத்ததால எனக்கு கிடைச்ச செருப்படி. ஒரு நல்ல ஆம்பளைங்கறவன் யார் தெரியுமா? பத்து பேர்கிட்டே போய் தன் ஆண்மையை நிரூபிக்கிறவன் இல்லே. தன்னையே நம்பி வந்தவளை கடைசி வரை கண்கலங்காம வச்சு காப்பாத்தறவன் தான். அப்படிப் பார்க்கப் போனா நீ ஒரு ஆம்பளையே இல்லே.''

''....?!''

''யாரை வேணும்னாலும் மன்னிச்சிடலாம். நம்பிக்கை துரோகிய மட்டும் மன்னிக்கவே கூடாது. தன்னால் ஏற்படுகிற தவறுகளை மன்னிக்க ஒருத்தர் எப்பவும் பின்வாங்கவே கூடாது. நானும் தப்பு பண்ணவதான். உன்னை முழுக்க நம்பி என்னை, என் வாழ்க்கையை ஒப்படைச்சேனே.. அது பெரிய தவறு... முட்டாள்தனம். நம்ம கலாசாரத்தை, திருமண பந்தத்தை நான் மதிக்கலே. அதோட விளைவை அனுபவப்பூர்வமா உணர்ந்திட்டேன். தாலி தர்ற உரிமையை, ஸேப்டியை இப்ப உணர்றேன்.

அப்ப தாலி மேலே, சடங்கு மேலே இல்லாத நம்பிக்கை இப்ப இவளுக்காக வந்திடுச்சா. கம்ஃபார்ட்டபிள் லைஃப்புக்காக மனுஷன் தன்னை ரப்பர் போல் வளைத்துக் கொள்கிற அவலம் கெட் டு கெதர் லைஃப்ல தான் நடக்குது. மனுஷன் பச்சோந்தியாய் மாற வசதியை ஏற்படுத்தித் தருது.

பொண்டாட்டிங்கறவ தாயாக, சகோதரியாக, வேசியாக இருக்கணும். ஆனா நீங்க... துரோகியாக மட்டுமாக தான் இருப்பீங்க இல்லே?

உன்னைப் பொறுத்தவரை நான் மரம். நிழலுக்காக ஒதுங்கினே. ஆனா மரத்திற்கு மட்டும் எந்த உணர்ச்சியும் இருக்கக் கூடாது. அப்படித்தானே?

நல்ல அப்பா அம்மாவுக்கு பிறந்திருந்தா இப்படியொரு மோசமான முடிவை எடுத்திருக்க மாட்டே! நல்லவேளை உன் குழந்தைய நான் சுமக்கலே. இல்லேன்னா நாளை அது வளர்ந்து, அவனை வேற எந்த

''பாண்ணாவது இதே கேள்வியை கேட்டிருப்பா.''

அவனின் ஒவ்வொரு வார்த்தையும் ஆணி கொண்டு அறைவதுப் போல் இருந்தது. முகேஷ் பதில் சொல்ல வார்த்தைகளின்றி தலை கவிழ்ந்தான்.

''இதோ.. இங்கே நிக்கறானே பணக்காரி. பணத்தைக் காட்டி உன்னை வளைச்சிட்டா. ஆனா, நாளைக்கு உன்னை மாதிரி வேறொருத்தனை சந்தித்தால்.... 'நீங்க செத்துப் போன என் லவர் ஆனந்த் மாதிரியே இருக்கீங்க'ன்னு உன்னை சுழற்றிட்டு அவன்கிட்டே போக மாட்டான்னு என்ன நிச்சயம்?''

''ஏய்...'' என்றபடி அவளை அடிக்க கையை ஓங்கினாள் நிருபமா.

ஓங்கிய கையை தடுத்து நிறுத்தினாள் ரஞ்சனா.

''இந்த கையை நீட்டற வேலையெல்லாம் என்கிட்டே வச்சுக்காதே! இதோ வாலாட்டிக்கிட்டு நிக்கறாரே அவர்கிட்டே வச்சுக்க. இந்த மனுஷன் எப்ப உன்னை கல்யாணம் பண்ணிக்கணும்னு முடிவு பண்ணிட்டார்னு கேள்விப்பட்டேனோ... அப்பவே நான் முடிவுப் பண்ணிட்டேன்... ஒட்டுமொத்தமா 'விலகிடணும்'னு. சொல்லிக்கிட்டு 'போகலாம்'னு தான் காத்திருந்தேன். எனக்கு எச்சில் சாப்பிட்டு பழக்கமில்லை. ஆனா, நான் சாப்பிட்டு மிச்சம் வச்ச எச்சிலை தான் கோடீஸ்வரியான நீ சாப்பிடப் போகிறே.

பணமில்லேன்னாலும் கவுரவத்தை, மானத்தை விட்டுக் கொடுக்கிற பெண்ணில்லே நான்! ஒரு பெண் நினைச்சா.. எதையும் சாதிப்பா. ஆனா, சண்டை போட்டு இந்த கேடு கெட்ட மனுஷன்கிட்டே உரிமை கேட்க மாட்டேன். அதைவிட கேவலம் வேற என்ன இருக்கு? இந்த ஊருக்கு வரும் போது டிக்கட் கூட எடுக்காம தான் கையிலே ஒத்தை ரூபா இல்லாம வந்தேன். என்னால உழைச்சு வாழமுடியும். இவகிட்டேயாவது உண்மையா நடந்துக்க. பாவம் அவளும் பெண் தானே?''

சொல்லி விட்டு அறைக்குள் சென்றாள்.

நிருபமா சிலை போல் நின்றிருந்தாள்.

அடுத்த நிமிடம் பெட்டியோடு வெளிப்பட்டாள்.

அவர்கள் இருவரையும் புழுபோல் பார்த்து விட்டு வெளியேறினாள்.

அவளை தடுக்க துணிவில்லை இருவருக்கும். வைராக்கியமுள்ள மனது எதையும் வெல்லும். அந்த துணிவும் தன்னம்பிக்கையும் ரஞ்சனாவிடம் அதிகமாகவே இருந்தது.

சில சமயங்களில் இழப்பது தான் பெரிய ஆதாயமாக இருக்கும். அது ரஞ்சனாவுக்கும் பொருந்தும்.

★ ★ (முற்றும்) ★ ★

## முக அழகை கெடுக்கும் பருக்கள்



முகத்தில் பருக்கள் அதிகமாக இருந்தால் அழகை கெடுக்கும். பருக்களில் ஏற்படும் அரிப்பினால் சொரிந்தால் பருக்கள் உடைந்து ரத்தம் வரும். மருந்து தடவினால் புண் ஆறிவிடும். ஆனால் பருவின் வடுக்கள் கருப்பு நிறமாக முகபொலிவை கெடுக்கும். பரு வந்தவுடன் திருநீற்று பச்சிலையை அரைத்து பருவின் மேல் தடவினால் பருக்கள் மாயமாய் மறைந்துவிடும். மாசி பச்சை என்றும் சொல்வர். இது நல்ல மணம் வீசும்.

-கனக கந்தசாமி, மங்களூர்.



